
Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select




NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆண்டு சித்திரை மீ 23 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 29 (06-05-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 53

# நட்புறவு ஒப்பந்தம் குறித்து
# இந்திய "பேச்சு" எடுக்காது

## ஜனாதிபதி பிரேமாவுடன் பேசிய சிங் திட்டவட்டமாகத் தெரிவித்தார்

கொழும்பு, மே 6

உத்தேச இலங்கை — இந்திய நட்புறவு ஒப்பந்தம் குறித்து தனது பதில் நகலை இந்தியா இப்போதைக்கு இலங்கையிடம் சமர்ப்பிக்க மாட்டாது

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர்---

பேச்சுக்களின் பெறுபேறு எப்படி அமைகிறது என்பதைப் பார்த்தே ---

இந்தியா இது விடயத்தில் மேற்கொண்டு அக்கறை காட்டும்; நடவடிக்கை எடுக்கும்.

இவ்வார ஆரம்பத்தில், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் விசேட தூதுவராக கொழும்பு வந்திருந்த, இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. எஸ். கே. சிங் மேற்கண்ட விடயத்தை மிகத் திட்டவட்டமாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் தெரிவித்தார் என்று அறிய வந்துள்ளது.

திரு. சிங், ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களில் நான்கு முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டன.

அவற்றில் உத்தேச இலங்கை —இந்திய நட்புறவு ஒப்பந்தம் பற்றியதும் ஒன்றாகும்.

உத்தேச ஒப்பந்தம் சம்பந்தமாக நகல் ஒப்பந்தம் ஒன்றை இலங்கை அரசு ஏற்கனவே இந்தியாவிடம் கையளித்து விட்டது.

இதுவிடயத்தில் தான் ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் செயற்படும் என இதுவரை இந்தியா கூறி வந்தது.

முறைப்படி, இலங்கையின் நகலுக்கான, பதில் நகல் ஒன்றை இந்தியா சமர்ப்பிக்க வேண்டும். இந்தியாவின் பதில் நகல் விரைவில் இடைக்கலாம் என்று கொழும்பு அரசாங்க வட்டாரங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தன.

அரசு – விடுதலைப் புலிகள்
[4 ஆம் பக்கம் பார்க்க]

## உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 19 இல்

கொழும்பு, மே 6

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை வருகிற ஆகஸ்ட் 19 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதற்காகப் பாடசாலைகள் ஆகஸ்ட் 18 ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்படும்.

கொழும்பில் கல்வி அமைச்சில் நடந்த மாநாட்டில் அமைச்சர் லொக்கு பண்டார இதனை வெளியிட்டார்.

தொடர் மதிப்பீட்டு முறையும் கைவிடப்பட்டதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

(ஒ-எ)



அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக, புலிகள் இயக்கப் பிரமுகர்கள் வன்னியிலிருந்து கடந்த புதன்கிழமை ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஹெலிக்கொப்டர் கொழும்பில் தரை இறங்கியதும் அதிலிருந்து திருமதி அடேலா பாலசிங்கம், திரு. திலிப் யோகி, டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் வருவதைப் படத்தில் காணலாம். அவர்களுக்கு அருகில் இந்தியப் பத்திரிகையாளரான அனிதாப் பிரதாப்பும் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்களும், இலங்கை அரசின் அதிகாரிகளும் படத்தில் காணப்படுகின்றனர். (நன்றி: டெய்லி நியூஸ்)

## சிலிண்டர் தாக்குதல் 3 பொலீஸார் பலி

பொலன்னறுவை மாவட்டத்தில் பக்க முல்லவுக்கும், ஜயந்திபுரவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று சிலிண்டர் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று பொலீஸார் உயிரிழந்தனர். 6 பொலீஸார் காயமடைந்தனர்.

ரோந்து சென்ற பொலீஸ் ஜீப் மீது சிலிண்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை குருநாகலைப் பகுதியிலும் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார். [ஒ]

## வெலிகமவில் ரயில் புரண்டது

வெலிகமவில் ரயில் பாதைக்கு இனந்தெரியாத நபர்கள் சேதமேற்படுத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் ரயில் ஒன்று தடம் புரண்டதில் எட்டுப் பெட்டிகள் சேதமடைந்தன. [ஒ-எ]

## விடுதலை

மாங்குளம் இந்தியப் படை முகாமில் கடந்த 10 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கற்சிலைமடுவைச் சேர்ந்த வே. ரவீந்திரன் என்பவர் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

[ஒ-113]

## இன்று இறுதிச் சடங்கு

காலஞ்சென்ற திரு. வை. மு. பஞ்சலிங்கத்தின் தகனக் கிரியைகள் இன்று நடைபெறும்.

இன்று அன்னாரது இல்லத்தில் காலை 8 மணிக்கு சமயக் கிரியைகளும், காலை 10.30 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனக் கிரியைகளும் இடம்பெறும். [அ-9]

## குரும்பசிட்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல்

யாழ்ப்பாணம், மே 6

குரும்பசிட்டிக்கும் - ஏழாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தை அடுத்து இந்தப் பகுதிகளை அமைதிப் படையினர் சுற்றிவளைத்தனர். இந்தப் பகுதிளுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

இப்பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களும் குண்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன, சேத விபரங்களை அறியமுடியவில்லை.

இப்பகுதியில் தாக்குதலுக்குள்ளான சிலர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[ஒ-9]

## ரமழானுக்கு கைதிகள் விடுதலை

கொழும்பு, மே 6

ரமழான் பெருநாளை முன்னிட்டு குறுகிய கால சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் கைதிகளை விடுதலை செய்யும்படி ஜனாதிபதி பிரேமதாஸ நீதி அமைச்சுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

விடுதலை செய்யப்பட இருப்போரில் எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களும் இருப்பர்.

[ஒ-எ]

## கைதான மாணவனை விடுவிக்க பல்கலை மாணவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 6

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செல்வன் ஜெகதீஸ்வரனை விடுதலை செய்யுமாறு யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் சங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி இராணுவ முகாமில் இந்த மாணவன் விரிவுரையாளர் ஒருவரால் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் மீதான விசாரணை முடிந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென் மாகாணம் முழுவதும் நேற்று பூரண ஹர்த்தால்

## ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்ச்சியில் 100 பேர் பொலீஸ் வாகனம் மீது சூடு; பஸ் எரிப்பு

கொழும்பு, மே. 6

தென் மாகாணத்தில், மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நேற்று ஹர்த்தால் நடைபெற்றது.

ஜே. வி. பி. இயக்கத்தினர் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

மூன்று மாவட்டங்களும் நேற்று முற்றாக ஸ்தம்பித்திருந்தன.

ஹர்த்தாலையொட்டி வன்செயல்களும் இடம்பெற்றன. மாத்தறையில் நிலக் கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் ஒரு பொலீஸ்காரர் கொலையுண்டார்.

அதே மாவட்டத்தில் வேறு ஐவரின் சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன.

வெலிகமவில் அரசாங்க பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிக்கச் சென்ற பொலீஸ் ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. பொலீஸார் திருப்பிச் சுட்டதில் ஒருவர் கொலையுண்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள இத்தரகம என்ற கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அங்குள்ள பராக்கிரம விகாரையின் பிரதம குருவுக்கு பாராட்டு வைபவம் ஒன்று நடந்தது.

ஜனாதிபதி கலந்து கொண்ட அந்த வைபவத்தில், ஹர்த்தால் காரணமாகச் சுமார் நூறு பேர் வரையிலேயே கலந்து கொண்டனர்.

## நீர்வேலியில் நேற்று அரச பஸ் தீக்கிரை!

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று தீக்கிரையானது.

பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பிரஸ்தாப பஸ் நீர்வேலி கந்தசாமி கோவிலடியில் வைத்தே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த பஸ், காலை சுமார் 9-15 மணியளவில், இளைஞர் கோஷ்டி ஒன்றினால் வழிமறிக்கப்பட்டது. பயணிகள் அனைவரும் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்ட பின்னர் அதற்குப் பெற்றோல் ஊற்றி தீயிடப்பட்டது.

மாநகர சபை தீயணைக்கும் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். ஆயினும் பஸ் பலத்த சேதத்திற்குள்ளானது.

இந்த பஸ் இந்திய அரசினால் அன்மையில் வழங்கப்பட்ட பஸ்களில் ஒன்றாகும்.

(ஒ-9-72-13)

### சுபநேரம்

சித்திரை — 23

சுபநேரம்;
02.56 முதல் 04.26 வரை
ராகுகாலம்;
08.56 முதல் 10.26 வரை
கார்த்திகை விரதம்

## அரசு - விடுதலைப் புலிகள் நேற்றும் பேச்சுவார்த்தை

கொழும்பு, மே 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் இலங்கை அரசு அதிகாரிகளும் நேற்றும் ஆரம்ப பேச்சுக்களை நடத்தினர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் நேற்றைய பேச்சுக்களின் போது எடுத்துக் கூறினர்.

இப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்தார்கள்.

மேலும் ஆராயப்பட வேண்டிய குறிப்பிட்ட விஷயங்களை அவர்கள் இனங்கண்டார்கள்.

தம்மால் விடுக்கப்படும் உத்தியோகபூர்வ அறிக்கைகளில் தெரிவிக்கப்படும் விஷயங்களுக்கு மாத்திரமே தாங்கள் பொறுப்பாளிகள் என்று இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

எனவே இத்தகைய உத்தியோகபூர்வ அறிக்கைகளை மாத்திரமே கருத்திற்கொள்ளுமாறு பொதுமக்களும் வெகுஜனத் தொடர்புத் துறையினரும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-எ)

### பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், மே 6

பருத்தித்துறைப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

அண்மையில் நடந்த அசம்பாவிதங்களை அடுத்து இங்கு நடமாட அனேகமான மக்கள் அச்சம் அடைந்து காணப்படுகின்றனர்.

எனினும் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றன.

இதேவேளை பருத்தித்துறைப் பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

[அ-160-9]

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

மணமகன்: செல்வன் பஞ்சலிங்கம்
மணமகள்: செல்வி ரஞ்சினி

காலம்: 7-5-1989 ஞாயிற்றுக்கிழமை
காலை 7.00 மணி தொடக்கம் 8.15 வரை

இடம்: நீர்வேலி ஸ்ரீ கந்தசாமி கோயில் மண்டபம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி
செ. தம்பிராசா
'பிருந்தாவனம்'
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

திரு. திருமதி
நா. சிதம்பரநாதர்
'அழகாபுரி'
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[10842]

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள புதிய மொடல் MD 90 (சிவப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முருகன்ஸ்ரோர்ஸ் ஆடியபாதம் வீதி, கொக்குவில். (364)

வவுனியாவில் பத்தினியார் மகிளங்குளத்தில் (யாழ்ப்பாணம் - கண்டி வீதியின் அருகாமையில்) 6½ ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு உண்டு. [இது வவுனியா நகரிலிருந்து 1 Km தூரத்தில் உள்ளது.) விபரங்களிற்கு இருஷ்ணசாமி ஓவசியர் 'கிருஷ்ணு இல்லம்' பத்தினியார் மகிளங்குளம் வவுனியா. அல்லது 36 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (362)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடை விறுக்கைகள், Singer தையல் மெஷின், T.V, Fan, Cot, T.V Stand, Bicycle மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை றோட். அரசடி, நல்லூர். (10805)

Honda Reconditional புதிய, பழைய Model C 90, C 70, C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. 390, மெயின் வீதி, சுண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். [10826]

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சியில் 8ம் வாய்க்காலில் 6 ஏக்கர் இரண்டு போகக் காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: 7/4 மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம். [367]

கச்சேரிக்கு அருகாமையில் கண்டி வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு; திருமதி க. மகாதேவா, 80, புங்கங்குளம்வீதி, யாழ்ப்பாணம். (10830)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

[DEKALB பிறவுண் சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3-50 சிறு அட்வான்ஸ் கட்டி பதிவு செய்யலாம் இல.9, கந்தையா லேன் சுன்னுகம். (புகையிரத நிலயத்துக்கு அண்மையில்) (10820]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் 19ஆம்திகதி செவ்வாயும், Golden Comet பிறவுண் பேடு சேவற் குஞ்சுகள் 10ஆம் திகதி புதனும், Hybro புரொயிலர் குஞ்சுகள் Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், 11ஆம்திகதி வியாழனும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (371)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர்க் குஞ்சுகள் [9- 5- 89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியேபதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னுகம். (புகையிரத நிலயத்துக்கு அண்மையில்) [10775]

பிறவுண் சேவற்குஞ்சுகள் 100க்கு மேல் விலை 3/50, 250க்கு மேல் விலை 3/00, முழுப் பணமும் முன்கூட்டியே செலுத்தி பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். [350]

### FOR SALE

Pyramid, V. G. P. Thomsun, Esquir, Original Video கசட்டுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விலியா வீடியோ கிளப், நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. [363]

### போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும், விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு நாடுவோர்; மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ் நிலயம், யாழ்ப்பாணம். [சி/2192]

### தேவை

பெண் உதவியாளர் தேவை. தட்டச்சு வேலை தெரிந்தவர் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும். சிவா (படப்பிடிப்பாளர் பகவான் ஸ்ருடியோ) 95, யாழ் வீதி, மானிப்பாய். (366)

### மணமகன் தேவை

இந்து வேளாள உயர்குலத்தில் பிறந்த இருபத்தெட்டு வயது நிரம்பிய விஞ்ஞான ஆசிரியைக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகிறார்கள். சீதனம் வீடு வளவுடன் மற்றும் பேசித்தீர்க்கலாம். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: 506 C/o உதயன், யாழ்ப்பாணம். [361]

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் உயர்குல திருமணமாகாத கன்னிப் பெண் வயது 35 B. A, Dip- in Ed. ஆசிரியைக்கு தகுந்த வரன் தேவை. சாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 507, C/o, உதயன். (368)

### மணமக்கள் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள ஆசிரியருக்கு செவ்வாய்க் குற்றங் கூடிய பட்டதாரி மணப்பெண்ணும் செவ்வாய்க் குற்றமுள்ள பொற்கொல்லர் மணமகனுக்கு 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட மணப்பெண்ணும் வேளாள பட்டதாரி ஆசிரியைக்கு 38 வயதுக்கு மேற்பட்ட மணமகனும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (1083)

### மணமகள் தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் வேளாள குலத்தைச் சேர்ந்த இந்துமத லக்கினத்தில் செவ்வாய் குற்றமுள்ள நடுத்தர வயதுள்ளவருக்கு 35 வயதுக்கு குறைந்த படித்த மணமகள் தேவை குடும்ப விபரங்களுடன் சாதகக் குறிப்புடனும் விண்ணப்பிக்கவும். 501, C/o, உதயன் யாழ்ப்பாணம். (312)

### ஆள் தேவை

நெல் குத்துதல், மிளகாய், மாவு அரைக்கும் மில்லுக்கு உடனே ஆள் தேவை. நேரில் வரவும். A. சிவபாதம், இருபாலைச்சந்தி, கோப்பாய். (10812)

### A /L 91 இரசாயனம்

108, Brown Road, A/L 91 அடிப்படை இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ், பிரிவு II ஆரம்பம்: 6- 05- 89, சனி 11. 00 a. m. ஞாயிறு11 a.m. (370)

### கிறிஸ்தவ சைவசமய திருமண சேவை

எம்மிடம் இரு மதத்தையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும் உண்டு. தங்கள் அன்புப் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் அவர்களின் எதிர்காலத்தை சீரும் சிறப்புடனும் அமைக்க எம்மை நாடுங்கள். அமைப்பாளர்: திரு. வின்ரோ மகேந்திரா, தொடர்பு; No. 6, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம், (மக்கள் வங்கிக்கருகாமை)No. 17,கோவில் வீதி, யாழ்ப்பாணம்.(352)

### வேண்டுகோள்

எமது ஸ்தாபனத்தில் மின் உபகரணங்களைத் திருத்துவதற்கு தந்தவர்கள் தயவு செய்து உடனடியாக பற்றுச் சீட்டுடன் வந்து எடுக்கும்படி வேண்டுகிறோம். தொடர்பு: S. V. N. Electronic [workshop]. 116, P. W. D. Road, Mullaitivu. (355)

### தவறிவிட்டது

பேணடெற் சசிக்கலா மொறுயஸ் 158/1 பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமுடைய எனது அடையாள அட்டை இல: 705820740 V 4ஆம் குறுக்குத் தெருவுக்கும் ஸ்ரேசனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [369]

### வாடகைக்கு

எங்களுடைய மேல்மாடியில் காரியாலயம், களஞ்சியம் போன்ற பாவனைக்கு சகல வசதிகள் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. காலை 9 மணி முதல் 11 மணிவரை விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் (Pvt) Ltd. முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [365]

### வகுப்புகள்

Building Construction/ Site Supervisors/ Quantity Surveying இருமாத துரித வகுப்புகள் 15-05-1989 ஆரம்பம். தொடர்பு கொள்ளுங்கள்: Civil Engineering Technological Services 53, A. V. Road, Colombuthurai, Jaffna. (10836)

### Individual Classes

Maths, Science, Pure and Applied maths for O/L, and A/L Classes, by experienced Teacher Home visited apply No. 56, C/o Uthayan Jaffna. (10827)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை,யாழ்ப்பாணம். [சி/2433]

## யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் - வரையுள்ளது

# பதவி வெற்றிடங்கள்

(1) கணக்காளர்
(2) உதவிக் காசாளர்
(3) கிளை முகாமையாளர் / பண்டகசாலை முகாமையாளர்
(4) அச்சுக்கோர்ப்பாளர்

மேற்காண் பதவி வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு, தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு 20- 05- 89ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விண்ணப்பிக்கும் பதவி'' பற்றித் தடித்த எழுத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**1. பதவி — கணக்காளர்**

104. 10 கூ. வே. ஆணைக்குழு சு. நி. இல. 165/88 - 104. 8 (102/80)

**சம்பள அளவுத் திட்டம்** — $\frac{1005 — 1705}{40\ 5 — 50\ 10}$ அத்துடன் கூ. வே. ஆணைக் குழுவினல் சிபார்சு செய்யப்பட்ட விசேட படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

**வயதெல்லை** — 23 - 50 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது)

**வசிப்பிடத் தகைமைகள்** — குறைந்தது 02 வருடமாவது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**பிணைப்பணம்** — (அ) ரொக்கம் ரூபா 5000/- பதவி கிடைத்தவுடன் பிணைப் பணமாகக் கட்டப்பட வேண்டும்.
இதற்கு மேலதிகமாக,
(ஆ) உறுதி ரூபா 10000/- ஆதனப் பிணை உறுதி மூலம் செலுத்தப்படல் வேண்டும்.
(இ) மேலதிக பிணை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால், சங்கத்தினல் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள்-**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தின் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின், கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வுத் துறையிலான மேற்பார்வை மட்டப் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்காய்வுத் துறையிலான மேற்பார்வை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. உயர் தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / எண்பார்வை மேற்பார்வை மட்டத் துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

**2. பதவி — உதவிக் காசாளர்**

**சம்பள அளவுத் திட்டம்** — $\frac{730 — 1055}{20\ 10 — 25\ 5}$ அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவினல் சிபார்சு செய்யப்பட்ட விசேட படிகளும் சேர்த்துவழங்கப்படும்.

**வயதெல்லை** — 23 - 50 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது)

**வசிப்பிடத் தகைமைகள்** — குறைந்தது 02 வருடமாவது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**பிணைப்பணம்** — ரொக்கம் ரூபா 5000/- பதவி கிடைத்து ஒரு மாதத்திற்குள் பிணைப்பணமாகக் கட்டப்பட வேண்டும்.
இதற்கு மேலதிகமாக,
உறுதி ரூபா 10000/- ஆதனப் பிணை உறுதி மூலம் செலுத்தப்படல் வேண்டும்.
மேலதிக பிணை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால் சங்கத்தினல் கேட்கப்படும் இடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது (பழைய) சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் [சாதாரண தரம்] பத்திரம் / க. பொ. த. [சாதாரண தரத்தில்] 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம், சிங்கள / தமிழ் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும், காசாளராக / வியாபார நடவடிக்கைகளில் 01 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**3. பதவி — கிளை முகாமையாளர் / பண்டகசாலை முகாமையாளர்**
[ஆண் பாலார் மட்டும்]

**சம்பள அளவுத் திட்டம்:—** $\frac{700 — 950}{15\ 10 - 20\ 5}$ அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவினல் சிபார்சுசெய்யப்பட்ட விசேட படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

**வயது எல்லை:--** 23 — 50 [சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.]

**வசிப்பிடத் தகைமைகள்:--** குறைந்தது 02 வருடமாவது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**பிணைப்பணம்:-** [அ] ரொக்கம் ரூபா 5000/- பதவி கிடைத்தவுடன் பிணைப் பணமாக கட்டப்படவேண்டும்.
இதற்கு மேலதிகமாக,
[ஆ] உறுதி ரூபா 10000/- ஆதனப் பிணை உறுதி மூலம் செலுத்தப்படல் வேண்டும்.
மேலதிக பிணை கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சங்கத்தினல் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள் -**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது (102 / 80) சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் / க. பொ. த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம், சிங்கள / தமிழ் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

**4. பதவி — அச்சுக்கோர்ப்பாளர்**

**சம்பள அளவுத் திட்டம்:-** ரூபா 1025/- (எல்லாப் படிகளும் உட்பட சம்பள நிர்ணய சபைக்குட்பட்டதாகும்)

**வயது எல்லை:-** 23—50 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது)

**வசிப்பிடத் தகைமைகள்:-** குறைந்தது 02 வருடமாவது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**பிணைப்பணம்:-** ரொக்கம் ரூபா 1000/- பதவி கிடைத்தவுடன் பிணைப்பணமாகக் கட்டப்பட வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள்-**

(அ) தேசிய தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் அச்சு எழுத்துக் கோர்ப்பாளராகத் தொழிற் பயிற்சி பெற்ற சான்றிதழ்.

அல்லது

(ஆ) அரச / கூட்டுத்தாபனம் / அல்லது தனியார் அச்சுக் கூடத்தில் சம்பள நிர்ணய சபையின் ''இ'' வகுப்பு அச்சுக்கோர்ப்பாளராக இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**குறிப்பு:-**

1. விண்ணப்பங்கள் யாவும், எமது காரியாலயத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் மாத்திரம் நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.
2. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
3. கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும், வசிப்பிடத் தகைமை, பிறப்புச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப் படுத்தும் கடிதமும், நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும், குறிப்பிட்டபடி நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**- பொது முகாமையாளர்.**

யாழ். பல நோ. கூ. சங்கம் - வரையுள்ளது,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
03 - 05 - 1989

(C/2501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★



### வன்னியசிங்கம் பிரியா

15/16, நடுத்தெரு லேன், அரியாலையில் வசிக்கும் வன்னியசிங்கம் தேவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தன் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடு கிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பா, பெரியம்மா, அண்ணா அக்கா, மாமா, மாமிமார், மச்சான்மார், மச்சான்மார் யாபேரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் விநாயகர் கிருபையுடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

[10833]

---

மனைப்பொருளியல் சேவைக் காலப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 6

பருத்தித்துறை, உடுப்பிட்டி வட்டார மனைப் பொருளியல் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சகல மனைப்பொருளியல் ஆசிரியர்களையும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறும் அன்றையதினம் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் ஆசிரிய ஆலோசகர் திருமதி த. யேசுதாசன் அறிவிக்கின்றார். (ச)

---


## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

'அறிவொளி'
கல்வி வெளியீடு

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது. கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி,
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த. பெ. இல. 162.
கொழும்பு.

(308)


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கந்தசாமித்துரை சிவகுமார்

ஜனனம் : 03.08-1957 மரணம் : 17-04.1988

07.05.1989 ஞாயிறன்று நடைபெறும் முதலாம் ஆண்டுத் திதியில் கலந்துகொள்ளுமாறு உற்றாரையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.


வே. கந்தசாமித்துரை
குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

தும்பளை,
பருத்தித்துறை.


[ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ] (426)

---


## சிக்மா பம்ப்ஸ்



## CEYGMA PUMPS



உங்கள் தேவைகளுக்கேற்ற

மின் மோட்டர்கள்
ELECTRIC MOTOR PUMPS

| | | |
|---|---|---|
| ½ HP | 1" × 1" | 3400. 00 |
| ½ HP | 1½" × 1½" | 3800 00 |
| ¾ HP | 1½" × 1½" | 4450. 00 |
| 1 HP | 1½" × 1½" | 4750. 00 |
| 1½ HP | 2" × 2" | 5950. 00 |

- நீர் இறைக்கும் இயந்திரங்கள் Engine Driven Pumps
- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது Indian Villiers MK 12 - 7950. 00
- குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது Kubota KS 160 - 9300. 00

இப்பொழுது கையிருப்பில் உண்டு. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் (Guarantee) உண்டு. பழுதடைந்த பம்புகள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

## UNITED AGRO ENGINEERING

274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி. [சி/2400]


---

## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. தம்பிமுத்து ஆனந்தவேல்

திதி: 6 - 5 - 89

மண்ணில் நீ வாழ்வதற்கு மருத்துவங்கள் பல செய்தோம்.
அண்ணல் நீ மறைந்துபோய் ஆண்டொன்று ஆகவில்லை.
எண்ணம் உனதாக எண்ணி எண்ணி ஏங்கி நின்றோம்.
கண்ணீரால் முகம் கழுவ காலனுனை அழைத்தானே.

வண்மை பெற ஞாலம் வாழ்ந்து வளம்பெற்ற வள்ளல் நீயே!
உண்மை பெறச் சுற்றத்தார் உளம் கனிய வாழ்ந்த மன்னா!
திண்மையுடன் இருந்தோமை திகைக்க வைத்து நீயகன்றாய்.
புண்ணியனே! நின் ஆன்மா சாந்தி பெறப் போற்றுவோமே!

அன்னாரின் குடும்பத்தினர்.

நீர்வேலி தெற்கு.

(422)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகமணி புவிராஜசிங்கம்

தோற்றம்: 18 - 02 - 1918 மறைவு: 06 - 05 - 1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தம்பாலை,
அச்சுவேலி.

[432]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### திருமதி தங்கேஸ்வரி முத்தையா

தோற்றம்: 30- 8- 1928 மறைவு: 06- 04- 1989

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காக இருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகிலே ஒளிபெறச் செய்து எம்மை எல்லாம் நீங்காது துன்பக்கடலில் ஆழ்த்தி விட்டுச் சென்ற எமது குடும்பச் சுடரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

09- 04- 1989 மரணச் சடங்கில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 06- 05- 1989சனிக்கிழமை காலை நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வளர்மதி,
ரெயில் றோட்,
கொக்குவில்.

[10806]

---

## மூன்றுவது ஆண்டு நினைவஞ்சலி



### தலைவர் சிறீசபாரத்தினம் அவர்கள்

என்னிடம் நல்ல எண்ணங்களும், தூய உள்ளமும் இருக்கும் வரை நான் [illegible] வாழ விரும்புகின்றேன். இல்லையென்றால் நான் சாவதையே விரும்புகின்றேன்.

விதி தீர்க்கும் சமர்
மக்கள் மீதாற்ற காதல்
மரணம் மரணிக்க
வரலாறு இங்கு
குருதியில் எழுதப்படுகின்றது.

படுகொலையுண்ட எம் தலைவர் சிறீசபாரத்தினத்திற்கும், ஏனைய 200 க்கும் மேற்பட்ட போராளிகளுக்கும் தம்பிமாரின் அஞ்சலி.

[10829] [illegible] மாவட்டமக்கள்

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. த தங்கராஜா

தோற்றம்: 03 - 03 - 1949 மறைவு: 16 04 - 1988

திதி: அமாவாசை 06 05 - 1989

அன்பின் திருவுருவே அறிவின் பிறப்பிடமே பண்பின் உறைவிடமே பாசத்தின் சிகரமே எம் அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் திருவுருவம் எம்மை விட்டு நீங்கவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி : திருமதி த. இராசேஸ்வரி,
பிள்ளைகள்: திருவரங்கன், தாட்சாயினி,
தாய், சகோதரர்கள், சகோதரி,
மாமா, மாமி, மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

அலைகல்லுப்போட்டகுளம்,
ஓமந்தை.

(428)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "உலழைத்து உண்"

"ராஜாக்களிடம் லட்சுமி இருப்பதில்லை. பாங்குகளிலும் அவள் இருப்பதில்லை. வியாபாரிகளிடமும் அவளைக் காண முடியாது. கடை வீதியிலும் அவளைக் காணமுடியாது. வயலில்தான் லட்சுமி இருப்பாள். உழைப்பவர்களிடம்தான் அவளைக்காண முடியும். லட்சுமி சிரம தேவதை. ஆகவே, அவள் உழைப்பவர்களின் மத்தியிலேயே இருப்பாள்."

—விநோபாஜி

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைசளை அனுப்பி "நல்வழி" என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



# சஞ்சீவி

06 - 05 - 1989 சனிக்கிழமை



### "உலகப் பொது நெறி"

11.5.89 அன்று கவியோகி சுத்தானந்தபாரதியார் பிறந்த தினமாகும்.

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைசளை அனுப்பி கவியோகி சுத்தானந்த பாரதியார் அருளிய "உலகப் பொது நெறி" என்ற சிறந்த நூலைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

- "மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.


## வங்கி ஊழியர் பரீட்சை வேம்படியில்

யாழ்ப்பாணம், மே 6

வங்கி ஊழியர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சைகள் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று 6 ஆம் திகதியும் 13 ஆம் 14 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார். [க]

## கிறிஸ்தவ கலை விழா

யாழ்ப்பாணம், மே 6

வண்ணார்பண்ணை மெதடிஸ்த திருச்சபையின் "வாழ்வின் மலர்கள்" கிறிஸ்தவக் கலை விழா இன்று சனிக்கிழமை மாலை 3 00 மணிக்கு யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். புனர்வாழ்வு நிதிக்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. (இ)

## நோன்புப் பெருநாள் நிர்ணய மாநாடு இன்று கொழும்பில்

கொழும்பு, மே 6

நோன்புப் பெருநாளை நிர்ணயிப்பதற்கான மாநாடு இன்று சனிக்கிழமை மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மாலை மஃரிப் தொழுகையின் பின்னர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது [ஒ-எ]

## கொக்குவிலில் கோமாரி தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 6

கொக்குவில் பகுதியில் இன்று சனிக்கிழமை கோமாரி நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் வேலைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 7 மணி முதல் 8-30 மணிவரை கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் கருவேலடி ஒழுங்கை கொக்குவில் சம்பியன் லேன் ஆகிய இடங்களிலும்–

காலை 9-30 மணிமுதல் 9-30 மணிவரை நந்தாவில் அம்மன் வீதி, பொற்பதி ரோட் (தபால்பெட்டியடி) கொக்குவில் நாமகள் பாடசாலை வீதி, கொக்குவில் காளி கோவில் ஆகிய பகுதிகளிலும் தடுப்பூசி போடப்படும். [ச]

# விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள்

## கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டது எப்படி?

கொழும்பு, மே 6

முதற் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் எப்படி அழைத்து வரப்பட்டனர்?

அது பற்றிய விவரம் வருமாறு:–

புதன் பிற்பகல் 1-45 மணியளவில் கொழும்பில் உள்ள இராணுவ தளத்துக்கு உள்ளூர்ப் பத்திரிகையாளர் அழைத்து வரப்பட்டனர்.

ஐந்து நிமிடங்கள் கழித்து விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் பாலசிங்கமும் அவரது மனைவியும் அங்கு வந்து சேர்ந்தனர்.

பிற்பகல் 1 55 மணியளவில் திரு. பாலசிங்கம் தம்பதியினரையும் பத்திரிகையாளரையும் ஏற்றிக்கொண்டு 'பெல் 212' ஹெலிக்கொப்டர் இராணுவத் தளத்தில் இருந்து புறப்பட்டது.

இன்னொரு ஹெலிக்கொப்டர் பயணிகள் இன்றி பின் தொடர்ந்தது.

எங்கே ஹெலிக்கொப்டர் செல்கிறது என்பது தெரிவிக்கப்படவில்லை.

சுமார் ஒன்றரை மணி நேரம் பயண முடிவில் டாக்டர் பாலசிங்கத்தின் மனைவி பொலித்தீன் பையில் இருந்து "வாக்கி டோக்கி' ஒன்றை எடுத்தார்.

'ஹெலி' பறந்து சென்று கொண்டிருந்தபோதே டாக்டர் பாலசிங்கம் வாக்கி டோக்கி மூலம் பேசினார்.

### காட்டின் நடுவே வெள்ளைச் சிலுவை

அப்போது முல்லைத்தீவுக் காட்டுப் பகுதி மேலாக 1,700 அடி உயரத்தில் ஹெலி பறந்து கொண்டிருந்தது.

சுற்றி வர அடர்ந்த காட்டின் நடுவே வெளி ஒன்று தெரிந்தது. அங்கே நிலத்தில் வெள்ளை நிறத்திலான சிலுவை அடையாளம் தென்பட்டது. அந்தச் சிலுவை அடையாளத்தை மையமாக வைத்து பத்திரிகையாளருடன் சென்ற ஹெலி மெதுவாகத் தரை இறங்கியது. அந்தக் காட்டுப் பகுதி குளவிசுட்டான் பிரதேசம் எனத் தெரியவந்தது. தரையில் ஆயுதம் தரித்த இளைஞர்கள் வெள்ளைக் கொடிகளைத் தாங்கியவண்ணம் கையசைத்தபடி நின்றனர்.

ஹெலி தரையிறங்கியதும் முதலில் டாக்டர் பாலசிங்கம் இறங்கினார்.

அவர் இறங்கியவுடன் "ஏ. கே. 47" துப்பாக்கிகளுடன் சீருடையில் காணப்பட்டவர்கள் நான்கு பேர் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

சிலர் அவரைக் கட்டித் தழுவினர். பத்திரிகையாளரும் ஹெலியில் ருந்து இறங்கிச் சுற்றிப் பார்த்தனர்.

பாலசிங்கத்தின் மெய்ப் பாதுகாவலர்களான இலங்கை அதிகாரிகள் இருவருக்கும் பத்திரிகையாளருக்கும் சொக்லட் பரிமாறப்பட்டது. இளநீரும் கொடுக்கப்பட்டது.

இதற்கிடையில் திரு யோகியும் திரு. மூர்த்தியும் சீருடையில் அந்த இடத்திற்கு வந்தனர். இவர்களுடன் அவர்களது மெய்ப் பாதுகாவலர்களும் "ஏ. கே. 47" துப்பாக்கிகளுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் டெலிவிஷன் குழுவும் வந்து சேர்ந்தது.

மாலை 5 மணியளவில் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் கொழும்பு திரும்பின.

லோரன்ஸ், லலித், தாஸ், டச்கி, உதயன், கீர்த்தி' யூத் ஆகியோர் ஹெலி'யில் வந்த ஏனைய விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் ஆவர் (அ-எ)

## சயனைட் வில்லைகளுடன் கொழும்பில் புலிகள்!

கொழும்பு, மே 6

கொழும்பு சென்றுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் அனைவரும் சயனைட் வில்லைகளை வைத்திருக்கின்றனர்.

இது பற்றி கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் திரு. யோகியிடம் கேட்டார்.

பேச்சுக்கள் நடத்த வந்திருக்கும் இந்த வேளையிலும் சயனைட்வில்லைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?

இக் கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. யோகி, "ஆம். எங்கள் உயிர் உடலை விட்டுப் பிரியும் வரை சயனைட் வில்லை எங்கள் உடம்பை ஒட்டிக் கொண்டிருக்கும்" என்று பதிலளித்தார். (ஒ-எ)

## புறக்கோட்டையில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 6

கடந்த புதன்கிழமை இரவு கொழும்பு புறக்கோட்டையில் இனந்தெரியாதோர் சூட்டில் இரண்டு தமிழ் இளைஞர்கள் காயமடைந்தனர்.

அவர்களில் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். அவர் வடபகுதி வாலிபர் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த மற்றவர் கிராண்ட்பாஸ் வாசி எனத் தெரிய வருகிறது.

இது பற்றிய விவரமாவது;

கதிரேசன் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மதிலில் இருந்து குதித்த இருவர் வீதியில் சென்றுகொண்டிருந்த இரண்டு தமிழர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (ஒ-எ)

## ஓய்வுபெற்ற ஆசிரியர் சுட்டுக்கொலை

வல்வெட்டித்துறை, மே 6

பொலிகண்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடிக்குச் சமீபமாக இவரது சடலம் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

எஸ். மாணிக்கம் (வயது 65) என்பவரே கொலையுண்டவராவர். (ஓ-160)

### விசாரணை

கொழும்பு, மே 6

கடந்த வாரம் இடம்பெற்ற பனுகொட இராணுவ முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக இரகசியப் பொலீஸாரும் இராணுவத்தினரும் தனித் தனியாக விசாரணைகளை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் தீவிரவாதிகள் உதவியுடன் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றுபொலீஸார் நம்புகின்றனர். (ஓ-எ)

## காத்தான்குடியில் பொலீஸ் நிலையம்

மட்டக்களப்பு, மே 6

காத்தான்குடியில் புதிய பொலீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார். (ஒ-21)

## வேம்படியில் இந்துசமயப் போட்டி

யாழ்ப்பாணம், மே 06

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி, சமய வினாவிடை, எழுத்துப் பரீட்சை, சமயக் கட்டுரைப் போட்டி, பண்ணிசைப் போட்டி, கதாப் பிரசங்கம், யோகாசனம் ஆகிய போட்டிகள் இன்றும் நாளையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இம் மாதக் கடைசி வாரத்தில் இந்து இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது. (ச)

## வெசாக்கை முன்னிட்டு கால்நடை வெட்டத் தடை

கொழும்பு, மே 6

வருகிற வெசாக் வாரத்தின் போது இறைச்சிக்காகக் கால்நடைகள் வெட்டப்படுவதும் விற்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை வெசாக் வாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இது சம்பந்தமான உத்தரவு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### தொற்று வியாதிகள்

சுன்னாகம், மே 6

அதிகரித்த வெப்ப நிலை காரணமாக வடக்கின் பல பகுதிகளிலும் கூகைக் கட்டு, செங்கண்மாரி, பொக்குளிப்பான் போன்ற தொற்று வியாதிகள் வேகமாகப் பரவி வருகின்றன. [க-27]

## குருமண்வெளியில் இரு இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, மே 6

ஒரு வீட்டில் இரவு உணவு அருந்திக் கொண்டிருந்த அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் அண்மையில் குருமண்வெளி கிராமத்தில் இடம்பெற்றது.

இறந்த வாலிபர்கள் அ. இராமலிங்கம் (22) ஏ. சத்தியசீலன் (30) எனத் தெரிவிக்கப் படுகிறது. [ஒ-21]

## சாவகச்சேரிப் பகுதி பஸ் சேவை தடைப்பட்டது

வியாழக்கிழமை இரவு ஏழு மணியளவில் சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து நகர்ப் பகுதியில் உள்ள முகாம்களிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று இப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தேடுதலை அடுத்து பகல் 12 மணிக்கு பின்னர் சாவகச்சேரிக்கும் கைதடிக்கும் இடைப்பட்ட பகுதியால் போக்குவரத்துச் செய்வது தடைப்பட்டது.

இதனால் யாழ் நகரிலிருந்து தமது அலுவலகங்களில் முடிந்து வீடு செல்ல முடியாத நிலையில் பலர் நேற்று யாழ் பஸ் நிலையத்தில் காத்திருந்தனர்.

பின்னர் ஒரு சில பஸ்கள் மட்டும் மாற்றுப் பாதையூடாக பயணம் மேற்கொண்டன.

இதேவேளை வெளியிடங்களுக்கான பஸ்கள் அனைத்தும் சாவகச்சேரியில் தரித்து நின்ற பின் மாலை 6.30 மணியின் பின் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது. (அ-117-9)

### இன்று

யாழ்ப்பாணம் மே 6

கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் உள்ள கந்தர்மடம் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (ச)

## 'மெல்ல மெல்லவே பிரச்சினைகளை அணுகுவோம்'

கொழும்பு, மே 6

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரசு அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுக்கள் மெல்ல மெல்ல பிரச்சினைகளை அணுகும்.

இப்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார் என்று ஏ ஜ ன் சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இப்பேச்சுக்களின் விளைவாக முழுமையான முடிவுகள் தெரிவதற்கு நாட்கள் பலவாகும் என்றும் திரு. விஜேரத்தின தெரிவித்தார். (அ-எ)

### லொறி தீக்கிரை

கொழும்பு, மே 6

கொழும்பில் இருந்து வாழைச்சேனை சென்று கொண்டிருந்த லொறி ஒன்று ஜயந்திபுர என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் தீக்கிரையாக்கப்பட்டது. [ஒ-எ]

### சுற்றிவளைப்பு

பச்சிலைப்பள்ளி மே 6

நேற்று முன் தினம் காலை புலோப்பளையில் நடைபெற்ற சம்பவத்தை அடுத்துஅப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இச் சுற்றிவளைப்பின்போது ஆண்களும், பெண்களும் பளை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

காயமடைந்த பலர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். [ஓ-117]

## நட்புறவு ஒப்பந்த . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சு, இந்தியத் தரப்பில் ஒரு தொய்வு நிலையை ஏற்படுத்தி இருப்பதாகவும், அதனாலேயே பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளைத் தெரிந்து கொண்டே, நட்புறவுஒப்பந்த விடயத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அது முடிவு செய்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திரு. சிங். ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்திய ஏனைய மூன்று முக்கிய அம்சங்களும் வருமாறு:-

★ மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை தக்கபடி பகிர்ந்தளித்தல் வேண்டும்.

★ இந்திய அமைதிப் படையைத் திரும்ப அழைத்தல்.

★ இலங்கை அரசு – விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு உட்பட்டதாக நடக்க வேண்டும்.

### புலிகள் அதிருப்தி

இதேவேளை அரசு – புலிகள் பேச்சுவார்த்தை பற்றிய பெறுபேற்று விவரங்களை இந்திய அரசுக்குத்தெரியப்படுத்த இருப்பதாக வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்திருந்தது குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் அதிருப்தி நிலவுகிறது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த விசேட செய்தியில், பேச்சுக்கள் குறித்து தகவல்களைத்தெரிந்துகொள்ள விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். (அ)

## 3ஆவது நினைவஞ்சலி



### திரு. அரியகுட்டி சற்குணம் (தம்பி)

மலர்வு: 15-02-1940

உதிர்வு: 06-05-1986

இவரது ஆத்மா சாந்தியடைவதற்கு யாழ். அடைக்கல மாதா தேவாலயத்தில் 5ஆம் திகதி பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவரது பிரிவால் வாடும்:

தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் நண்பர்கள்.

உரும்பராய் தெற்கு.
உரும்பராய். [218]

## மரண அறிவித்தல்கள்

### திரு. கந்தையா செல்லத்துரை

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புளியங்கூடலில் வசித்தவருமான கந்தையா செல்லத்துரை அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், மனோகரன் [மாலா ஸ்ரோர்ஸ், கொழும்பு], மனோகரராணி, மகேந்திரன், மகேந்திரராசா, திலகவதி, மதியழகி, காந்தி, இலங்கைவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகிளி, விசாகலெட்சுமி, லலிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-05-1989 – பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சுருவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: S. மனோகரன்

புளியங்கூடல். [436]

### சிவகுரு அன்னலட்சுமி

சிவகுரு அன்னலட்சுமி காலமானார். இவர் சிவகுருவின் அன்பு மனைவியும், கனகநாயகி, விசாகேசன், பாலச்சந்திரன், ஜெயராசா (கனடா), பரமநாயகி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற தர்மலிங்கம், காலம்சென்ற கண்மணி, காலம் சென்ற இரத்தினம், பொன்னம்மா, காலம் சென்ற கந்தசாமி, இராசரெத்தினம், ஆகியோரின் சகோதரியும், யோகராசா, சரோஜினிதேவி, கமலாதேவி, ஆகியோரின் மாமியாரும், அனுஜா, விநோதன், தர்சினி, சுதர்சினி, சுஜந்தன், கனுசியா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-5-89 (சனிக்கிழமை) இன்று நண்பகல் 12. 30 மணிக்கு சங்கானை ரோட், தென்மூலை, அச்சுவேலியில் நடைபெறும்.

தகவல்: வி. சிவகுரு

தென் மூலை,
அச்சுவேலி. (439)

### திரு. ஆறுமுகம் கந்தையா

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த [illegible] ஆறுமுகம் கந்தையா அவர்கள் [முன்னாள் [illegible]] கந்தானை. 3-5-89 புதன்கிழமை காரைநகரில் சிவபதமெய்தினார். அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும், தியாகலிங்கம் [லண்டன்], தருமராசா [அமெரிக்கா], கனகராசா (கனடா), மனோரஞ்சன (யாழ் போதனா வைத்தியசாலை), பஞ்சலிங்கம்(கனடா), ஆகியோரின் அன்புத்தந்தையும். அமிர்தநாயகி [லண்டன்), காஞ்சனா (கனடா), கனகசபாபதி [உதவி அரசாங்க அதிபர் பணிமனை சங்கானை), ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷந்தி, வர்சினி, சத்திய சொரூபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாளை காலை10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மா. கனகசபாபதி.

(10840)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் 06 - 05 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91

இந்து நாகரிகம், தமிழ்: பாலா
அளவையியல்: சந்திரராஜா
அரசியல்: செபராஜா
வரலாறு: புஸ்பரத்தினம்

அனுமதிக்கு முந்துங்கள்!

சஞ்சீவி சஞ்சிகை

06 - 05 - 1989 சனிக்கிழமை

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91

கணக்கியல்: வன்னியசிங்கம்
வர்த்தகம்: தேவா
பொருளியல்: உதயன்
புவியியல்: வேலாயுதபிள்ளை

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

## கருத்துக் கலசம்

மயூரா

### வேண்டும்... ...மன அமைதி

அறிவுக்கு அடிப்படை கல்வி. அந்தக் கல்வியைச் சரிவரப்பெறுவதற்கு மன அமைதி அவசியம். உடல் ஆரோக்கியமும் தேவை.

மன அமைதியும், நிம்மதியும் இல்லாமல் கல்வியை, கருத்துக்களை, விடயங்களை, விளக்கங்களை சிரணித்துக் கொள்வது மிகவும் கஷ்டம். சிந்தனை செய்வதற்கும், சிந்தனை சக்தியை வளர்ப்பதற்கும் எவர் ஒருவருக்கும் மன அமைதி அத்தியாவசியமானதாகும்.

மனப் பதற்றம், அச்ச உணர்வு, உளரீதியான தாக்கம், உடற் சித்திரவதை ஆகியவை ஒருவனது கல்வியைப்பெரிதும் பாதிக்கும். அவனது கிரகிக்கும் சக்தியையும், பதியவைக்கும் சக்தியையும் முற்றாக வேரறுத்துவிடும்.

இது உளவியல் உண்மை. எவரும் மாற்றுக் கருத்துக் கூறமுடியாதது. மனம் குழம்பிப் போனால் அல்லது மனநிலை பாதிக்கப்பட்டால் எந்த விடயத்தையும் செய்யமுடியாத தாக்கமும், ஒரு கருமத்தை மனம் ஒன்றிச் செய்ய முடியாமல் திண்டாடும் நிலைமையும் வழக்கமாக எல்லோருக்கும் உண்டாகும் அனுபவமாகும்.

மனம் குழம்பினால் அல்லது தாக்கம் அடைந்தால் அல்லது பய உணர்வு ஏற்பட்டால் சிந்தனை குழம்பி எதையுமே செய்ய முடியாமல் "வெற்று" மனநிலை தோன்றுகிறது.

குறிப்பாக மாணவப் பருவத்தில் உளத்தாக்கம், பய உணர்வு, எண்ணச் சுதந்திரத்துக்குத் தடை அல்லது நெருக்குதல் என்பன அறிவொளி ஏற்றும் பணியில், அறியாமை போக்கும் பணியில், சமூக வளர்ச்சியில், நாசகார விளைவுகளை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

எந்த அரசியல், பொருளியல் சூழ்நிலையிலும் மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிப்புறாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

ஈழத் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் இராணுவ நடவடிக்கைகளும், அத்துமீறல்களும் ஆரம்ப வகுப்பில் பயிலும் இளசுகளிடையே கூட உளவியல் தாக்கங்களை உண்டு பண்ணி அவர்களது மனவளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும், கல்வி முன்னேற்றமும் பாதிக்கப்பட்டமை ஏற்கனவே கண்ட அனுபவம்; கிடைத்த அறுவடை.

அந்த நிலைமை இனியும் ஏற்படக்கூடாது. மாணவர் சமூகத்தில் உளவியல் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது பெரும் சமூகப் பணியாகிவிட்டது. மாணவர் கல்வியுடன், மனநிலையுடன் எவரும் விளையாட அனுமதிக்கக் கூடாது.

இதனைத் தமிழர்களின் பொதுப் பிரச்சினையாக எடுத்து, மாணவர் மன அமைதியுடன் கல்வி கற்க வகை செய்ய எல்லாத் தரப்பினரும் உதவுதல் வேண்டும். ★

# உரைநடையில் வார்த்தைச் செட்டு ஆக்க இலக்கியம் படைக்க அவசியம்

தமிழிலக்கிய உலகில் தலைசிறந்த விமர்சகராக விளங்கியவர் திரு. க. நா. சுப்பிரமணியம்.

இலக்கிய வட்டாரங்களில் க. நா. சு. என்று அழைக்கப்பட்ட அவர் அண்மையில் மறைந்துவிட்டார்.

ஆனால் அவர் தமிழிலக்கிய வளர்ச்சி குறித்து பல ஆக்கபூர்வமான கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். 'உரைநடையில் வார்த்தைச்செட்டு' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

கவிதையில்தான் வார்த்தைச் செட்டு வேண்டும்; வசனத்தில் வார்த்தைச் செட்டு அவசியமில்லை என்கிற மாதிரி ஒரு நினைப்பு தமிழ் அறிஞர்களிடையேயும், வாசகர்களிடையேயும் இருப்பதாகத் தெரிகிறது.

வசனத்திலும் சரி, கவிதையிலும் சரி வார்த்தைச்செட்டு என்பது மிகவும் அவசியமான ஓர் இலக்கிய அம்சம் என்று சொல்வது மிகையாகாது.

பண்டைய கவிதையில் வார்த்தைச் செட்டு மிகவும் தெளிவு; இடைக்காலக் கவிதையில் அதை அபூர்வமாகவே சந்திக்க முடிகிறது.

கலிங்கத்துப் பரணியும், கம்பராமாயணமும் உதாரணங்கள்.

வார்த்தைச் செட்டுக்குக் கவிதையில் உதாரணமாக வள்ளுவரின் திருக்குறளையும், சங்க இலக்கியக் கவிதைகளில்



கல்கி

சிறப்பானதையும் சொல்லலாம்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாட்டுகளிலே அபூர்வமாகவே தான் வார்த்தைச் செட்டுக் காணப்படுகிறது.

திருவாசகத்திலும், காரைக்காலம்மையாரிலும் இருக்கிறது. மற்ற பக்திக் கவிதைகளில் வார்த்தைகளை ஓட விடுகிறார்களே தவிர, லகான் பிடித்து இழுத்துப் போட்டுப் பயிலவிடவில்லை.

ஆண்டாள் தன் தெய்விகக் காதல் அனுபவத்தை எத்தனை நீட்டிச் சொல்ல வேண்டுமோ அத்தனை நீட்டிச் சொல்கிறார்.

### பிரசங்கிகள்

உரைநடை சமீப காலத்தில் தமிழைப்பற்றிய வரையில் – ஏற்பட்டது.

உரைநடையை நமக்கு உற்பத்தி செய்து தந்தவர்கள் இலக்கிய அல்லது மதப் பிரசங்கிகள்.

பெஷிப் பாதிரியாரும், தாண்டவராய முதலியாரும், வீராசாமிச் செட்டியாரும், ஆறுமுக நாவலரும் பிரசங்கங்கள் செய்து பழகியவர்கள்.

பேச்சுக் கலையில் ஒரே விஷயத்தைத் தெளிவாக்க, ஒரு வார்த்தை கேட்பவர் காதில் விழாவிட்டால் மறு வார்த்தையாவது காதில் விழட்டும் என்பதற்காக ஒரே விஷயத்தைப் பல வார்த்தைகளில் சொல்லுவது பழக்கத்திலுள்ள ஒரே விஷயம்.

பேச்சுக்கலைக்கு இது பொருந்தும். எழுத்துக்கலையில் இது பொருந்தாது.

### பாரதியாரின் வார்த்தைத் தாராளம்

பாரதியாரின் கவிதையிலும் சரி, உரைநடையிலும் சரி, வார்த்தைச் செட்டை விட வேகம், தெளிவு எளிமை என்கிற மூன்று இலக்கிய அம்சங்களும் தூக்கி நிற்கின்றன.

குயில் பாட்டில் சற்று அதிகமாகவே கூட வார்த்தைகளை அள்ளி வீசுகிறார் என்று சொல்லலாம்.

கவிதையில் திருவள்ளுவரோ, இளங்கோவோ மாதிரி சொல்லவேண்டியதில் மட்டும் குறியாக, எவ்வளவு குறைவான வார்த்தைகளை உபயோகித்துப் பயன் காண இயலுமோ அப்படிப் பயன் காணும் பழக்கம் பாரதியாருக்கு இல்லை.

பத்திரிகைக் கட்டுரைகளில் மட்டுமல்லாமல், கந்தருவலோகம் போன்ற நூல்களில் கூட வார்த்தைகளைச் சற்று அதிகமாகவேதான் உபயோகிக்கிறார்.

உரைநடையில் வேகம் (இது பாரதியாருடைய தனி முத்திரை) மற்றும் எளிமை, நேருக்கு நேர் சொல்லுவது, தெளிவு என்பன மிகவும் முக்கியமான அம்சங்களாக உள்ளன பாரதியாரில்.

### மணிக்கொடி எழுத்தாளர்கள்

மணிக்கொடி எழுத்தாளர்கள் என்று வரும்போதுதான் உரைநடையில் வார்த்தைச்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

செட்டு என்பது மிகவும் சிறப்பாகப் பிரயோகத்துக்கு வருவதைக் காண முடிகிறது.

புதுமைப்பித்தன் 'சிற்பியின் நரக'த்தில் பூம்புகாரின் பகைப்புலத்தைக் காட்ட எத்தனை சுருக்கமான அளவில் வார்த்தைகளை உபயோகிக்கிறார்?

பத்து வாக்கியங்களில், ஒரு சிறிய பந்தியில் பூம்புகார் நாகரிகம், நடப்பு இவற்றை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார்.

வார்த்தைச்செட்டு என்பது மட்டுமல்ல, பொறுக்கி எடுத்துச் சொல்கிற தகவல்களிலும் அடங்கியிருக்கிறது இந்த வித்தை.

மற்றைய அவர் கதைகளில் இரண்டு மூன்று விஷயங்களைச் சொல்லி முப்பது விஷயங்களைக் கவனித்து வாசிக்கிற வாசகனுக்குப் புரிய வைத்துவிடுகிற கலை அவருக்குக் கைவந்திருக்கிறது.

வள்ளுவர் வார்த்தைச் செட்டு ஒரு ரகம்; சிலப்பதிகார ஆசிரியரின் வார்த்தைச் செட்டு இன்னொரு ரகம்; மூன்றாவது தனி ரகம் புதுமைப் பித்தனின் வார்த்தைச் செட்டு.

### ஈ. வெ. ரா.

இதற்கு மாறாக பழைய இலக்கியங்களைப் பற்றி விரிவுரை நடத்திய பேராசிரியர்களும் சமூக, அரசியல் விஷயங்களை ஜனங்களுக்குப் புரிகிற மொழியில் எடுத்துரைத்த அரசியல்வாதிகளும், திராவிடப் பேச்சாளர்களும் வார்த்தைகளை அதிகமாக உபயோகித்து விஷயத்தையும், நடையையும் வேகம், வர்ணம் உள்ளதாகப் பண்ணினார்கள்.

ஈ. வெ. ரா. வின் நடையிலும் ஒரு இலக்கியத்தரமான வார்த்தைச்செட்டைக் காணலாம்.

பாரதியாரில் போல, அவர் பேச்சிலும் அவர் உள்ளத்தைத் துல்லியமாகக் காண முடிந்தது.

மற்றவர்கள் பேச்சில் உள்ளத்தை மறைக்கும் போக்கு. அதிலும் வார்த்தைகளைப் போட்டு மறைத்துவிடும் போக்குத்தான் காணப்பட்டது.

ஈ. வெ. ரா. வின் இலக்கியச் சேவை மிகவும் தரமானது என்று சொல்லவேண்டும்.

இத்தனைக்கும் அவர் இலக்கியச் சேவை செய்ய முன் வந்ததாகச் சொல்லிக் கொள்ளவுமில்லை; மற்றவர்கள் தான் சொல்லிக் கொண்டார்கள்.

கல்கியின் நடையில் ஓட்டமும், எளிமையும் தெளிவும் இருந்தது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரால் தன்னுடைய சற்றே சராசரிக்கதிகமான கெட்டிக்காரத்தனமுள்ள வாசகர்களை மறக்க முடிந்ததில்லை என்பதனால் அவர் எழுத்துக்களில் இலக்கியத் தரம் காண்பது அபூர்வமாக இருக்கிறது.

கதை, நாவல், அரசியல், சங்கீதம், நாடகம் எதுவானாலும் அதில் கல்கி என்கிற ஒரு பத்திரிகையின் ஆணவமும், அகங்காரமும் காணக் கிடக்கிறது.

இது புதுமைப்பித்தனில் கிடையாது; இளங்கோவிலும், வள்ளுவரிலும் கிடையாது. சங்க இலக்கியக் கவிதைகளில் அபூர்வமாகக் காணக்கிடப்பது.

### மு. வரதராஜன்

மு. வ.வைத் தமிழ் நடைக்கு உதாரணமாக எடுத்துச் சொல்வது வழக்கம். அதே போலத் திரு. வி. க. வையும் சொல்லுகிறார்கள்.

இரண்டு பேருடைய நடையுமே ஓரளவுக்கு 'Wooden' என்று சொல்லவேண்டும்.

அதாவது நேர் நடை; நிமிர்ந்த நடை; விஷயத்துக்கு அவசியமேற்பட்டாலும் வளைந்து கொடுக்காத ஒரு நடை.

இலக்கியத்தரத்திற்கு, அதுவும் சிருஷ்டித்தரமான இலக்கியங்களில் வார்த்தைச் செட்டு இல்லாமல் போனதற்குக் காரணம் இவர்கள் மதபோதகப் பிரசங்கிகள், அரசியல் பிரசங்கிகள் மேடைப் பேச்சாளர்களான வார்த்தைப் பித்தர்கள்.

வார்த்தைச் செட்டு இருக்கிற இடத்திலும் ஜிலு



புதுமைப்பித்தன்

ஜிலுப்பு. நகாசு வேலை எல்லாம் வரலாம்.

**- க. நா. சுப்பிரமணியம் -**

செட்டு என்பது மிகவும் அவசியமான ஒரு குணம்.

பத்து வார்த்தைகளில் சொல்லவேண்டியதைப் பத்துப் பக்கங்களில் சொல்லக் கூடாது.

இப்படிப் பத்துப் பக்கங்களில் சொல்பவர்கள் என்று சாண்டில்யன், கோவி. மணிசேகரன், நா. பார்த்தசாரதி முதலியவர்களைச் சொல்லலாம்.

இதையே இருபது பக்கங்களில் விரித்துச் சொல்பவர் வார்த்தைகளைக் கொட்டி மெழுகினால்தான் ஜிலு ஜிலுப்பு, விறுவிறுப்பு வரும் என்பது சரியல்ல.

புதுமைப்பித்தன், 'கு. ப. ரா.'வில் இல்லாத ஜிலு ஜிலுப்பு, விறுவிறுப்பா?

அழகாக, இலக்கியத் தரமாக எழுதுவதற்கு ஓர் அங்கமாகவே வார்த்தைச் செட்டைக் கருதவேண்டும். ★

# கம்பியூட்டர் கணக்கீட்டியல்

பாலங்களைக் கட்டுவது முதற்கொண்டு, பூகம்பங்கள் ஏற்படப்போவதை முன்கூட்டியே எச்சரிப்பது வரையில் எல்லாவற்றுக்குமே கம்பியூட்டர்களைப் பயன்படுத்தித் திட்டமிட வகைசெய்யும் 'கம்பியூட்டர் கணக்கீட்டியல்' (Computational Science) என்னும் புதிய அறிவியல் முறை ஒன்று உருவாகி வருகின்றது.

இதனால் சமூகத்திற்கு நல்ல பலன் கிடைக்கும் என்கிறார் அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் வில்லியம் வுல்ஃப் (Dr. Willam Wulf).

அமெரிக்கத் தேசிய அறிவியல் நிறுவனத்தில் (U.S. NationalScience Foundation) கம்பியூட்டர் இயல், தகவல் சார்ந்த அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் துணை இயக்குநராக அவர் பணியாற்றி வருகிறார்.

அறிவியலில் நெடுங்காலமாக 3 முறைகள் மட்டுமே பின்பற்றப்பட்டு வந்தன.

பரிசோதனைகளை நடத்துவது—

விளைவுகளைக் கவனிப்பது—

அவற்றின் அடிப்படையில் கொள்கைகளை உருவாக்குவது— ஆகியவையே இம் மூன்று முறைகள்.

வழக்கமாகக் கையாளப்பட்டுவரும் இம்மூன்று முறைகளைத் தவிர நான்காவதாகக் 'கம்பியூட்டர் கணக்கீட்டியல்' என்னும் புதிய முறையொன்று உருவாகி வருகிறது என்கிறார் வில்லியம் வுல்ஃப்.

இதன்படி ஒரு குறிப்பிட்ட அறிவியல் பிரச்சினைக்குக் கம்பியூட்டர்மூலம் 'மொடல்' (மாதிரி) ஒன்றை உருவாக்கி கம்பியூட்டரைக் கொண்டே கணக்கீடுகளைச் செய்து விரிவாக ஆராயப்படும்.

இவ்வாறு கிடைக்கும் முடிவுகள் வழக்கமான அறிவியல் பரிசோதனைகள் மூலம் பெறப்படும் முடிவுகளைவிட முழுமையானவையாக இருக்கின்றன.

இந்தமுறை மிகுந்த பயனைத் தரவல்லதாக இருக்கிறது.

எடுத்துக் காட்டாக ஒரு குறிப்பிட்ட துறையின் வல்லுநர்கள் அத்துறையைச் சார்ந்த பிரச்சினைகளுக்கு என்ன முடிவுகளைத் தருவார்களோ அதேபோன்ற முடிவுகளைத்தரவல்ல கம்பியூட்டர் அமைப்புக்களை அமெரிக்காவில் உருவாக்கி இருக்கிறார்கள்.

இக்கம்பியூட்டர் அமைப்புக்கள் 'வல்லுநர் அமைப்புக்கள்' (Expert Systems) என்றே அழைக்கப்படுகின்றன.

எனவே அடுத்த பத்தாண்டுகளில் தொழில்துறையில் இந்தக் 'கம்பியூட்டர் வல்லுநர் அமைப்புக்கள்' அதிகமாகப் பயன்படுத்தப்படக்கூடும். ★

## ரமழான் சிந்தனை



ஒருமுறை நபிகள் [ஸல்] அவர்கள்பெருநாள்தொழுகையை நிறைவேற்றுவான் வேண்டி ஒரு பாதையால் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது வழியில்சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் அருகில் அமர்ந்து அழுது கொண்டிருந்தான். இதனைக் கண்ட [ஸல்] அவர்கள்அச்சிறுவனை அணுகி, குழந்தாய்! ஏன் அழுகின்றாய் என ஆதரவோடு கேட்டார்கள். அதற்குஅச்சிறுவன், நானோ ஓர் அனாதை எனக்கும் பெற்றோர்கள் இருந்திருந்தால் என்னையும், நீராட்டி, புத்தாடை அணிவித்து, புது மணம்பூசி மகிழவைத்திருப்பார்களே என்று மிகக் கவலையோடு தெரியப்படுத்தினன். உடனே [ஸல்] அவனை வாரி அணைத்து தம திருக்கரங்களினாலும் சுமந்துகொண்டு தம்மனைவி ஆயிஷா[ரலி] அவர்களிடம் அழைத்துச் சென்று ஒப்படைத்துவிட்டு பின் வருமாறு கூறினர். ஆயிஷாவே [ரலி]இது நமது குழந்தை. இவனை நீராட்டி, புத்தாடை அணிவித்து சந்தோஷப்படுத்துங்கள் என்று கூறிவிட்டு பள்ளியைச் சென்றடைந்த நபி [ஸல்] அவர்கள் என் அருமைத்தோழர்களே! நீங்கள் பெருநாள் தினங்களில் பள்ளிவாசலுக்கு வரும்போது ஒருபாதையாலும், போகும்போது இன்னொரு பாதையாலும் செல்லுங்கள். ஏனெனில் அனாதைகளும், ஏழைகளும் வீதிகளில் இருப்பார்கள். அவர்களைச் சந்தோஷப்படுத்துங்கள். என்று உபதேசித்தார்கள்.

ஸஹர்முடிவு 4 - 21
நோன்பு திறக்கும் நேரம் 6-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குலை



சஞ்சீவி சிறுகதை

'சொத்தியா'

'சொத்தியன்'

'சொத்தி... சொத்தி'

இளையவன் சின்னராசாவின் குரல் பெருத்துக் கொண்டே போனது. நீல நிறக் காற்சட்டை நாடாவை இழுத்து, இறுக்கிச் சொருகிக் கொண்டே அவன் ஓடி யோடிக் கத்தினான்.

தென்னை மரத்தோடு முதுகைச் சாத்தியபடி, அழுகிய கத்தரிக்காய் போலச் சூம்பிப் போயிருந்த தனது இடது காலை உருவிவிட்டுக் கொண்டிருந்த, கனகசிங்கத்தின் கண்களில் நீர் முட்டியது. அவனால், தம்பியார் 'சொத்தி' என்று கத்துவதைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

'இவன் என்ரை தம்பியே? அறுந்த நாய். என்னை எந்த நாளும் பட்டம் தெளிக்கிறது தான் இவனுக்கு வேலை. மூதேவி செத்துப் போனாலும் நல்லது'

சின்னராசா தமையன் இருந்த தென்னை மரத்தடியைச் சுற்றிக் கைகளைத் தட்டியபடியே ஓடிக் கொண்டிருந்தான்.

'ஓ... இவன் செத்துத்தான் போகவேணும். அப்பான் எனக்குச் 'சுகம்'. ம்... ஏன் அவன் சாக வேணும் எண்டு நினைக்கிறேன்? பிறகு கூப்பன் கடைக்குப் போகவும் சாமான் வேண்டப் போகவும் ஆர் இருக்கினம்? சாகாட்டி என்னைப் போலை ஒரு கால் சொத்தியாப் போனாலும் நல்லது'

கனகசிங்கத்தின் மனதைச் சுற்றி வேதனை நெருப்பு மூளும் அந்தவில் அவன் முதுகைத் தென்னை மரத்தில் அழுத்தி, வலதுகையை நிலத்தில் ஊன்றி எழுந்துகொண்டான். சின்னராசா கையைத் தட்டிச் 'சொத்தியா' என்று பலமாகக் கத்திவிட்டு ஓட, அவனைப் பிடித்து சொத்தியாக்கி விட வேண்டுமென்ற மன வைராக்கியத்தோடு, ஆட்டுக் குட்டி கட்டுவதற்கு அறைந்து வைத்திருந்த பூவரசங்கட்டையைப் பிடுங்கிக் கொண்டு கனகசிங்கம் துரத்தினான்.

அவன் ஓட, அவனுடைய இடது கால் நிலத்தில் பட்டும் படாமலும், பிரம்படி பட்ட கையாக உதறுப்பட்டுக் கொண்டது. சின்னராசா அங்குமிங்குமாகத் தென்னை மரங்களுக்கூடாக 'உச்சி' ஓட்டங்காட்டி விட்டு வேலிப் பொட்டுக் கூடாக அடுத்த வளவுக்குள் நுழைந்து விட்டான். ஆத்திரத்தோடு கனகசிங்கம் வீசியெறிந்த பூவரசங் கட்டை வேலியோடு வெறுமனே மோதி நிலத்தில் விழுந்தது.

'ஓ... எறிபட்டிருந்துதெண்டால் இனிமேல் என்னை அவன் பழிக்கவே ஏலாது. தப்பீற்றான். வரட்டும் பார்க்கிறன்'

மனம் ஆத்திரத்தில் கறுவ, தம்பியார் வரப்போகும் பாதையில் பார்வையைப் படர்த்தி தென்னை மரத்தின் மொத்தமான அடிக்குள் மறைந்துநின்றுகொண்டான். பக்கத்தில் காணப்பட்ட எறும்புப் புற்றிலிருந்து அங்குமிங்கும் ஊர்ந்துகொண்டிருக்கும் எறும்புகள் காலில் ஏறி விடாமல் காலை ஒடுக்கி ஒடுக்கி வைத்துக்கொண்டிருந்த அவனது கண்வலைக்குள், பொட்டுக்கூடாக தலையைவிட்டு 'நாக்கிழிப் பாம்பை'ப் போல் உடம்பை வளைத்து சின்னராசா வரும் காட்சி அகப்பட்டது.

கோப உணர்ச்சியின் உந்தலால் துருதுருத்த கைகளை ஒன்றோடொன்று உரஞ்சிக் கொண்டான்.

'மூதேவியார் வரட்டும்'

அகலவிரிந்துநிற்கும் வாழை இலைகளின் மேல் மழைத்துளி விழுவதைப்போன்று மனதுக்குள் ஆத்திரம் சொட்டசொட்டத்தது!

தமையன் போய்விட்டான் என்ற பயமற்ற நிலையில் கைகளை வீசி நடந்துவந்த சின்னராசா தமையனின் கைக்குள் அகப்பட்டுவிடுகிறான்.

கனகசிங்கத்தின் கைகள் பிடிச்சிராவியாகி அவன் கழுத்தை நெரிக்கும் உக்கிரம் பொறுக்கமாட்டாமல் அவன் கழுத்தை மேலே மிதத்தி தலையை அப்படியும் இப்படியும் ஆட்டியபடி, தலைக்கு மேலால் தன் கைகளை உயர்த்தி தமையனின் பிடரியைக் கட்டிக்கொண்டான்.

கால்கள் ஒன்றையொன்று பின்ன இருவரும் தடக்குப் பட்டு கீழேவிழுந்து உருண்டனர். கனகசிங்கம் தம்பியின் தலைமயிரைப் பிடித்து உலுக்கினான்.

'இனிமேல் பட்டம்சொல்லுவியோடா...'

'நீ விடு என்னை...'

'பட்டம் சொல்ல மாட்டனெண்டு சொல்லு'

'இல்லை... நான் சொல்லேல்லை...'

'ஒருநாளும்...?'



இச்சிறுகதையை எழுதிய திரு. க. பரராஜசிங்கம் 'கலைச்செல்வி'ப் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளர்களில் ஒருவர்.

சிறுகதை, நாடகம், நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதி வாசகரிடையே தனி இடம்பெற்ற இவர் சிறந்த நடிகருமாக விளங்கினார்.

இலங்கை நிர்வாக சேவையில் உதவி அரச அதிபராகப் பணிபுரிந்த இவர் கடந்தமாதம் 7 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் எழுத்துப்பணியை நினைவுகூரு முகமாக 'கலைச்செல்வி' யில் பிரசுரமான 'ஒரு குலை' என்ற தலைப்பிலான சிறுகதை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

கனகசிங்கத்தின் பிடி நெகிழ, எழுந்து தன் காற்சட்டை நாடாவை இழுத்துச் சொருகி இறுக்கிக்கொண்டே ஓடின சின்னராசா பின்னரும் கத்தினான்.

'சொத்தி'

'சொத்தி'

'சொத்திக் காலர்'

கையில் கிடந்ததைப் பறிகொடுத்துவிட்ட ஏமாற்ற நிலையில் அவனையே பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றவனின் பார்வை எதிரில் வந்துகொண்டிருந்த பக்கத்துவீட்டு முருகுவின் இடத்துக்குத் திசை மாறியது.

முருகு காற்சட்டையின் இரண்டு 'பொக்கற்'களிலும் நிரம்பிய போளைகளோடு, சலிக்...சலிக் என்ற சத்தம் எழும்பக்கூடியவாறு நடந்து வந்தான்.

★ ★ ★

போளை அடித்து விளையாடும் மும்முரத்தில் கனகசிங்கத்தின் ஆத்திரம் எல்லாம் மறைந்துபோக அவனது கவனமெல்லாம் இப்போது விளையாட்டில் வெற்றிபெறுவதிலேயே திரும்பி நின்றது. அவன் கீறப்பட்ட கோட்டுக்குப்போய் குனிந்து அடிப்பதிலும், பின் திரும்பி வந்து 'குண்டு'க்குப் பக்கத்தில் இருப்பதிலும் ஈடுபட்டிருந்தான்.

'கட்டு...கட்டு'

'கோட்டிலை கால் முட்டாமல் விடு'

''சலீர்...'

போளைகள் சிதறிப்பறக்கின்றன! ஒவ்வொரு தடவையும் முருகுவின் அடிகள் தவறிவிடக் கனகசிங்கம் வெற்றி பெற்று விடுகின்றான். மனக் கிணற்றிலே மகிழ்ச்சிப் பாசிகள் சூழ்ந்து மிதக்கின்றன! முருகு கொண்டு வந்த...

கனகசிங்கம் எல்லாப்போளைகளையும் எடுத்து இரண்டு கைகளாலும் அளைந்து எண்ணிப் பார்க்க முருகு ஆற்றாமையோடு அவனைப் பழிக்கத் தொடங்கினான்.

'நீ அளாப்பி வெண்டு போட்டாய். எனக்குத் தெரியாது. என்ரை போளையெல்லாம் தந்து போடவேணும்'

'நான் ஏன் தருவான்.

நான் முறையாத்தான் விளையாடினன். அளாப்பினால் அப்போதை நீ சொல்லியிருக்கவேணும்'

'போடா அளாப்பியா. சொத்தியா...'

'நீதான்ரா அளாப்பி... குளாப்பி'

முருகுவின் கண்களில் நீர் முட்டி நின்றது.

கனகசிங்கம் மீண்டும் போளைகளைக் கைக்குள் வைத்து அளைய முருகு எட்டித் தட்டிவிடுகிறான்.

போளைகளெல்லாம் சிதறிப் பறக்க அவற்றைப் பொறுக்கக் குனியும் முருகுவிற்கும் அவனிற்கும் சண்டை மூளுகிறது.

'தாடா சொத்தியா... விர்ரு சொத்தியா'

'நான் விடன்'

'...'

எங்கிருந்தோ பாய்ந்து வந்த சின்னராசா முருகு...

தனை போளைகளையும் தோற்று விட்டு, பின்னரும் எடுத்துக் கொண்டு வருவதற்காக வீட்டுக்குப் போவதை இடுப்பில் கையை வைத்தபடியே நிமிர்ந்து நின்று பார்க்கும் அவனது எண்ணமெல்லாம் போளைகளைச் சுற்றியே சுழல்கின்றது.

'அங்கை பேணிக்கை இருக்கிறது முப்பத்தேழு... இஞ்சை எல்லாமாகப் பதினெட்டு... அப்ப முப்பத்தேழும் பத்தும் நாப்பத்தேழும் எட்டும் அம்பத்தைஞ்சு. இனிக் கொண்டாற எல்லாத்தையும் வெண்டு போட்டால் அவனுக்கே விலைக்கு விக்கலாம். புதிசு ஒண்டு ஒரு சதம். சொறிப் போளையெண்டால் ரெண்டு'

'ம்... ...ஆள் வாறார், வாறார்...'

தோற்றுப்போய் விட்ட அவமான உணர்வில் முருகு புதிய சட்டங்களைக் கிளப்பினான்.

'கோடு கிட்டமாய்ப் போச்சு. கொஞ்சம் தூரக் கீறவே[illegible]ம். நீ அப்போதையெல்லாம் 'பிஸ்றியா வைச்சு அடிச்சனி'

'ஓ... நீ வேணுமெண்ட அளவு தூரக் கீறு...'

புதிய கோடு கீறப்பட்டு விளையாட்டு மீண்டும் ஆரம்பமாகியது. முருகு வெறிபிடித்தவன் போல பாய்ந்து அடித்த போதும் அவனது அடி ஒன்றுவது படவில்லை.

கனகசிங்கம் நொண்டி நொண்டி ஓடி அடித்து போளைகளின் எண்ணிக்கையை ஒவ்வொன்றாகக் கூட்டிக் கொண்டான்.

முருகு வைத்திருந்த கடைசிப்போளையையும் கோட்டை விட்டு விட்டான்.

'உன்ரை கைமாபிளைத் தா...'

இந்தா...'

வைப் பிடித்து இழுத்துத் தமையனை விடுவிக்க, முருகு சின்னராசாவின் தலைமயிரைப் பிடித்து அவன் முகத்தில் குத்தினான்.

இரண்டு பேரும் கட்டிப் பிடித்து உருண்டு எழுந்தனர்.

'நான் எல்லாம் பார்த்துக் கொண்டுதான்ரா நிண்டனான். அண்ணை முறையாத்தான் விளையாடி வெண்டவர்'

'போடா...நீர் கொண்ணைக்காக நாயம் பேசவேணும். எளிய சொத்தியன் அளாப்பி...'

'இனி சொத்தியன் எண்டு சொன்னியோ உன்ரை மண்டையை நொருக்கிப்போடுவன்'

'சொத்தி'

'சொத்தி'

சின்னராசா முருகுவின் முகத்தில் குத்திவிட, அவன் ஓடிப் போய்த் தூர நின்று கல்லால் எறிந்து, சின்னராசாவின் நெற்றியில் காயத்தை உண்டாக்கிவிட்டு ஓடிவிட்டான்.

முகத்தில் வடியும் இரத்தத்தைக் கனகசிங்கம் துடைத்தான்.

வடுகன் வரட்டும் பார்க்கிறன்'

ஃ ஃ ஃ

தமையனும் தம்பியாரும் போளை அடித்து விளையாடுகிறார்கள்.

போளையடியில் மட்டும் கனகசிங்கத்தை மிஞ்ச யாருமில்லை என்ற அளவுக்கு அவன் விண்ணன். சின்னராசா தனது போளைகளைத் தமையனிடம் தோற்றுவிட்டான்.

'அண்ணை ரெண்டு போளை கடன் தராயோ?'

'முந்தி வாங்கின கடனைக் கொண்டா. இனித்தர மாட்டன்'.

'தராயோ?'

'இல்லைப்போ'

'தா எண்ணுறன். ஒண்டாலும் தா'

'ஒண்டும் தரன்'

'போடா சொத்தியா'

'இஞ்சை பட்டம் தெளிச்சுத்தான் காலமை என்னோடை கொழுவினனி... இப்ப பேசாமல் போய் உன்ரை அலுவலைப்பார்'

'சொத்தியா'

'சொத்தி'

'சொத்தி'

ஓடி ஓடிக்கொண்டே சின்னராசா கத்துவது கனகசிங்கத்தின் செவியில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மோத, அவனது மனதில் பழையபடி வேதனை நெருப்பு மூண்டது.

'போடா... உனக்கு அவன் எறிஞ்சது பத்தாது. இனி நான் நொருக்கிறேன்'. ★

## - க. பரராஜசிங்கம் -

# செந்தமிழ் ஓங்கிட நலமெலாங் கண்டவன்

செம்மை யின்தமிழ் எம்மைப் பிணித்திடச்
செய்த கவிதைகள் பாரீர்! — இவரும்
செய்த கவிதைகள் கேளீர்!
இம்மை வாழ்வினில் இனிதாய் வாழ்ந்திட
இயம்பிய கவிதைகள் பாரீர்! — இவரும்
இயம்பிய கவிதைகள் கேளீர்!

நம்மைப் பிணித்திடும் நாசங்கள் போகென
நாட்டியக் கவிதைகள் பாரீர் — இவரும்
நாட்டியக் கவிதைகள் கேளீர்!
நம்தமிழ் வாழ்ந்திடச் செந்தமிழ் ஓங்கிட
நலமெலாங் கண்டவன் பாரீர் — முதுதமிழ்
நல்லதம்பிப் புலவன் கேளீர்!

முந்திய தமிழினை முறையாய்க் கற்றுநல்
முதுதமிழ்ப் புலவ னானவன்! — கவிதையால்
முதுதமிழ்ப் புலவ னானவன்!
சந்தம் மிகுந்திடு சிந்தெனப் படைத்தனன்
சார லருவிகள் போலே! — கவிதைகள்
சார லருவிகள் போலே!

மாமர தன் அஞ்ச லோட்டப் போட்டியில்
மாண்பு றுங்கவிதை யாத்தனன்! — புகழ்சேர்
மாண்பு றுங்கவிதை யாத்தனன்!
சீரிதழ் ஆயிரம் செங்கதிர் போலொளி
செய்து விளங்கிடப் பூமியில் — கவிதைகள்
செய்து விளங்கிடப் பூமியில்.

— வட்டூர்க் கடம்பன்

(முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பியின் நினைவு தினம் எதிர்வரும் 8. 5. 1989 ஆம் திகதியாகும்).

# பெருநாள் பரிசு!

இதோபார் சுமையா, உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? பெருநாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது; நான்பாட்டுக்கு மளிகைச் சாமான்கள் வாங்கிக் குவித்துள்ளேன். நீ ஒன்றுமே செய்யாமல் இப்படி 'உம்'மென்றிருந்தால் என்ன அர்த்தம்?

—ரஹீமின் குரல் மென்மை கலந்த கோபத்துடன் வெளி வந்தது.

சுமையா ஒன்றுமே பேசவில்லை. அவள் விழிகள் மட்டும் கலங்கிக்கொண்டிருந்தன.

'ஏன் மௌனமாக இருக்கிறாய்? நோன்பு வைத்துக் கொண்டு இதென்ன அழுகை? எதுவாக இருந்தாலும் என்னிடம் தாராளமாக மனம் விட்டுப் பேசலாம்.

சுமையா மெல்ல தலையை நிமிர்த்தி ரஹீமைப் பார்த்தாள்.

'இந்த வருஷம் நம்மவீட்டில பெருநாள் கொண்டாட எனக்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை.

—தயங்கித் தயங்கி வெளி வந்த அவளுடைய வார்த்தைகள் ரஹீமை அதிரவைத்தன.

'பெருநாள் கொண்டாட மாட்டாளா? ஏன்? என்ன காரணம்? இன்று 28 நோன்பு முடியப்போகிறது. ஒரு நோன்பைக்கூட நானும் அவளும் கைவிட்டதில்லை. அப்படியிருந்தும் அவள் ஏன் இப்படிச் சொல்கிறாள்?'

ரஹீமுக்குப் புரியவில்லை. 'சுமையா' நீ என்ன சொல்ல விரும்புகிறாய் என்பதைத் தெளிவாகச் சொல். எனக்கு



ஒன்றுமே புரியவில்லை"

'பெருநாளைக் கொண்டாட எனக்கு விருப்பமில்லை என்றேன்.— அழுத்தமாகச் சொன்னாள் சுமையா.

'அதுதான் ஏன் என்று கேட்கிறேன்' ரஹீமின் குரலிலும் இப்போது கோபம் தெரிந்தது.

பெருநாளைக்கொண்டாடும் யோக்யதை நமக்கு இல்லை. அதனால் தான்!'

'என்ன யோக்யதை வேண்டுமென்று நீ எதிர்பார்க்கிறாய்? ரமழான் மாதத்தில் நோன்பு வைக்க வேண்டும்; தொழ வேண்டும். அதைத்தான் நாம் ஒழுங்காகச் செய்துவருகிறோமே! பிறகென்ன?'

ரஹீம் இப்படிச் சொன்னதும் சுமையா வேதனையுடன் புன்னகைத்தாள்.

'ஏங்க வெறுமனே நோன்பு வைத்து, தொழுதுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துக்கொண்டீர்களா? இந்தப் புனித மாதத்தில் நீங்க மஜீத் மரைக்காயருடன்; எப்படி நடந்துகொண்டீர்கள் என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார்த்தீர்களா?'

ரஹீமுக்கு அப்போதுதான் புரிந்தது.

'ஓ! இவள் அங்கே வருகிறாள். இருபது நாட்களுக்கு முன்பு அந்த நிகழ்ச்சி ரஹீமின் மனக்கண்ணில் தெரிந்தது.

★ ★ ★

'தம்பி, நான் சொல்றேன்னு வருத்தப்படாதீங்க. பெருநாள் முடியறவரைக்கும் கொஞ்சம் பொறுத்துங்க. அதற்கப்புறம் உங்க பணத்தைக் கொண்டுவந்து திருப்பிக் கொடுத்துவிடுறன்' அழாதகுறையாகக் கெஞ்சிக் கொண்டிருந்தார் மஜீத் மரைக்காயர்.

'பொறுக்கிற நிலைமையில நான் இல்ல மரைக்காயரே! இன்னைக்கு சாயங்காலத்துக்குள் பணத்தைக் கொண்டு வாங்க. இல்லேண்ணு நடக்கிறதே வேறே! —ரஹீம் கறாராகப் பேசினான்.

'பிள்ளைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடம் திறந்திடுச்சு, அதனால செலவு கொஞ்சம் கையை மீறிப் போயிடுச்சு; ஆனாலும் உங்கபணம் எங்கேயும் போயிடாது. என்னை நம்புங்க தம்பி! கொஞ்சநாட்கள் தவணை கொடுங்க போதும்!"

'உங்களைப்போன்ற ஆட்களுக்கெல்லாம் கடன்கொடுத்ததே தப்பு. திருப்பிக் கொடுக்க சக்தியில்லாத பரதேசிப்பசங்க, கடனை மட்டும் ஏன் கைநீட்டி வாங்கணும்?' ரஹீம் எரிந்துவிழுந்தான்.

நடப்பதையெல்லாம் உள்ளிருந்து கவனித்துக்கொண்டிருந்த சுமையாவிற்கு மனசு கஷ்டப்பட்டது.

நோன்பாளியாக வீடு தேடி வந்து வாங்கிய கடனுக்குச் கொஞ்சம் தவணை கேட்கும் மரைக்காயர் மீது சற்றும் இரக்கமில்லாமல் எரிந்து விழுகிறாரே! என்ன மனிதர் இவர்! அப்படியொன்றும் அவசரமான பணத் தேவையும் ரஹீமுக்கு இல்லை. ஆகவே அந்த ஏழை மனிதனுக்குக் கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் என்னவாம்? இந்த ரமழான் மாதத்தில் ஒரு நோன்பாளியின் மனதை இப்படியா புண்படுத்துவார்கள். இந்த இலட்சணத்தில் இவரும் நோன்பாளி!—

சுமையாவிற்கு வெறுப்பாக இருந்தது.

அதற்குப் பிறகு மரைக்காயர் கலங்கிய விழிகளுடன் நெஞ்சம் நோக எழுந்து போனதும் அன்று மாலையே நான்கு ஆட்கள் வைத்து ரஹீம் தான் கொடுத்த ஆயிரம் ரூபாய்க்காக மரைக்காயரின் வீட்டிலிருந்த தட்டு முட்டுச் சாமான்களைப் பறித்துக்கொண்டதும் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள்.

★ ★ ★

அந்த நிகழ்ச்சியைத்தான் சுமையா இப்போது ஞாபகப் படுத்துகிறாளா?

'சுமையா மஜீத் மரைக்காயர் கிட்ட நான் நடந்து கொண்டதற்கும், பெருநாளைக் கொண்டாடாமல் இருப்பதற்கும் என்ன சம்பந்தம்? அதையும் இதையும் போட்டு ஏன் குழப்பிக்கொள்கிறாய்?' என்றான் ரஹீம்.

சுமையா தெளிவாகப் பதில் சொன்னாள்.

'நோன்புக் கடமைகளை யார் முழுமையாக நிறைவேற்றுகிறார்களோ அவர்களுக்குத்தான் பெருநாள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் உரிமையும் உண்டு. நோன்புக் கடமை என்பது வெறும் பசியும் தாகமும் மட்டுமல்ல. 'அடுத்தவருக்கு தீங்கிழைக்கும் ஒரு நோன்பாளி, தம் நோன்பைப் பாழாக்கியவர் ஆவார்'– என்று நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்க மஜீத் மரைக்காயருக்குச் செய்த தீமை என்னைப் பொறுத்தவரைக்கும் சாதாரணமானதல்ல நாயகத்தின் பொன்மொழிகேற்ப உங்கள் நோன்பெல்லாம் பாழாகியிருக்குமே! பிறகு எதற்காக நமக்கு பெருநாளும் கொண்டாட்டமும்?'—

சுமையா பேசப்பேச ரஹீம் ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டான்.

நோன்பு எனும் வணக்கத்தில் இத்தனை மனிதாபிமான உணர்வுகள் நிறைந்திருக்கும் என்பது அவன் இதுவரை அறியாத ஒன்று.

இப்போது சுமையா உணர்த்திய அந்த உண்மைகள் அவன் நெஞ்சைச் சுட்டன. நாத் தழுதழுக்க' நீர்மல்க அவளுடைய கைகளைப் பற்றிக்கொண்டான்.

'சுமையா, நான் ஏதோ அறியாமல் செய்துவிட்டேன்; இப்பொழுதே மரைக்காயர் வீட்டுக்குச் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்; இன்று அவர் நமது வீட்டில்தான் நோன்புதிறக்கப் போகிறார்; அதுமட்டுமல்ல, அவர் நமக்குத் தரவேண்டிய ஆயிரம் ரூபாயை பெருநாள் பரிசாக அவருக்கே தந்துவிடப்போகிறேன்'—

இப்படிச் சொல்லிவிட்டு சைக்கிளில் ஏறிச் செல்லும் ரஹீமையே கண்கொட்டாமல் பார்த்தக்கொண்டிருந்தாள் சுமையா;

அவளுடைய கண்களிலும் நெஞ்சிலும் பெருநாளின் மகிழ்ச்சிகள் இப்பொழுதே மலரத் தொடங்கிவிட்டன!

(யாவும் கற்பனை)

## - எம். எஸ். சித்திக் -

## றமழான் சிறப்புக் கதை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பேசும் போஸ்டர்

ஜப்பானில் பிரபல மது உற்பத்தி நிறுவனம் ஒன்று தனது தயாரிப்பான விஸ்கிக்கு புதுமையான முறையில் விளம்பரம் செய்து வருகிறது.

டோக்கியோவில் உள்ள பெரிய ரயில் நிலையங்கள் உட்பட 340 இடங்களில் இந்த விளம்பரம் வைக்கப்பட்டுள்ளது.

அங்கு இதற்காக வைக்கப்பட்டுள்ள விளம்பரப் போஸ்டர்கள் பேசுகின்றன.

அதில் 'கிமோனு' என்ற பிரபல நடிகையின் படம் உள்ளது.

வீட்டுக்குப் போனதும் பழைய விஸ்கி அருந்துங்கள்'—என்று அந்த நடிகை போஸ்டரில் பேசுகிறுள்.

அவரது குரல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு போஸ்டரில் இணைக்கப்பட்டுள்ளது.

16 நொடிகளுக்கு ஒருமுறை அந்த போஸ்டர் பேசுகிறது. ★

## உங்களுக்குத் தெரியுமா?

★ ஆஸ்திரேலியர்களுக்குப் பிடித்த பறவை அன்னம்.

அங்கு அரசாங்க முத்திரையிலேயே அன்னப் பறவை இடம்பெற்று விட்டது.

★ சுவிட்சர்லாந்தில் வளரும் இரத்தம் உறிஞ்சும் ஒரு வகைக் காட்டுமரங்கள் சுமார் 55 நிமிடங்களுக்கு ஒரு முறை கிரீச்சிட்டுக் கத்தும் இயல்பு உடையவை. ★

## கிணற்றிலும் முத்துச் சிப்பி

சிப்பிக்குள்தான் முத்து இருக்கும்.

அதுவும் கடலில் உள்ள சிப்பிக்குள்தான் முத்து இருக்கும்.

இப்போது கடல் நீர் அல்லாமல் சாதாரண கிணற்று, ஏரி நீர் போன்றவற்றிலும் முத்துச் சிப்பிகளை உற்பத்தி செய்து முத்துக்களை எடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மீன்வள விஞ்ஞானிகள் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்தில் இது சம்பந்தமான ஆராய்ச்சி ஒன்றை நடத்தி வெற்றி கண்டு உள்ளனர். ★

## ரேகனுக்கு வழங்கப்பட்ட சுத்தியல்

அமெரிக்க அதிபராக இருந்து பதவி விலகிய ரொனல்ட் ரேகனுக்கு அண்மையில் சுத்தியல் ஒன்று பரிசளிக்கப்பட்டது.

சந்தன மரத்தில் செய்யப்பட்ட மிகப் பெரிய சுத்தியல் இது.

இதனை அமெரிக்க வழக்கறிஞர் சங்கம் பரிசாக வழங்கியது.

எந்தப் பிரச்சினையையும் நல்லபடி ஆராய்ந்து ஒரு நிலையோடு செயல்பட்டதற்காகவே சுத்தியல் பரிசு என்று சங்கத் தலைவர் பிராங்க் பேசுரின்கோப் சொன்னார். ★

## நாயின் நட்பு மனிதனுக்கு எப்போது கிடைத்தது?

நாய் - மனிதன் நட்பு எப்போது ஆரம்பித்தது?

உலகில் உள்ள மற்ற பிராணிகளை விட, நாய்களே மனிதனுடன் மிக நெருங்கிப் பழகி வந்துள்ளன.

நாய்க்கும் மனிதனுக்கும் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னேயே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது.

இது பற்றி ஆராய்ச்சி ஒன்று அண்மையில் நடந்தது.

அதன்படி கிறிஸ்துவுக்கு முன் 10 ஆயிரமாவது ஆண்டில் நாயும் மனிதனும் நட்பாக இருந்தது அறியப்பட்டுள்ளது. ★

# பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

## கணவன்மார் கவனிக்க:

புகை பிடிப்பவர்கள் அருகில் இருப்பவர்களும் அந்தப் புகையைச் சுவாசிக்க வேண்டியுள்ளது அல்லவா!

இப்படி அடுத்தவர்கள் புகைக்கும் சிகரெட் புகையால் அருகில் இருப்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

அருகில் இருக்கும் பெண்களுக்கு இந்தப் புகையால் கழுத்தில் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

சிகரெட் பிடிக்கும் கணவன்மார்கள் இதைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்வார்களா? ★

## மிக நீள சுரங்கப் பாதை

உலகிலேயே மிக நீளமான சுரங்கப் பாதை இத்தாலியில் உள்ள 'ஆல்ப்' மலையில் அமைக்கப்படுகிறது.

இதன் மொத்த நீளம் 55 கிலோ மீற்றர் ஆகும்.

ஆஸ்திரியா, இத்தாலி, சுவிட்சர்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகளை இந்தச் சுரங்கப்பாதை இணைக்கும்.

இதற்கான ஒப்பந்தம் நான்கு நாடுகளுக்கு இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது. ★

## தமிழே! தமிழே!

'மேலெழுந்த வாரியாகப் பார்த்தால்'—என்ற வரியும் 'சும்மா' என்ற வார்த்தையும் தமிழில் மட்டுமே உண்டு.

தமிழனின் சோம்பேறித்தனத்திற்கு இவை இரண்டும் போதாதா!

தமிழிலே கலந்துவிட்ட திசைச் சொற்களில் வசைச் சொற்களே அதிகமாக இருக்கின்றனவே ஏன்?

அதுதான் தமிழனின் சுவை உணர்ச்சி.

தமிழின் மீது வெறுப்புற்ற ஆண்டவன் தமிழைச் சரியாகத் தண்டிக்க நினைத்தான். அதைத் தூக்கி புலவர் கையில் கொடுத்து விட்டான்.

தமிழே நீ வாழ்க! உன்னை எழுதுகிறவனுக்குப்புகழுண்டு. உன்னை மலிவாக்கி விற்பவனுக்குப் பணம் உண்டு. உன்னை உருவாக்குகிறவனுடைய வீட்டில் நெருப்பில்லாத அடுப்பு உண்டு.

—கண்ணதாசனின் 'செப்பு மொழி'யில் இருந்து. ★

## டி.வி. பார்த்தால் புற்றுநோய் வருமா?

அறைகளை மூடுவதுடன் நிற்காது, ஜன்னல்களையும் மூடிக்கொண்டு பலமணி நேரம் டி.வி பார்க்கும் பழக்கம் பெருமளவில் உள்ளது.

இவ்வாறு காற்றுப்புகாமல் மூடிய அறைக்குள் டிவி செயல்படும்போது, அதிலிருந்து விஷப்புகை வெளியாகிறது.

டி.வி பார்ப்பவர்கள் அதை சுவாசிக்கிறார்கள்.

இதனுல் புற்றுநோய் ஏற்படும் என்று மேற்கு ஜேர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

எனவே டி.வி பார்க்கும் போது ஜன்னல்களைத் திறந்து வைக்கவேண்டும். அதன் மூலம் விஷப்புகையின் ஆபத்தைத் தவிர்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளார்கள். ★

## ஏவுகணை!

பெண்ணே!
இமைச்சிறகடித்தது
உன்
விழிகள்தானே?
பிறகு எப்படி
வானில்
நான் பறந்தேன்?

— லயா

## எறும்புடன் எறும்பு ஏன் மோதுகின்றது?

எறும்புகள் வரிசையாக ஒன்றன்பின் ஒன்ருகச் செல்லும் போது ஏன் மோதுகின்றன?

நல்ல கோடை காலமாக இருப்பின், 'எறும்புகளின் ஊர்வலம்' மழை வருவதற்கான அறிகுறி என்று ஊர் மக்கள் கூறுவர். அப்படிச் செல்லும்போது ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன.

ஆனுல் எறும்புகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதற்கான காரணத்தை ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரே கூட்டில் (Colony) இருக்கும் எறும்புகளை இனம் கண்டு கொள்வதற்கும், உணவிருக்கும் இடத்தை அறிவிப்பதற்கும் எறும்புகள் ஒன்றுடன் ஒன்று மோதிவிட்டுச் செல்கின்றன.

மனிதன் மோதிக்கொண்டு செல்வது, மற்றவனை விழுத்தி தான்வாழவேண்டும் என்பதற்காகவே! ★

## கைதட்டல் பற்றி...

ரஷ்யாவிலும் கைதட்டுகிறார்கள்!

எப்படி?

ஒருவர் மேடையில் பேசிக் கொண்டிருப்பார்.

சுவையான கட்டத்தில் ரசிகர்கள் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள்.

உடனே பேச்சாளரும் பேச்சை நிறுத்தி விட்டு ரசிகர்களுடன் சேர்ந்து கைதட்டுவார்.

ரசிகர்களின் கைதட்டலுக்கு நன்றி தெரிவிக்கவே பேச்சாளரும் கைதட்டுகின்றார்.

இங்கு எப்படி?

பேசியது போதும்! பேச்சை நிறுத்தும் என்று கூறவே ரசிகர்கள் கைதட்டுகிறார்கள்.

அது மட்டுமா? போதாக்குறைக்கு தலைமைவகிப்பவரும் பேச்சாளரின் முதுகில் கையால்தட்டி நேரமாகி விட்டது என்று கூறிவிடுவார். ★

## சதுர வடிவில் காய்கறிகள்

முட்டைகள், காய்கறிகள் பழங்கள் உருண்டையாக இருப்பது நல்லதல்ல.

அவற்றின் வடிவங்கள் தவறுனவையே. அவற்றை மாற்றி சதுர உருவங்கள் ஆக்கவேண்டும் என்று பல விஞ்ஞானிகள் இப்போது முயன்று வருகிறார்கள்.

அமெரிக்காவில் கலிபோர்னியா, புளோரிடோ மாநிலங்களைச் சேர்ந்த தாவர வல்லுநர்களும் பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள்ஜப்பான் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் தக்காளி கத்தரிக்காய், பூசனிக்காய், உருளைக்கிழங்கு, வெள்ளரிக்காய், ஆப்பிள் மாம்பழம் ஆகிய காய்கறி, கனிவகைகளை சதுர வடிவங்களில் உருவாக்கி வருகிறார்கள். ★

## 17வயது வீராங்கனை

லிம்சன்-ஏ பதினேழு வயது கொரிய பள்ளி மாணவியான இவர், சியோலில் நடந்துமுடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றிருக்கிறார்.

இவர் ஒரு சாதாரண குடிசை வாழ் குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண்.

பெண்களுக்கான 3,000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வென்று தன் மூன்றுவது தங்கப்பதக்கத்தைப் பெற்ற லிம் சொல்வது என்ன தெரியுமா?

''சிறு வயதில் குறைந்த பட்சம் என் உணவில் பாலை மட்டுமாவது சேர்த்துக் கொண்டிருந்தால் என்னுல் இன்னும் வேகமாக ஓடி வந்திருக்கமுடியும்''. ★

# நாணயம் வேண்டாம் என்ற நாணயமான அரசியல்வாதி

எடைக்கு எடை நாணயம் தரப்போகிறோம். வருகிறீர்களா?

இப்படி யாராவது அழைக்கமாட்டார்களா? என்று ஏங்கும் அரசியல்வாதிகள் மத்தியில்......

குஜராத் மாநிலத்தில் அம்ரேலி என்ற நகரில் ஜனதா தள் கட்சியின் பிரசாரக்கூட்டம் நடைபெறுகிறது.

மேடையில் பெரிய தராசு ஒன்று கொண்டு வந்து வைக்கப்படுகிறது.

அம்ரேலி எம். எல். ஏ. மனுபாய் கொற்ருடியா எழுந்து, ஜனதா தள் தலைவர் விஸ்வநாத் பிரதாப் சிங்கை நோக்கி உங்கள் எடைக்கு எடை நாணயம் தரப்போகிறோம். வந்து தராசில் அமருங்கள்'— என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

ஆயிரக்கணக்கான மக்கள் எடைபோடும் காட்சியைக் காண ஆவலுடன் இருக்கின்றனர்.



வி. பி. சிங்

வி. பி. சிங் எழுந்து நிற்கிறார். தராசில் அமரப் போகிறார் என்று எல்லாரும் எண்ணிக் கொண்டிருக்க, அவரோ 'மைக்' கைப் பிடித்துப் பேசுகிறார்:

என்னை நாணயத்தால் எடைபோடப்போகிறீர்களா? அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். நிதி அமைச்சராக இருந்தபோது நாணயத்தால்என்னைஎடைபோட அனுமதிக்கவில்லை'— என்கிறார்.

ஏமாற்றமடைந்த மக்கள் சிங்கின் நாணயமான பேச்சைக் கேட்டுப் பின்னர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

நாணயமிக்க அரசியல் வாதி அல்லவா அவர். ★

# ஐந்து நிமிடங்களில் எய்ட்ஸ் பரிசோதனை

ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் உள்ளதா இல்லையா என்பதை ஐந்தே நிமிஷங்களில் கண்டறியக் கூடிய புதிய இரத்தப் பரிசோதனை முறை ஒன்றை அமெரிக்க நிறுவனம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறது.

மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைத்து எய்ட்ஸ் நோயை உருவாக்கும் வைரஸுக்கு எய்ட்ஸ் வைரஸ்என்று பெயர்.

இந்த வைரஸ் தாக்கும் போது இதை எதிர்க்கும் எதிர்ப்புப் பொருள்கள் இரத்தத்தில் உருவாகின்றன. எனவே இரத்தத்தில் இவ்வெதிர்ப்புப் பொருள்கள் காணப்பட்டால், எய்ட்ஸ் வைரஸ் தாக்கி இருக்கிறது என்று பொருள்.

இவ்வாறு ஒருவரை எய்ட்ஸ் வைரஸ் தாக்கி இருக்கிறதா என்பதை 5 நிமிடங்களில் கண்டுபிடிப்பதற்கு இப்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய சோதனை துணை புரிகிறது.

இச் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இரத்தத்திற்குள், ரப்பரால் ஆன மிக நுண்ணிய முத்துக்கள்(Latex-beads) தொங்கவிடப்படுகின்றன. இம் முத்துக்கள் மீது ஒரு செயற்கைப் புரதம் பூசப்பட்டுள்ளது. இப்புரதத்தில் எய்ட்ஸ் கிருமியின் மேற்பரப்பின் பகுதிகள் அடங்கியுள்ளன.

இச்சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இரத்தத்தில் எய்ட்ஸ் எதிர்ப்பு உயிரிகள் உருவாகி இருப்பின், அவை இம் முத்துக்களைத் தாக்கி அவற்றில் ஒட்டிக் கொண்டு. அம்முத்துக்களை ஒன்றுடன் ஒன்று பிணைத்து விடுகின்றன. ★

# கணவனுக்கு உதவிய தாமரைக் கண்ணியார்

வெண்பாற் புலவர் தாமரைக் கண்ணியார் 1911 இல் தமிழகத்தில் பிறந்தவர்.

இவரது கணவர் வல்லை பாலசுப்பிரமணியம் சிறந்த கவிஞர்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் மகளுடைய திருமணத்துக்கு வாழ்த்து அனுப்ப வெண்பா எழுத அமர்கிறார்.

வேலைப்பளு காரணமாகச் சிந்தனை ஓடவில்லை.

மூன்று அடிகள் தாம் எழுதுகின்றார். இறுதி அடி வர மறுக்கிறது.

சிவமுத்து மாமகளாம் செல்வி பரமேஸ்வரி

தவத்திலுயர்ந் தான் விசுவ நாதன் அவனியிலே

திங்கள் ஒளியேய்ப்பத் தேனுஞ் சுவையுமென...

......பாட்டு இதற்குமேல் ஓடவில்லை. நெடுநேரமாயிற்று.

பகலுணவிற்குக் கணவரை அழைக்க வந்த தாமரைக் கண்ணியார், 'என்னங்க யோசனை?'— என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

கணவர் நிலைமையைச் சொன்னார்.

உடனே பாடலை வாங்கிப் படித்த தாமரைக் கண்ணியார், 'இது என்னங்க பிரமாதம்'! என்று கூறிவிட்டு- 'எங்களைப் போல் வாழ்வீர் இசைந்து' என்று முடித்துவிடுங்களேன்— என்றார்.

கணவருக்கு மேனி சிலிர்த்துவிட்டது. அவருக்கு மட்டுமா! நமக்கும் கூடத்தானே!

# கரப்பான் கொல்லிப் பூச்சிகள் எப்படி கரப்பானை கொல்கின்றன?

கரப்பான் பூச்சிகளை, கரப்பான் கொல்லிப் பூச்சிகள் எப்படிக் கொல்கின்றன?

அது பற்றிய விளக்கம் இங்கு தரப்படுகிறது.

கரப்பான்பூச்சிகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கின்றன என்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

பெண் கரப்பான் பூச்சி ஒரு தடவை பதினுன்கு முட்டைகளை இடும். அவை ஏழு, ஏழாக இரண்டு உறைகளில் இருக்கும். அந்த உறைகளை இருளான மறைவிடங்களில் தனது எச்சிலைத் தடவி ஒட்ட வைத்துவிடும் தாய்க்கரப்பான்.

அலுமாரிகளின் உட்புறம், கதிரைகளின் அடிப்பாகம், இருளான சுவர் மூலைகள், புத்தகங்கள், அலுமாரிகளில் உள்ள புடைவைகள் ஆகியவற்றில் எல்லாம் முட்டை உறைகளை ஒட்ட வைத்துவிடும்.

முப்பத்தைந்து நாட்களில் அந்த முட்டைகள் பொரித்து கரப்பான் குஞ்சுகள் வெளி வரும்.

அப்பொழுது அவற்றிற்கு இறகு இருப்பதில்லை. அவைகள் இறகு முளைத்து பருவமடைந்து முட்டைகளை இட்டு இறக்கின்றன. இது எல்லாம் மூன்று முதல் நான்கு வாரங்களில் நடக்கின்றன.

ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கரப்பான் கொல்லிப் பூச்சிகளில் இரண்டு, கரப்பான் பூச்சிகளின் முட்டை உறைகளின் மீது முட்டையிடும் பழக்கமுடையவை. தமது குஞ்சுகளுக்கு உணவு கிடைக்கவேண்டும் என்பதற்காகவே அவை அப்படிச் செய்கின்றன.

குஞ்சுகள் பொரித்ததும் அவை கரப்பான் பூச்சி முட்டைகளை உண்டு விடும். இந்தப் பூச்சிகளில் ஒன்று கரிய நிறமுடைய சிறிய பூச்சி, மற்றது பெரியது. கறுப்பு நிறமுடையது.

மூன்றுவது பூச்சியும் பெரியது. நீலப்பச்சை நிறமுடையது. இது கரப்பான் குஞ்சுகளைத் தேடிப்பிடித்து அவற்றின் அடிவயிற்றில் முட்டை இடுகிறது. முட்டை பொரித்ததும் அந்தப் புழுக்கள் கரப்பான் பூச்சியின் இரத்தத்தை உறிஞ்சிக்குடித்து அவைகளைக் கொன்று விடும்.

இந்த மூன்று வகைக் கரப்பான் பூச்சிக் கொல்லிப்பூச்சிகளை இனப்பெருக்கம் செய்து பரப்பும் வகைகளைப் பற்றி இப்போது கொழும்பில் ஆராய்ச்சி நடக்கிறது;

(நன்றி: பஞேஸ்)

# மனிதனில் மிருகமா? பாரதியார் விளக்கம்

மனிதனில் மிருகம் உண்டு. எப்படி என்பதை மகாகவி பாரதியார் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

வஞ்சனையாலும் சூதினுலும் சமயத்துக்கு ஏற்ப பலவித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் நரி.

ஊக்கமில்லாமல் ஏதேனும் ஒன்றை நினைத்துக் கொண்டு மனஞ் சோர்ந்து தலை கவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன் தேவாங்கு!

தர்மத்திலும், புகழிலும் விருப்பம் இல்லாமல் அற்ப சுகத்திலேயே மூழ்கிக்கிடப்பவன் பன்றி!

சுதந்திரத்தில் இச்சையின்றி, பிறருக்குப் பிரியமாய் நடந்து கொண்டு, அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் நாய்!

பிறரது அக்கிரமத்தை நிறுத்த முயலாமல் தனது மந்த குணத்தால் பொறுத்துக் கொண்டிருப்பவன் கழுதை!

தான் சிரமப்படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்ணுபவன் கழுகு! ★



பாரதியார்

## தீக்கதிர்!

★ ஏ பெண்ணே!
நிலவை உருக்கி
உன் உடல்
சமைத்தவன்,
நினைவில் மட்டும்
நெருப்பை வைத்து
தைத்து விட்டானு?

★ அப்புறமேன்
தென்றல்
வீச வேண்டிய
உன் விழிகளில்
தீக்கதிர்?

— சக்தி

# வெள்ளையனுல் தூக்கி வீசப்பட்டு விழுந்த இடத்தில் காந்திஜிக்கு வெண்கலச்சிலை நிறுவப்படுகிறது

காந்திஜியை முதலில் வெளியேற்றியது வெள்ளையர்கள்தான்.

அதன்பின்னர்தான் காந்திஜி 'வெள்ளையனே வெளியேறு' என்று இயக்கத்தை ஆரம்பித்தார்.

காந்தியை வெள்ளையன் வெளியேற்றியது நாட்டை விட்டு அல்ல. ரயில் பெட்டியைவிட்டுத்தான் அவனுல் வெளியேற்றமுடிந்தது.

அந்தச் சம்பவம் 7-6-1893 இல் [illegible] burg) பீற்றர்மரிற்ஸ் பேர்க்கும் (Johannesburg)ஜோஹன்னஸ் பேர்க்கும் இடையில் ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது.

வெள்ளையர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பெட்டியில் கறுப்பர் ஒருவர் அமர்ந்திருக்கிறார்.

வெள்ளையர்கள் சிலர் பெட்டியில் ஏறுகின்றனர். கறுப்பரைக் காண்கின்றனர்.

வெள்ளையருக்கு என்ற பெட்டியில் கறுப்பரா?

கறுப்பரைத் தூக்கி பெட்டிக்கு வெளியே பிளாட்பாரத்தில் எறிகின்றனர்.

கறுப்பர் காந்தியானுர்; பின்னர் மகாத்மா ஆனுர்.

ரயில் பெட்டியை விட்டு வெளியேற்றிய வெள்ளையரை நாட்டை விட்டே காந்திஜி வெளியேற்றினுர்.



வெள்ளையரால் காந்திஜி தூக்கி எறியப்பட்டு 7-6-1993 அன்று நூறு ஆண்டுகள் ஆகப் போகின்றன.

அன்று 7 - 6 - 1993 — காந்திஜியின் வெண்கலச் சிலை ஒன்று திரை நீக்கம் செய்யப் படவுள்ளது.

வெள்ளையரால் தூக்கி எறியப்பட்ட காந்திஜி ரயில் பிளாட்பாரத்தில் எந்த இடத்தில் விழுந்தாரோ அந்தஇடத்தில் இந்த வெண்கலச்சிலை கம்பீரமாக நிற்கப்போகிறது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

(க. பொ. த. சாதாரண தரத்திற்குரியது)

விஞ்ஞானம்

## அணுவின் அமைப்பு

சடப்பொருள்கள் தொடர்பான உண்மைகளை அறிவதற்காக ஆதிகாலம் தொடக்கம் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அவை தொடர்பான பல்வேறு கருத்துக்கள் அனுமானங்கள் மாதிரி உருக்கள் தொடர்ந்து சமர்ப்பிக்கப்படுகின்றன. பல ஆய்வுகளின்படி சடப்பொருள்கள் மிகச்சிறிய துணிக்கைகளால் ஆக்கப்பட்டது என அறியப்பட்டுள்ளது.

### டால்ரனின் அணுக்கொள்கை

1808 ஆம் ஆண்டில் ஜோன் டால்ரன் என்ற விஞ்ஞானி அணுக்கள் தொடர்பாக சில கருத்துக்களை வெளியிட்டார்.

1. மேலும் பிரிக்கமுடியாத துணிக்கைகளால் சடப்பொருள்கள் ஆக்கப்பட்டுள்ளன. இத்துணிக்கைகள் அணுக்கள் எனப்படும்.
2. மூலகம் ஒன்றின் அணுக்களை ஆக்கவும் அழிக்கவும் முடியாது.
3. ஒரே மூலகத்தின் எல்லா அணுக்களும் திணிவு, கனவளவு ஆகியவற்றில் ஒத்தவையாக இருக்கும்.
4. வெவ்வேறு மூலகங்களின் அணுக்களின் திணிவுகளும், கனவளவுகளும் வேறுபட்டதாக இருக்கும்.

டால்ரனின் காலத்தில் அணு என்பது பிரிக்கமுடியாததும், தனியினத்துவம் வாய்ந்ததுமானது என்று கருதப்பட்டது. டால்ரனின் காலத்தின் பின்பு நடந்த ஆராய்ச்சிகள் இக்கருத்து பிழையானதென நிறுவின.

### திணிவுககாப்பு விதி

அணுக்களை அழிக்க முடியாது. இரசாயனத் தாக்கமொன்றிற்கு உள்ளாகும் தாக்கிகளினதும் விளைவுகளினதும் மொத்தக் கூட்டுத் தொகை மாறுதிருக்கும்.

### அணுபற்றிய தகவல்கள்

அணுக்களில் மிகச்சிறிய அணு ஐதரசன் (H) இந்த அணுக்கள் ஐதரசன் குண்டுத் தயாரிப்பில் பயன்படும்.

அணுக்களில் மிப்பெரிய அணு யுரேனியம் (U) இது அணுக்குண்டுத் தயாரிப்பில் பயன்படும்.

அணுச்சக்தியை இரண்டு முறைகளில் தோற்றுவிக்கலாம்.

1. கருப்பிளவு அணுச்சக்தி.
2. கரு உருக்கல் அணுச்சக்தி.

### அணுவின் பகுதிகள்

அணு இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. கரு.
2. சக்திப்படிகள். (சக்தி மட்டங்கள்)

அணுவில் மூன்று வகைத் துணிக்கைகள் காணப்படுகின்றன.

1. புரோத்தன்.
2. நியூத்திரன்.
3. இலத்திரன்.

அணுவின் கருவில் புரோத்தன்களும், நியூத்திரன்களும் உண்டு. இவற்றைக் கருவன்கள் அல்லது நியூக்கிளியன்கள் என்று கூறப்படுகிறது. கருவைச்சுற்றி இலத்திரன்கள் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.

### புரோத்தன்கள் (P)

1. இது கால்வாய்க் கதிர்ப் பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.
2. நேர் மின்னேற்றம் கொண்ட துணிக்கை.
3. அணுக்கருவில் காணப்படும்.
4. இதனைக் கண்டுபிடித்தவர் இரதபோட் என்பவர்.
5. இலத்திரன்களின் எண்ணிக்கைக்குச் சமனான துணிக்கை.
6. அண்ணளவாக நியூத்திரனின் திணிவுக்குச் சமனான துணிக்கை.

### நியூத்திரன்கள் (N)

1. கதிர்த்தொழிற்பாட்டினால் வெளியேறிய அல்பா கதிர்கள் பெரிலியம் அணுக் கருக்களுடன் மோதுவதால் நியூத்திரன்கள் கண்டுபிடிக்கப் பட்டது.
2. மின்னேற்றம் அற்ற துணிக்கை நடுநிலையானது.
3. கருவிலுள்ள துணிக்கை.
4. அண்ணளவாக புரோத்தனின் திணிவுக்குச் சமனான துணிக்கை.
5. நியூத்திரனைக் கண்டு பிடித்தவர் ஜேம்ஸ் சட்விக்.

### இலத்திரன்கள் (E)

1. கதோட்டுக் கதிர்ப் பரிசோதனைமூலம் கண்டுபிடிக்கப் பட்டது.
2. மறை மின்னேற்றம் கொண்ட துணிக்கை.
3. திணிவற்ற துணிக்கை.
4. கருவைச்சுற்றி சுழலும் துணிக்கை.
5. புரோத்தன்களின் எண்ணிக்கைக்குச் சமனான துணிக்கை.
6. இலத்திரனைக் கண்டு பிடித்தவர் ஜே. ஜே. தொம்சன் ஆவார்.
7. ஐதரசன் அணுவின் 1/1824 பங்கு திணிவுள்ள துணிக்கை.
8. இரசாயனத் தாக்கங்களுக்குக் காரணமான துணிக்கை.

**குறிப்பு:-**

இலத்திரன்களின் திணிவு மிமிகச்சிறிதென்பதால் அணுத்திணிவைக் குறிப்பிடும் போது இலத்திரனின் திணிவு புறக்கணிக்கப்படுகிறது.

### அணு நடுநிலையானது

ஒவ்வொரு மூலகத்திலும் காணப்படுகின்ற அணுக்கள் ஒரு குறித்த எண்ணிக்கை உள்ள புரோத்தன்களையும் இலத்திரன்களையும் கொண்டுள்ளது. அணுவிலுள்ள நேரேற்றத் துணிக்கைகளின் எண்ணிக்கையும் மறையேற்றத் துணிக்கைகளின் எண்ணிக்கையும் சமனாகக் காணப்பட்டது. இதனால் அணு நடு நிலையானது.

### அணுவை விவரிக்கும் எண்கள்

அணுவை விவரிக்கும் எண்களாவன.

1. அணு எண்
2. திணிவெண் (அணுத் திணிவு

### அணு எண்

ஒருமூலகத்தின் அணுவின் கருவிலுள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை அம்மூலகத்தின் அணு எண் எனப் படும்

ஒரு மூலகத்தின் அணுவிலுள்ள எல்லா இலத்திரன்களினதும் எண்ணிக்கை அணு எண் எனவும் கூறலாம். ஏனெனில் புரோத்தன்களின் எண்ணிக்கை இலத்திரன்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

### திணிவெண்

(அணுத்திணிவு)

ஒரு மூலகத்தின் அணுக் கருவிலுள்ள புரோத்தன்களினதும் நியூத்திரன்களினதும் கூட்டுத்தொகை மூலகத்தின் திணிவெண் எனப்படும்.

### சமதானிகள்

ஒரே அணு எண்ணையும் வேறுபட்ட அணுத்திணிவையும் கொண்ட அணுக்கள் சமதானிகள் அல்லது மாற்றுருக்கள் எனப்படுகிறது.

ஆக்கம்:
- வேலணையூர் கே. ஆனந்தன் -

# குழந்தைகளின் குறைபாடுகளை நீக்க உதவக் கூடிய பயிற்சிகள்

மூன்று வயதுக் குழந்தை ராதா பால் குடித்துக்கொண்டிருந்தாள். பால் குடித்து முடிப்பதற்குள் சட்டையில் எல்லாம் ஊற்றிக்கொண்டாள்.

'ராதா...! ஒரு நாளாவது பாலை உன்மேல் ஊற்றாமல் குடிக்கமுடியாதா...?' தாயின் புலம்பல் இது.

ராஜேஸ் பாடசாலையில் இருந்து திரும்பி வருகிறான். வயது நான்கு. அவனது முழங்காலில் அடிபட்டு இரத்தம் கசிந்துகொண்டு இருக்கிறது. அவனை வரவேற்ற தாய் அருகில் நின்றுகொண்டிருந்த அடுத்த வீட்டு மாமியிடம் சொல்கிறாள்;

'எங்க ராஜேஸ் ஒருநாளாவது பாடசாலையில் இருந்து உருப்படியாகத் திரும்பமாட்டான். நேற்றைக்கு முழங்கையிலே அடி... இன்றைக்கு முழங்காலைப் பெயர்த்துச் கொண்டு வந்து நிற்கிறான்... நாளைக்கு எங்கே அடிபட்டுக் கொண்டு வருவானோ...?'

5 வயது மகன் பிரகாஷை அழைத்துக்கொண்டு ஏதாவது ஒரு விருந்துக்குச் செல்வதென்றால் அவனது பெற்றோருக்குப் பயம்.

காரணம், எந்த ஒரு விருந்துக்கு அவன் சென்றாலும் எதையாவது உடைக்காமல் திரும்பியதில்லை. இதனால் அவனை அழைத்துக்கொண்டு விருந்துக்குப் போவதைத் தவிர்த்து விடுகிறார்கள்.

இது போன்ற குழந்தைகளைப் பல வீடுகளிலும் காணலாம்.

'அவனுக்கு எதிலும் அலட்சியம், கவனமே கிடையாது' என்று காரணமாகச் சொல்லி சமாதானம் அடைந்து விடுகிறார்கள் பெற்றோர்கள்.

ஆனால் அவர்கள் சொல்லும் காரணம் உண்மையானது அல்ல.

இந்தக் குழந்தைகளுக்கு உடல் உறுப்புக்களில் அசைவுகளை வேண்டிய நேரத்தில் வேண்டிய தூரத்தில் வேண்டிய அளவு இயக்குவதில் (Co-ordina ion of Muscles) குறைபாடு இருக்கிறது. அவர்களுடைய நடத்தைகளுக்கு இந்தக் குறைபாடே காரணம்.

பெற்றோர்களுக்கும் இப்படி ஒரு குறைபாடு தன் குழந்தைகளுக்கு இருக்கிறது என்பது தெரிவதில்லை.

அந்தக் குறைபாட்டை நீக்க எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் அப்படியே வளர்ந்து வரும் குழந்தை பிற்காலத்திலும் தான் செய்யும் காரியங்களை ஒழுங்காகச் செய்ய முடிவதில்லை.

இந்த மாதிரிக் குழந்தைகள் கூட்டாகச் சேர்ந்து விளையாடுவதைத் தவிர்க்கிறார்கள். உதாரணமாகப் பந்தைப் பிடித்து விளையாடும் விளையாட்டில் எங்கே தங்களால் ஒழுங்காகப் பந்தைப் பிடித்து எறிய முடியாமல் போய் விடுமோ என்ற பயத்தில் விளையாட்டில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொள்கிறார்கள்.

இவர்களுடைய கையெழுத்து மிகமோசமாக இருக்கும். பேனா பிடித்து எழுதுவது என்பது இவர்களுக்கு என்னவோ இமய மலையில் ஏறி எதையோ சாதிப்பது போல் இருக்கும்.

மேற்கூறிய குறைகள் எல்லாம் ஏழு, எட்டு வயதுக்கு மேலும் தொடர்ந்து காணப் பட்டால் அந்தக் குறிப்பிட்ட குழந்தைக்கு கோர்டினேஷன்' பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம்.

இத்துறையில் இருபது வருட ஆராய்ச்சி செய்த பேராசிரியர் ஜுடித் லாஸ்லோ (Profesor Judith Laslo) சொல்கிறார்,

இந்த மாதிரிக் குறையுள்ள குழந்தைகள் மூளை வளர்ச்சிக் குறைபாடு உள்ளவர்கள் இல்லை. இந்த மாதிரிக் குறைகள் ஏற்படுவதற்கு பெரும்பாலும் அந்தக் குழந்தைகள் தனித்து வளருவதும், ஒருவராலும் தூக்கி அணைத்து கொஞ்சி வளர்க்கப்படாத நிலையும், அதிக கூச்ச சுபாவமுள்ளதாக இருப்பதும் காரணங்களாகும்.

கண்களில் குறை இருந்தால் கண்ணாடி போட்டு சரியாக்குவது போல் உடல் உறுப்புகளின் இயக்கத்தில் குறைபாடுகள் இருந்தால் பயிற்சி மூலம் அதைச் சரிப் படுத்தலாம்.

பயிற்சிகள் கண்ணாடியைப் போல என்று சொல்கிறார் இவர். இக்குறை நீங்குவதற்குத் தேவையான பயிற்சிகளை வீட்டில் இருந்தே கொடுக்கலாம்.

ரயில் பாதையில் ஓடும் விளையாட்டு. திறந்த பெட்டிகளில் பயணிகள் உட்கார்ந்து இருக்கிறார்கள். ரயிலை வேகமாகவோ, மெதுவாகவோ ஓடச் செய்து பயணிகளை பெட்டிகளில் ஏற்றவோ இறக்கவோ சொல்லலாம்.

இப்படிச் செய்வதால் குழந்தைகளின் உடல் உறுப்புக்களின் அசைவுகளை தகுந்த அளவு உபயோகப்படுத்த பயிற்சி கிடைக்கிறது.

'கீ' கொடுத்து ஓடும் ரயில், ஹெலிகாப்டரை குறிப்பிட்ட தூரத்தில் ஓட விட்டு எடுக்கச் சொல்லலாம். குறிப்பட்ட உயரத்தில் பந்துகளை எறிந்து பிடிக்கச் செய்து பயிற்சி தரலாம்.


இவையாவும் சிறிய எளிமையான பயிற்சிகள் போல் தோன்றும். குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு தங்களுடைய குறைபாடுகளை அறவே போக்கவும் அல்லது முடிந்த அளவு குறைக்கவும் இந்தப் பயற்சிகள் உதவும்.

### கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்

குழந்தைகள் விருப்பப் படாத எதையும் வலுக்கட்டாயமாகத் திணிக்கக் கூடாது. குழந்தைகள் இந்தப் பயிற்சிகளை பயிற்சிகளாக எண்ணாமல் விளையாட்டுகள் மாதிரி நினைக்கும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

அவர்கள் அந்தப் பயிற்சிகளை நல்ல முறையில் செய்தால் அவர்களைப் பாராட்ட வேண்டும். பாராட்டு மிகச் சிறந்த டொனிக்.

பயிற்சிகளின் போது எதையாவது தவறுதலாகக் கீழே போட்டு உடைத்துவிட்டாலோ ஆத்திரப்படாதீர்கள். ★




# நியாயமான தீர்ப்பு!

ஓர் ஊரில் பெரிய ராசா, பிரபு எனும் அபூர்வ சகோதரர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒருநாள் பகலில் ஒரு காட்டு வழியில் நடந்து சென்றனர்.

வெயில் அதிகமாக இருந்ததால் ஒரு மரநிழலிலே தங்கலாயினர். சிறிது தொலைவில் உள்ள ஒரு தோட்டத்தில் வெள்ளரிப்பழங்கள் இருப்பதைக் கண்டு, பெரிய ராசா ஐந்துபழங்களும் பிரபு மூன்று பழங்களுமாக எட்டுப்பழங்களை வாங்கிக் கொண்டனர்.

ஓர் ஆற்றங்கரையை அடைந்து அப்பழங்களை உண்ணத் தொடங்கினர். அப்பொழுது அவ்வழியால் வந்த ஒரு முதியவர்,

'தாகம் பொறுக்க முடியவில்லை; எனக்கும் வெள்ளரிப் பழம் தருவீர்களா?' என்று கேட்டார். அவர்களும் உடன்பட்டனர்.

அவர்களிடமிருந்த வெள்ளரிப்பழங்கள் ஒவ்வொன்றையும் மும் மூன்றாக அம்முதியவர் வெட்டினார். இருபத்தி நான்கு துண்டுகள் பெறப் பட்டது. ஆளுக்கு எட்டுத் துண்டுகளாக, அவற்றை மூவரும் உண்டு பசியாறினர்.

நல்லையா தாத்தா எட்டு ரூபாய்களை அவர்களிடம் கொடுத்து 'நீங்கள் என் பசியைத் தீர்த்தீர்கள். இதனைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.

பெரிய ராசா: ஆ! அவர் எவ்வளவு நல்ல மனிதர்! இந்தச் சிறிய உதவிக்காக எட்டுரூபாய் கொடுத்தாரே அவரை அழைத்து இதனைத் திருப்பிக் கொடுப்போமா? என்றார்.

பிரபு: அது சரிதான் கைக்குக் கிடைத்ததை ஏன் விட வேண்டும்? நாங்கள் இருவரும் நன்னான்கு ரூபாயாக எடுத்துக் கொள்வோம்.

பெரியராசா: அதெப்படி முடியும் எனது பழங்கள் ஐந்து. உனது பழங்கள் மூன்று. ஆகவே எனக்கு ஐந்து ரூபா உனக்கு மூன்று ரூபா அது தான் நியாயம். அப்படித் தான் செய்யவேண்டும்.

பிரபு: நீங்கள் சொல்வது சரியல்ல நல்லையா முதியவர் தந்த பணத்தை நியாயமாகப் பிரிக்கவேண்டும்.

பெரியராசா: அதோ தர்ம ராசா எனும் பெரியவர் வருகிறார். அவர் சொல்கிறபடி இப்பணத்தைப் பிரித்துக் கொள்வோம். தர்மராசாவிடம் நடந்ததைக் கூறிய போது,

தர்மராசாவோ பிரபுவைப் பார்த்து உனக்கு மூன்று ரூபா பெற விருப்பமில்லையா? எனக் கேட்டார்.

பிரபு: இல்லை ஐயா! எனக்கு அரைவாசிப் பணம் வேண்டும் நியாயமாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

தர்மராசா: சரி அப்படியே செய்கிறேன் பெரியராசாவுக்கு ஏழு ரூபாய்; உனக்கு ஒரு ரூபாய் இதுவே எனது தீர்ப்பு.

பிரபு: ஐயோ பெரியவரே! இதென்ன தீர்ப்பு! அநியாயம்!! அநியாயம்!! இது அநீதி?

தர்மராசா: ஆம் இது சரியான நியாயம்தான்: உம்முடைய பழங்கள் மூன்று. பெரிய ராசாவின் பழங்கள் ஐந்து, பெரிய ராசாவின்



பழங்கள் பதினைந்து துண்டுகளாக வெட்டப்பட்டன உமது பழங்கள் ஒன்பது துண்டுகளாக வெட்டப் பட்டன.

அதில் நீர் எட்டுத்துண்டுகள் சாப்பிட்டீர். உம்முடைய ஒன்பது துண்டுகளில் மிகுதியான ஒரு துண்டையே பெரியவர் சாப்பிட்டார். பெரியராசாவின் பதினைந்து துண்டுகளில், பெரியராசா எட்டைச் சாப்பிடப் பெரியவர் நல்லையா ஏழு துண்டுகளைச் சாப்பிட்டார் ஆகையால் அவர் சாப்பிட்ட எட்டுத் துண்டுகளில் ஏழு பெரிய ராசாவினுடையது. ஒன்று உம்முடையது. ஆகவே பெரிய ராசாவுக்கு ஏழு ரூபா உமக்கு ஒரு ரூபாய். இது தானே நியாயம்.

செ. பிலிப் றெனேலா

## வேண்டும்

இன்றைய மாணவர் நீவிர் — நாளை
இகத்தினை ஆள்கின்ற தலைவர்கள் உண்மை
என்றுமே அன்பு நல்நீதி — நம்
எண்ணத்தில் நல்லன தோன்றிட வேண்டும்.

கல்வியில் ஓங்கிடல் வேண்டும் — தொழில்
காட்டும் உழைப்பில் உறுதிகள் வேண்டும்
வல்லவர் நீர் ஒன்றி நாட்டின் - ஏழ்மை
வாழ்க்கையின் சின்னம் களைந்திடல் வேண்டும்.

வள்ளுவன் தந்த குறளில் — தூய
வாழ்வின் ஒளிகள் துலங்கிடும் காண்பீர்
தெள்ளுதமிழ் அதைக் கற்று - இத்
தேசம் ஒளிர்ந்திடச் செய்வீர்.

காணும் புதுமை உலகின் - எழில்
காட்டும் வளங்கள் உயர்வுகள் யாவும்
மாணவர் உலகமே உன்னால் - எங்கும்
மலர்ந்திட உன் அறிவுயர்ந்திடல் வேண்டும்.

— நெடுந்தீவு [illegible]

## பொன்மொழிகள்

★ உழைப்பைப் புறக்கணிக்கும் மனிதன், மனிதத் தன்மையை இழந்த விலங்காவான்.

— ஜோவெனி டெர்ரி

★ கடும் உழைப்பை மேற்கொண்டவர்கள் வாழ்வில் தோல்வியுறுவதில்லை.

-எலிஸபெத் பிளாக்வெல்

# சுவையான பழ ஜாம் தயாரிப்பது எப்படி?

பழ'சீஸன்' ஆரம்பமாகி விட்டது. இன்னும் சிலநாட்களில் சந்தையிலும், பழக் கடைகளிலும் விதம் விதமான பழங்கள் குவிந்து இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இதைப் பயன்படுத்தி நாவுக்கு ருசியான பலவகை உணவு வகைகளைச் செய்து வீட்டில் உள்ளவர்களையும் வரும் விருந்தினர்களையும் மகிழ்விக்கலாம்.

முதலில் பழங்களைப் பயன்படுத்தி எப்படி ஜாம் தயாரிக்கலாம் என்பதையும், புருட் ஸலட் செய்யும் விதத்தையும் பார்ப்போம்.



### மாம்பழ ஜாம்

**தேவையான பொருள்கள்:**

மாம்பழம் - ½ கிலோ
சீனி — ½ கிலோ
வனிலா - சிறிதளவு
தேசிக்காய் - 1

**செய்முறை:-**

மாம்பழத்தை சீவி சிறுசிறு துண்டுகளாகவெட்டிபழத்தை அவியவிட்டு, அவிந்துவரும் பாத்திரத்தில் சீனியைக் கொட்டுதல்வேண்டும். பின் பாணியாக இறுகிவரும்வரை காய்ச்சவேண்டும்.

ஜாம் பதம் வரும்போது தேசிக்காய்ப் புளியையும், வனிலாவையும் விட்டு இறக்கல்வேண்டும்.

ஆறியதும் சுத்திகரிக்கப் பட்ட போத்தலில் இட்டு அடைத்து பின் விரும்பிய நேரத்தில் எடுத்துப் பரிமாறலாம்.

### புருட்சலற்

**தேவையான பொருள்கள்:**

பப்பாசிப் பழம் -1
அன்னாசிப்பழம் -½
மாம்பழம் - 5
வாழைப்பழம் - 10
பலாப்பழம் 20 சுளை
சீனி 100கிராம்அல்லது ¼ருத்ரின்பால் - ½ வாசி
தேசிக்காய் - ½ பாதி.

**செய்முறை:-**

பழங்களின் தோல் சீவி ஒரு பெரிய பாத்திரத்தினுள் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் போடவேண்டும்.

பின் சீனியைப் பாணியாகக் காய்ச்சி பழம் உள்ள பாத்திரத்தில் ஊற்றவேண்டும். ரின்பாலில் அரைவாசியையும் பழத்தினுள் ஊற்றி எல்லாவற்றையும் ஒரு கரண்டியால் கலந்து பாதித் தேசிக்காயையும் பிழிந்து விடவும். பின் பாத்திரத்தை குளிர்சாதனப் பெட்டியினுள் (Fridge) 2மணி நேரம் வைக்கவேண்டும். பின் எடுத்து பரிமாறலாம்.

### பப்பாசிப்பழ ஜாம்

**தேவையான பொருள்கள்:**

பப்பாசிப்பழம் - ½ கிலோ
சீனி - ½ கிலோ
தேசிக்காய் - 1
வனிலா - சிறிதளவு

**செய்முறை:-**

பப்பாசிப்பழத்தின் தோலை நன்றாகச்சீவி அதன் விதைகளை தட்டி துப்பரவு செய்தல் வேண்டும். பின்பு பப்பாசிப் பழத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு கரண்டியால் நசித்து அவனுள் சீனியையும் இடுதல் வேண்டு.

பின் கலவையை அடுப்பில் வைத்து காய்ச்சி இறுகிவந்ததும் அதனுள் வனிலாவையும், தேசிக்காய்ப் புளியையும் இடுதல்வேண்டும். ஆறியபின் சுத்திகரிக்கப்பட்ட போத்தலினுள் இட்டு அடைத்து வைத்தல்வேண்டும்.

### தக்காளி ஜாம்

**தேவையான பொருள்கள்:**

தக்காளி - ½ கிலோ
சீனி - ½ கிலோ
தேசிக்காய் - ½
வனிலா - சிறிதளவு.

**செய்முறை:-**

முதலில் தக்காளியை சுடு தண்ணீரில் போட்டு தோலை உரிக்கவேண்டும். பின் அதை ஒரு பாத்திரத்தில் போட்டு மசித்து அதை ஒரு வெள்ளை துணியில் இட்டு வித்துகளை வடித்து எடுக்கவேண்டும் பின் அடுப்பில் வைத்து காய்ச்ச வேண்டும்.

பாணியாக வந்ததும் சீனியையும் வனிலாவையும் தேசிக்காயையும் இட்டு காய்ச்சிய பின் இறக்குதல்வேண்டும். ஆறியதும் சுத்திகரிக்கப்பட்ட போத்தலில் இட்டு விரும்பிய நேரத்தில் பரிமாறலாம். ★

- பிரபாலினி கணேசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தாராமினுல் பாராட்டப் பெற்ற தமிழ் டைரக்டர் மகேந்திரன்

சப்தங்களும் நாடகத் தனங்களும் சினிமா அல்ல...

நிஜவாழ்க்கையில் அன்ருடம் நடக்கிற விஷயங்களை இயற்கையான பாணியில் 'விஷ¬வலாக' திரையில் காட்டுவதே சினிமா'

இப்புதிய கோணத்தில் திரைப்படங்களை இயக்குகிற டைரக்டர் என்ற பெயரைப் பெற்றவர் திரு. மகேந்திரன்.

இவர் இயக்கிய முதல்படம் 'முள்ளும் மலரும்'. இது பெரிய வெற்றிப் படமாக அமைந்தது.

பாலுமகேந்திராவை ஒளிப்பதிவாளராக தமிழ்த் திரை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் திரு. மகேந்திரன்.

வார்த்தைகளால் விளக்க வேண்டியதை இயற்கையான காட்சிகளால் விளக்குகிற புதிய யுக்தியைக் கையாண்ட டைரக்டர் திரு. மகேந்திரன்.

'உதிரிப்பூக்கள்' படத்தில் ஒரு கட்டம்...

...சிடுசிடு என்று மனைவியிடம் கோபப்படும் கணவன்.

ஒருநாள் தன் மனைவிக்கு தலையில் சூட பூ வாங்கி தன் மகன் மூலம் கொடுத்து அனுப்புகிருன் கணவன்.

'இந்தப் பூவை தலையில் வைத்துக்கொண்டு அப்பாவோட சினிமாவுக்கு கிளம்பணுமாம், —இப்படிக் கூறியபடி பூவைஅம்மாவிடம் கொடுக்கிருன் மகன்.

அதைக் கேட்டவாறே வீட்டைவிட்டு வெளியில் வந்து தற்செயலாக வானத்தைப் பார்க்கிருள் அந்தத் தாய்!

அங்கே 'இப்போது மழை வரும்' என்று சொல்வது போல கருமேகம் திரள்வதைப் படம்பிடித்துக் காட்டுகிறது கமரா!

இப்படி இயற்கையான பாணியில், வசனமில்லாமல் கருத்தைச் சொல்லியிருப்பவர் மகேந்திரன்.

இன்னெரு படம் 'பூட்டாத பூட்டுக்கள்...'

...கணவனைப் பிரிந்து காதலனோடு ஓடிய ஒரு பெண் கர்ப்பம் தரித்த நிலையில், காதலனை விட்டு விட்டு மீண்டும் கணவனோடு சேர்ந்துவாழ திரும்பி வருகிருள்!

வில்வண்டியில் வந்து இறங்கும் அவள், கணவன் முகத்தைப் பார்க்கத் தைரியம் இல்லாமல் ஒரு சுவர் மீது சாய்ந்து, முகத்தைப் புதைத்தபடி அழுகிருள்.

கணவன் அவள் அருகே செல்கிருன். அவளது தோள்பட்டையில், சேலைமீது ஒரு வைக்கோல் துண்டு ஒட்டிக் கொண்டிருக்கிறது.

அதைக் கீழே தட்டிவிட்டபடி அவளை அரவணைத்தவாறு கூட்டி வருகிருன் கணவன்.

பழையனவற்றை மறந்துவிட்டேன் என்று கணவன் சொல்லாமல் சொல்வது போல, அதேசமயத்தில் மிக இயற்கையாக அமைந்திருந்தது இந்தக்காட்சி!

'நெஞ்சத்தைக் கிள்ளாதே' திரைப்படத்துக்காக வழங்கப்பட்ட தேசிய விருதைப்பெற மகேந்திரன் புதுடில்லி சென்ருர்.

அந்த ஆண்டில் சிறந்த படங்கள், கலைஞர்கள் தேர்வுக்கான நடுவர்குழுத் தலைவராகஇருந்தவர் இந்திப் படவுலக பிரபல டைரக்டர் சாந்தாராம்.

விருது வழங்கிய மேடையிலேயே மகேந்திரனை சாந்தாராம் கைகுலுக்கிப் பாராட்டினுர்.

மேலை நாட்டுப் பாணியில் படம் எடுப்பவர் என்று வர்ணிக்கப்பட்டவர் டைரக்டர் எஸ். பாலசந்தர். இவர் பிரபல வீணை வித்துவானுங்கூட.

'உதிரிப்பூக்கள்' படத்தை எனது குடும்பத்தோடு மொத்தம் 6 முறை சென்றுபார்த்தேன்! —என்று பாாாட்டினுர் வீணை பாலச்சந்தர்.

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்குக் காரணம் என்ன?

மகேந்திரன் கூறுகிருர்:

படத்தின் 'ஸ்கிரிப்ட்' அல்லது 'ட்ரீட் மெண்ட்'.

'ரசிக்கிறபடி கொடுத்தால் எந்த விஷயத்தையும் மக்கள் ரசிப்பார்கள். ரசிகர்களும், டைரக்டர்களும் வெவ்வேறு ஜாதி அல்ல.. ஒரே ஜாதி தான். எல்லாரும் மனிதர்கள் தான்.'—

டைரக்டர்கள் எல்லாம் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்லர். இளையான்குடி என்னும் சிற்றூரில் இருந்துவந்த ஒரு சாதாரண மனிதன்தான் இந்த மகேந்திரன்' —இப்படி வாதங்களை அடுக்குகிருர் மகேந்திரன்.

4 திரைப்படங்களுக்கு முழுமையான ஸ்கிரிப்ட், ட்ரீட்மெண்ட் எழுதி முடித்து இருக்கும் திரு. மகேந்திரன் 'இந்த ஆண்டு இறுதிக்குள் தான் இயக்கிய படங்கள் வெளியாகும்' —என்று கூறுகிருர். (எ-4)

# நிறம் மாறும் சினிமா!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கறுப்பு மற்றும்வெள்ளை நிறத்தில் எடுக்கப்பட்ட சினிமா படங்களை இன்று வண்ணப்படமாகப் பார்க்க முடியும்.

அமெரிக்காவில் இப்போது பழைய கறுப்பு - வெள்ளைப் படங்களை வண்ணப் படங்களாக மாற்றி டெலிவிஷனில் ஒளிபரப்புவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பே இந்தத்தொழில் நுட்பம் அமெரிக்காவில் வளர்ந்துவிட்டாலும் இப்போதுதான் வியாபார ரீதியாக சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

டொரண்டோ நகரிலுள்ள 'கலரைசேஷன் இன்கோர்பொரேட்' என்ற நிறுவனம் தான் முதன்முதலில் கறுப்பு-வெள்ளை படங்களை வண்ணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டது.

இப்போது இதற்காக மொத்தம் 5 கம்பெனிகள் அமெரிக்காவில் இருக்கின்றன.

இதனுல் லோரல், ஹார்டி பெர்க்மேன் போகர்ட் போன்ற பிரபல நடிகர்களின் படங்களெல்லாம் வண்ணமயமாகிவிட்டன.

சாதாரண படத்தைத் தத்ரூபமான கலர்ப்படமாக்குவது சுலபமான காரியமல்ல.

இதற்காக தினமும் 3 ஷிப்ட் முறையில் 24 மணி நேரத்தில் 400 பேர் வேலை செய்கிருர்கள்.

10 நாளைக்கு தொடர்ந்து இதைச் செய்து முடித்தால் ஒரு வண்ணப் படத்தைத் தயாரிக்கலாம்.

ஒரு படத்தை வண்ணமாக மாற்றுவதற்கு குறைந்த பட்சம் ரூ. 77 லட்சம் முதல் ரூ. 150 லட்சம் வரை செலவாகிறது.

இந்தத் தொழில் நுட்பம் வளர்ந்துவிட்டால் அதிகபட்சமாக ரூ. 35 லட்சம்தான் செலவாகும் என்கிருர்கள்.

அமெரிக்க தொலைக்காட்சி ரசிகர்கள் பழைய படங்களை வண்ணப்படமாக்கி ஒளிபரப்புவதை அதிகம் விரும்புகிருர்கள். ஆனுல், படத்தயாரிப்பாளர்களும், டைரக்டர்களும் இதை கடுமையாக எதிர்க்கிருர்கள்.

கறுப்பு - வெள்ளைப் படங்களை வண்ணமாக மாற்றுவது கலாசார இலக்கியத்தை அழிப்பது போன்றதாகும்.

'கறுப்பு வெள்ளைப் படத்தை எடுத்தவர்கள் தங்கள் படம் அப்படியேதான் இருக்க வேண்டும் என்று விரும்புகிருர்கள்.

'ஏனெனில் கறுப்பு-வெள்ளை படத்தில்தான் எதார்த்தமான வாழ்க்கையை சித்தரிக்கமுடிகிறது.

'இதை மாற்றினுல் படத்தின் தன்மை கெட்டுவிடும். படத்தில் சொல்லவந்த விஷயமும் மாறிவிடும்'—என்று குறைகூறுகிருர்கள்.

'கறுப்பு - வெள்ளைப் படம் விரைவில் அழிந்துவிடுகிறது. அதற்கு கலர் மெருகு ஏற்றினுல் இன்னும் 50 வருடங்கள் அதைப் பாதுகாக்கமுடியும்' புதிய படத்தை விநியோகஸ்தர்களால் சொத்தாகமாற்றி வைத்துக்கொள்ளமுடியும்.

— என்று பதிலுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. (எ-4)

## ஆங்கிலப் படத்தில்....

இந்தி நடிகை சபனு ஆஸ்மி முதன் முறையாக மேடம் சவுசத்ஸ்கா என்ற ஆங்கிலப் படத்தில் நடித்திருக்கிருர்.

இந்தப் படம் சமீபத்தில் வெனிஸ் நகரப் படவிழாவில் காண்பிக்கப்பட்டது. ★

# ஹொலிவூட் நடிகையாக மாறும் அதிவேக 'ஓட்டராணி'

உலகின் ஓட்டப்பந்தய வீராங்கனை புளோரன்ஸ் கிரிபெத் ஜோய்னர் ஓர் அதிர்ச்சி அறிவிப்பை வெளியிட்டு இருக்கிருர்.

'இனி ஓடமாட்டேன்...' என்று அவர் விடுத்த அந்த அறிவிப்பை உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு ரசிகர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

புளோரன்ஸ் கிரிபெத் ஜோய்னர் 28 வயது இளமையுடன் ஓட்டப்போட்டி ராணியாக இவர் செய்த சாதனைகள் ஏராளம்.

நடந்து முடிந்த ஒலிம்பிக் பந்தயங்களில் இவர் 'ஓட்டராணியாக' மாறி தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவித்தார். புதிய சாதனைகளை படைத்து சக வீரர்களைக் கூட அதிரவைத்தார்.

'டு-இன்-வன்' என்கிற மாதிரி அழகுக்கு அழகு. வேகத்துக்கு வேகம். இது தான் புளோரன்ஸ். இவர் போற்றி வளர்த்த நீண்ட நகங்கள்கூட ஒரு கவர்ச்சிக் கதை சொல்லும்.

இவர் திருமணமானவர். கணவர் அல்ஜோய்னரும் விளையாட்டு வீரர்.

ஓட்டமும் புகழுமாக இருந்த புளோரன்ஸ் திடீரென்று விளையாட்டுத் துறைக்கு 'ஓய்வு' கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

விளையாட்டு நேரம் போக இவருக்கு 'மொடலிங்' தொழிலும் இருந்து வந்தது.

விளையாட்டில் கிடைத்த புகழ் 'மொடலிங்'கில் இவரை ஒயேரடியாகஉயர்த்தி விட்டது.

பார்த்தார்... ஓடிக்கொண்டே சம்பாதிப்பதை விட நின்று கொண்டே (போஸ் கொடுத்து) சம்பாதிக்கலாமே என்று முடிவு செய்தார்.

விளையாட்டில் இருந்து விலகுவதாக அறிவிப்பும் செய்துவிட்டார்.

அத்துடன் ஹொலிவுட் சினிமாப் படங்களிலும் நடிக்க வந்த அழைப்பை ஏற்று இருக்கிருர்.

தன் விளையாட்டு அனுபவங்களைப் புத்தகமாக எழுதவும் திட்டமிட்டு இருக்கிருர்.

உலக அரங்கில் அமெரிக்காவுக்கு பெயர் தேடித்தந்த வீராங்கனையை இழக்க அமெரிக்க விளையாட்டுத் துறைக்கு மனசில்லை. முடிவை மாற்றிக் கொள்ளமாட்டாரா என்று எதிர்பார்க்கிருர்கள். ★

## 'மணந்தால் மகாதேவன்'

மணந்தால் மகாதேவன். இது புதிதாகத் தயாரிக்கப்படும் படத்தின் பெயர்.

முரளி சினி ஆர்ட்ஸ் பட நிறுவனத்தின் 5 ஆவது தயாரிப்பு இது.

எஸ். வி. சேகர், எஸ்.எஸ். சந்திரன் கோவை சரளா, வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோர் நடிக்கின்றனர்.

பிரபல முன்னணி நடிகை ஒருவர் கதாநாயகியாக நடிக்கிருர்.

'கிழக்கு போகும் ரயிலே! ரயிலே எம் மயிலே பார்த்தியா? —என்ற பாடல் முதலில் சங்கர்-கணேஷ் இசையில் ஒலிப்பதிவுசெய்யப்பட்டது.

★ ★ ★

## சினிமாஸ் கோப்பில் மூங்கில் கோட்டை

'ஊமை விழிகள்' படத்தின் இரண்டு பாகமாக 'மூங்கில் கோட்டை' படம் பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்பட்டுவருகிறது.

படத்தில் ஒரு கட்டம் தமிழ்நாடு மின்சார வாரியக் கட்டடத்தின் 10ஆவது மாடியில் பிடிக்கப்பட்டது.

மயிர்க் கூச்செறியும் சண்டைக் காட்சி ஒன்று பத்தாவது மாடியில் 10 தினங்களாக படமாக்கப்பட்டது.

படத்தின் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இளை இசை ஆகிய பொறுப்புக்களை ஆபாவாணன் கவனித்து வருகிருர்.

சினிமாஸ்கோப்பில் தயாரிக்கப்படும் படத்தை இயக்குபவர் ராஜாரவி. (எ-4)

வெள்ளித்திரையில்


# கண்டு களியுங்கள்
## சிங்கப்பூர், பாங்கொக், மாலே!

படம் பிடியுங்கள்! நெஞ்சை கொள்ளைகொள்ளும் காட்சிகள் நிறைந்த சிங்கப்பூர், பாங்கொக், மாலே ஆகிய இடங்களுக்குச் செல்லும் அரிய வாய்ப்பைப் பெறுங்கள். ஆம், கொடக் வழங்கும் 'கண்டு களியுங்கள்' போட்டியில் வெற்றியீட்டுவோருக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படவிருக்கின்றது. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழ்க் காணப்படும் கேள்விக்கான விடையை எழுதி அதனை கொடக் கலர் புகைப்படச் சுருள் ஒன்றின் வெற்றுப் பெட்டியுடன் மில்லர்ஸ் லிமிட்டெட், 50,யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பி வையுங்கள்.

கொடக்கினுல் மாத்திரமே வழங்கக்கூடிய நிஜவர்ணங்களின் உயிர்த்துடிப்பையும் இங்கிதமான உள்ளுணர்வுகளையும் விரும்பி நாடும் அதிஷ்டசாலிகளான படப்பிடிப்பாளர்களுக்கென 410 பரிசுகள் காத்திருக்கின்றன.

**மகத்தான இறுதிச் சிட்டிழுப்புப் பரிசுகள்**

1ம் பரிசு — சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்

2ம் பரிசு — பாங்கொக் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.

3ம் பரிசு — மாலே சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.

4ம் - 10ம் பரிசுகள்: 07 கொடக் புகைப்படக் கருவிகள் (கமரா)

11ம் - 110ம் பரிசுகள்: 100 கொடக் பணப்பைகள்.

**மேலும்**

மே 1, மே 15, மே 31 ஆகிய தினங்களில் 3 சிட்டிழுப்புகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு சிட்டிழுப்பிலும் 100 கொடக் ரி-சேட்டுகள் பரிசாக வழங்கப்படும். எனவே விரையுங்கள். கண்ணுக்கு விருந்தளிக்கும் வெளிநாட்டு விடுமுறைப் பயண வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உங்கள் கமராவுக்கு வேலை கொடுங்கள்!

**போட்டி விதிகள்**

1. மில்லர்ஸ் லிமிட்டெட், தொம்ஸன் லங்கா (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. போட்டி முடிவு தினம் ஆனி 15ம் திகதி. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.
3. ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்கள் வேண்டுமானுலும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொன்றுடனும் கொடக் கலர் ஃபிலிம் வெற்றுப்பெட்டி இணைக்கப்படல்வேண்டும். பிரவேசப் பத்திரக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபிலிம் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம். பிரவேசப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி: மில்லர்ஸ் லிமிட்டெட் 50, யோக் வீதி கொழும்பு 1.




பிரவேசப் படிவம்

கேள்வி: சோல் நகரில் 1988 இல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் உத்தியோகபூர்வ புகைப்படச்சுருள் எது?

பதில்: ______ பெயர்: ______

முகவரி: ______

மேலதிக படிவங்கள் தேவைப்படின் நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். சகல பிரவேசப் படிவங்களும் மில்லர்ஸ் லிமிட்டெட், 50,யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபிலிம் போட்டி' என்று குறிப்பிடவும்.

**வர்ணத்தின் எழில் ஜாலங்கள் காட்டும்கொடக்.**

PRODUCTS BY Kodak

JWT ML 2828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருங்கால சமுதாய வளர்ச்சிக்கு அவசியமான மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம்

இன்றைய உலகின் நிலையை சற்றே சிந்தித்துப் பார்த்தால் எங்கும் போராட்டமும் குழப்பமும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

மகத்தான விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருந்தும் மனிதன் நம்பிக்கையை இழந்து எதிலும் திருப்தி இன்றித் தவிக்கிறான்.

இத் துன்ப நிலையிலிருந்து நீங்க வழிதெரியாது புலன்களால் உண்டாகும் சிற்றின்பங்களைத் தேடி ஓடுகிறான்.

டி. வி. பார்க்கும் சுகத்திற்காக கண் பார்வையைக் கெடுக்கும் துன்பத்தில் சேர்கிறான்.

வித விதமான போதை வஸ்தை சுவைத்து உடல் நோயைத் தேடுகிறான். பணம் புகழைத் தேடி அலைபவன் அதைப் பேணிப் பாதுகாப்பதற்காக மனதை அலைத்து மனப்போராட்டத்தில் உழல்கிறான்.

எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு சுகத்திற்குப்பின் துன்பத்தை அனுபவிக்கிறான். இதற்கு எல்லாம் காரணமென்ன? இந்த இருமை நிலையில் உள்ள புலனின்பங்களை எல்லாம் விட்டு நிலையான மாறாத ஒருமையான ஆனந்தம் எது என்பதை அவன் உணராததே.

சுகம்- துக்கம், லாபம்- நஷ்டம், இன்பம்- துன்பம், கீர்த்தி- அபகீர்த்தி, ஆனால் ஆனந்தம் என்றநிலை வரும்போது அதற்கு எதிரான ஒன்று இல்லை. அது எது என்று அவன் தேடாததே அவனின் இன்றைய நிலைக்குக் காரணமாகும்.

### கல்வி

இதற்கு முழுக்காரணமாகவும் அமைவது அவன் கற்ற கல்வியே. பட்டம் புகழ் பதவியைக் கொடுத்த அவனது கல்வி அவனை "Hero in Words But Zero in Action" ஆக்கிவிட்டது.

தன்னை உணர, தன்னை அடக்க, வழியைக் காட்டாத அவனது கல்வியே அவனை இந்நிலைக்கு மாற்றியது.

அக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் குருகுலங்களிலும் ஒழுக்கக் கல்வி போதிக்கப்பட்டது. இராமகிருஷ்ணர் வள்ளுவர் ஒளவையார் போன்ற அருளாளர்களின் வாக்குகளாக வந்த நீதி நூல்கள் போதிக்கப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்யமுடியும்?

'இன்றைய குழந்தைகளே வருங்கால சமுதாயத்தினர் வருங்காலத்தில் இவ்வுலகை தர்மஷேத்திரம் ஆக்கப் போகிறவர்கள் என்ற எண்ணத்தை மனதில்கொண்டு அவர்கள் அறிவில் நல்லெண்ணங்களை விதைத்து உணர்வில் நல்லுணர்ச்சிகளைத் தூண்டிச் செயலில் நன்னடத்தையைப் பழக்கிவிட்டால் சமுதாயத்திற்குப் பெரும்பணி செய்தவர்களாவோம்.'

இந்த நோக்கத்தோடு பகவான் ஏற்படுத்திய கல்வித் திட்டமே மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம்.

அன்பு, அறம், உண்மை, பரோபகாரம் போன்ற மதிப்பீடுகள் மேம்பட்டு விளங்குவதால் அவை மேம்பாடுகள் ஆகின்றன.

### குணநலன்கள்

ஏறத்தாழ 84 மேம்பாடுகள் ஒரு மனிதனின் குணநலன்களை உருவாக்குகின்றன.

இவை 5 பெரும் பிரிவுகளுள் அடங்கும். அவையாவன சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்பவையே.

இவை ஒருபுறம் மட்டும் திறக்கும் கதவைப் போன்றவை. ஒருமுறை உட்புகுந்த இப்பண்புகள் வெளியே தப்பாமல் பாதுகாப்பதோடு வெளியே உள்ள தீய பண்புகள் உள்ளே புகவிடாமல் இருக்கும் சக்திவாய்ந்தவை. இப்பண்புகள் ஒன்றையொன்று சார்ந்தவையே.

உதாரணமாக அன்பை எடுத்துக்கொண்டால் அதாவது பிரேமை;

எண்ணத்்ளவில் அன்பு உண்மையாகிறது (சத்தியம்)

செயலளவில் அன்பு தர்மமாகிறது (தர்மம்)

மனத்தளவில் அன்பு அமைதியாகிறது (சாந்தி)

உணர்ச்சியளவில் அன்பு அகிம்சையாகிறது (அகிம்சை)

இப்படியாக ஒன்றுக்கொன்று தொடர்புடைய இப்பண்புகளை மிளிரச் செய்யவேண்டும்.

அதாவது ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளே உறையும் உயர்பண்புகளை ஒளிபெறச் செய்து உண்மையான ஆனந்தத்தை அடைய வழிசெய்ய வேண்டும்.

பகவான் உருவாக்கிய இக் கல்வித் திட்டத்தை பாடத் திட்டத்திற்கூடாகவோ அன்றித் தனிப்பட்ட முறையிலோ கற்பிக்கலாம். பாடத் திட்டத்திற்கூடாக கற்பித்தல் ஆசிரியர்க்கு மிக இலகுவான ஒன்றாகும்.

### சமயபாடம்

சமய பாடம் கற்பிக்கப் படும்போது எல்லாச் சமயங்களையும் கற்பித்து ஒவ்வொரு சமயத்தின் நோக்கத்தையும் போதனைகளையும் கூறி ஒற்றுமையை விளக்கிக்காட்டி சகல இன மக்களிடத்தும் ஒற்றுமையாயிருக்கவேண்டும் என்று பண்பை விளக்கலாம். எல்லாம் ஒரே உண்மையைப் போதிப்பதைக் கூறி,

'ஒரே மதம் அது அன்பு மதம்'

'ஒரே மொழி அது மனித மொழி'

'ஒரே சாதி அது மனித சாதி'

'ஒரே கடவுள் அவன் எங்கும் நிறைந்தவன்'

என்ற போதனை மூலம் ஒற்றுமை உணர்ச்சியை அன்பை வளர்க்கலாம்.

அறவழியில் பொருளைத் தேடி இன்பத்தை அனுபவித்து மோட்ச வீட்டைப் பெறலாம். (அறம், பொருள் இன்பம், வீடுஎனக்கூறலாம்.)

இப்பாடத்திட்டத்திற்கு அமைய தனிப்பட்டமுறையில் ஞாபக சக்தியை அறிவுத்திறனை வளர்க்க தியானம், மௌனம் இவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து ஒவ்வொருவரிடத்தும் அமைதி என்ற பண்பை வளர்க்கலாம்.

இந்த வழியில் உலக நாடுகள் பலவும் வரவேற்றுப் போதிக்கும் இக்கல்வியை நாமும் நடைமுறைப்படுத்துவோமாக!

"End of Education is Character" கல்வியின் முடிவு பண்பு. ★

> இன்று பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தாயாரான அன்னை ஈஸ்வராம்பாவின் நினைவு தினமாகும்.
>
> இத்தினத்தை மனித மேம்பாட்டுக் கல்வித் தினமாக சத்திய சாயி நிறுவனங்கள் உலகில் கொண்டாடுகின்றன. இந்தயொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

**- திருமதி. மதிவதனி சரவணபவன் -**

★ போக்கிரித்தனத்துக்கு எல்லையுண்டு. ஆனால் மடத்தனத்துக்கு எல்லையில்லை.


— நெப்போலியன்

★ தாழ்ந்த லட்சியத்தில் வெற்றி பெறுவதை விட, உயர்ந்த லட்சியத்தில் தோல்வியுறுவதே மேல்.

— ரொபர்ட் பிரவுணிங்

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 99



சொற்சிலம்பம் இல: 99
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................

———————— இங்கே வெட்டுக ————————

**முடிவு திகதி: 17 - 05 - 1989**

(வலதுபக்க மேல்மூலைச் சதுரத்தை இலக்கம் நான்கு எனக் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்:**

1. தமிழக சட்டசபையில் இப்போது அடிக்கடி நிகழ்வது 5. தொண்டு 6 வேகம் 7. கோயில்களில் வீதியுலா வரும்வாகனங்களில் ஒன்று 8. வடு 9. குதிரை 10. பெரிதாகச் செய் 11. பதங்களைப் பிரித்துப் பொருள் கூறல் 13. இசைக் கருவிகளுள் ஒன்று 14. பெரியவன் 16. பெறுமதி 17. சத்துள்ள புரத உணவு.

**மேலிருந்து கீழ்:**

1. பழிச்சொல் 2. நேரத்தை அளவிடும் அலகு 3. படை 4. ஆரம்பம் 6. இராமாயணத்தைத் தமிழில் தந்தவர் 7. இணக்கம் 10. கிறுதல் 11. கதவு 12. தன்மை ஒருமைப் பெயர் 13. செய்யுள் 15. உழுந்தில் செய்யும் பலகாரம்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# குயில் விடு தூது!

வசந்தம் வந்ததுதான். நிலத்திலே புழுங்கற் பரவியது போலச் சருகுகள்.

இலையுதிர் காலத்தின் காட்சி கண்ணிற் பளிச்சிட்டது. கொப்பும் கிளையுமாய் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவிக் கிடந்த மரங்களெல்லாம் துளிர் விட்டுத் தளிர் எறிந்தன!

மணப்பெண்போல அவற்றின் அழகு, பார்க்குமிடமெல்லாம் விருந்தளித்தன. செம்மாந்தர்களின் காட்சி நெருப்பின் நாக்குப்போல் காட்சி தந்தன.

முறிமேனி எனப் பெண்களின் தோற்றத்தை வள்ளுவர் சொன்னாரல்லவா!

பெண்களும் காதல் வசப்பட்ட வேளை! குயில்களும் தளிர்களைக் கோதி ஆனந்தத்துடன் கூ கூ... எனக் கூவின.

தேன் கலந்த ஆண்குயிலின் இனிய குரலிற் காதலியான புள்ளி குயிலும் பதிலுக்குக் குரல் கொடுத்தது.

இளைஞர்களும் அதனைக் கேட்டு அதே போல குரல் கொடுத்தார்கள். குயிலின் ஓசை சற்றே வந்து காதில் பட்டதும் எல்லாரும் புளகாங்கிதமடைந்தனர்.

வசந்தத்தில் தான் கோகிலங்கள் இணை சேருகின்றன. கூ கூ... என்ற இனியநாதம் எழுப்பி பேடையைத் தன் பாலழைக்கிறது.

அன்று அதிகாலை வேளை. மெல்லிய நிலவொளியிற் குயிற்பிள்ளையும் கூகூ... என்று அந்த வீட்டு மாமரத்திலிருந்து குரலெழுப்பியது.

தூரத்திலெங்கிருந்தோ துணைவியின் குரல் காதினிக்க மனமினிக்க காற்றில் தவழ்ந்ததும், காகமும் கரைந்தது.

அடுத்து நின்ற தென்னையிலிருந்து வந்ததுதான் காகத்தின் ஓசை. ஆண்குயிலும் அகம்பாவத்துடன் காகத்தைப் பார்த்து நையாண்டி செய்தது.

'எனது இன்னிசைக்கு – மோகனத்துக்கு எதிராக நீ என்ன முஹாரி போல பிலாக்கணம் பாடுகிறாயோ? அடக்கு உன் குரலை' என்றது தான் தாமதம்.

காகம் விட்டதாயில்லை: உரக்கக் கரைந்து கொண்டே சொன்னது– 'என்னையெல்லாம் புதுமைக் கவிஞர்கள் கூடப் பாடியிருக்கிறார்கள். கொடி (காகம்) விடுதூது கூட பழைய இலக்கியம். பாரதியாரைப் பார்த்தாயா 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்றன் கரியநிறம் தோணுதடா'–என்று பாடினார். ஏன் பெரியாழ்வாரைப் படித்துப் பார்.

'மன்னனை வந்து குழல் வாராய் அக் காக்காய்.

மாதவன் தன் குழல் வாராயக் காக்காய்'– என்று என்னை அழைக்கிறாரே. இப்படியெல்லாம் உன்னைப் போற்றினார்களா? என்றது காகம்.

குயிலும் விடவில்லை – 'கோகில சந்தேஸம் என்மேற் பாடியதுதானே. மணிவாசகர் கூட கீதமினிய குயிலே – நீல உருவிற் குயிலே, தேன்பழச் சோலையிலும் குயிலே' எனவெனப் பாடிய குயிற்பத்தை நீ அறியாய் போலும்' என்று கொஞ்சம் காகத்தை நையாண்டி பண்ணியது.

அவ்வளவுதான். 'உனக்கொரு பாடம் படிப்பிக்கிறேன்' என்று தன் கூட்டை தூரத்திலிருந்து பனைக்கு மாற்றிக் கொண்டது காகம்.

குயிற்பிள்ளைக்கு இந்தக் காகத் தந்திரம் விளங்கவில்லை. கூ கூ... என்றது வழமை போல்.

பேடையும் வந்து காதலின்பம் துய்த்தன. ஆனால் பெண் குயில் அலைந்தது முட்டையிட முடியாமல்......

இதையறிந்த ஆண்குயில் ஒரு தூதுப் பிரபந்தமே பாடிற்று பூபாளத்தில். பின் சொல்லவா வேண்டும்! பாவம் இந்தக் குயில் என்று பட்சாதாபப்பட்டு காகமும் தூரத்தில் இருந்து கா கா எனக் கரைந்தது.

'என் மீதுதானே தங்கியிருக்கிறாய்' என்று காகம் கேட்டது. குயில் மௌனமாகத் தலை குனிந்தது.

(யாவும் கற்பனை)

**- முருக. வே. பரமநாதன் -**

# சரீரசுத்தி, மனசுத்தி பெற உதவும் தியான வழிபாட்டு முறை

தெய்வ வழிபாடு, பூஜை, தியானம், ஜெபம் இவைகளில் ஏதாவது ஒன்றாவது தினசரி வாழ்க்கையில் இருக்கவேண்டும்.

மனதை ஒருநிலைப்படுத்தி தியானம், ஜெபம் இவைகளில் ஒருசில நிமிடங்களாவது ஈடுபடவேண்டும்.

எவ்வளவோ வேலைகள், காரியங்கள் செய்கிறோம். சிறிதுநேரம் பகவானையும் நினைக்கலாமே!

இந்தமாதிரி ஜெபம் செய்வதன்மூலம் ஏதோ ஒரு தெய்வத்தை வழிபடுகிறோம்.

மனம்வேறு எதிலும் செல்லாமல் வழிபடும் தெய்வத்தையே மனதில் நிறுத்தி ஜெபம் செய்ய வேண்டும். உரக்கச் சொல்லாமல் மனதுக்குள்ளாகவே ஜெபித்தால் அதிக பலன் உண்டு என்பார்கள்:

பிறர் தொந்தரவு இல்லாமல் தனி இடமாக இருக்க வேண்டும். ஒரு பலகையின் மேல் ஒரு கம்பளம், துண்டு எதையாவது போட்டு அதன் மேல் உட்கார்ந்து ஜெபம் செய்யவேண்டும். இது குடும்பஸ்தருக்கான முறை.

ஜெபம் செய்வதற்கு முன்னால் ஆசாரம், அனுஷ்டானம் எல்லாம் உண்டு. சரீரசுத்தி, மனசுத்தி இவைகளும் அவசியம். இவைகளில் எல்லாம் கவனம் செலுத்தி, சரியான முறையில் ஜெபம் செய்தால் விரைவில அது பலன்தரும்.

அது மட்டுமல்ல! மனதுக்கே ஒரு சாந்தியும் சந்துஷ்டியும் ஏற்படும்.

வீட்டில் உள்ளவர்களும் அதைப்பார்த்து, தாங்களும் ஏதாவது ஜெபம் செய்ய வேண்டும் என்று ஆரம்பிப்பார்கள்.

நல்ல பழக்க வழக்கங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏற்படும்.

வேண்டும். இதற்கு எல்லாம் நமக்கு நேரம் ஏது என்று சொன்னால் நட்டம் நமக்குத் தான்.

வாழ்நாளில் ஒவ்வொரு வினாடியும் போனால் போனதுதான். திரும்பவருமா? நாளை என்பது நம்முடையது இல்லையே! அன்றன்றைக்கு என்ன என்ன நல்ல காரியம் செய்ய முடியுமோ அதைச் செய்துவிடவேண்டும்.

காலம் வீணாகிவிட்டதே என்றுதான் மகான்கள் துக்கப்படுவார்கள். உன்னை நினைக்காத நாள் எல்லாம் வீணாயிற்றே என்பார்கள். ஒருநாள் கூட ஆலயத்துக்குப் போகாமல் சாப்பிடமாட்டார்கள்.

ஒருவர் தினமும் கோயிலுக்குப்போய் சிவதரிசனம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுவது வழக்கம். கண்பார்வை மங்கி நடக்கமுடியாத நிலை அவருக்கு வந்துவிட்டது.

அப்போதும் அவர் ஆலயம் சென்று திரும்பாமல் சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடித்தார்.

வீட்டில் இருந்தவர்கள் ஒரு யுக்திசெய்தனர். கண் தெரியாத அவரை வீட்டின் கூடம், தாழ்வாரம், மாடிப்படி என்று சில இடங்களில் சுற்றிவளைத்து அழைத்துக்கொண்டு ஓர் அறையின் வாசலில் நிற்க வைத்து 'அதோ! சிவலிங்கம் தரிசனம் செய்யுங்கள்' —என்றனர்.

அவர் மனக்கண்ணால் அறையினுள் இருப்பது சிவலிங்கம் என நினைத்து 'சம்போ சங்கரா நீதானப்பா துணை' என்று நமஸ்கரித்தார். சிவதரிசனம் செய்த திருப்தி அவருக்கு ஏற்பட்டது.

இப்படியே தொடர்ந்து செய்துவந்த அவருக்கு சிரமமில்லாத மரணம் ஏற்பட்டு நற்கதியும் கிடைத்தது. இப்படி ஒரு கதை.

**- வைரம் ராஜகோபால் -**

இந்தக் கலியுகத்தில் இவ்வளவு சுலபமான முறைகளில் பக்தி செய்யலாம் என்று வைத்திருக்கிறார்கள். இதைச் செய்யச் செய்ய, அதில் ஆர்வம் விருத்தியாகும்.

கண்ணை மூடி ஜெபம் செய்வதே ஒரு தபஸ் ஆகும்.

ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்தால் அதற்குத் தடங்கல்கள் நிறைய இருக்கும். அ்வகளை எல்லாம் கடந்துதான் இதில் ஈடுபட வேண்டும். எதிரில் இருப்பது எதுவானாலும் சிவனாகவே பாவித்து வழிபட்டால் புண்ணியம் கிடைக்கும் என்பது இக்கதையின் உட்பொருள்.

பகவானிடம் எந்த விதத்திலாவது ஈடுபாடுவேண்டும். அதுதான் நமக்கு உண்மையான சுகமும் பலனும் கிடைக்க வழி என்றார்கள்.

நீங்களும் சிறிதுநேரம் சிந்தியுங்கள். ★

# பொது அறிவுப்போட்டி இல. 24

1. கடிதம் போய்ச் சேர்வதற்கு வேண்டியது? ... ... ... ... முகவரி / முத்திரை
2. பெண்கள் கணவனிடம் எதிர்பார்ப்பது? ... ... ... ... ... பணம் / அன்பு
3. தூய்மையாக இருக்கவேண்டியது? ... ... ... ... ... சுற்றுடல் / இதயம்
4. பொதி சுமப்பது? ... ... ... ... ... ... ... ... கழுதை / குதிரை
5. கூண்டில் அடைப்பது? ... ... ... ... ... ... ... ... கிளி / புலி
6. இதுவும் அழுவதுண்டு? ... ... ... ... ... ... ... மனம் / கண்கள்
7. கண்ணன் பிறந்த இடம்? ... ... ... ... ... ... ... கோகுலம் / சிறை
8. மானின் அழகில் மயங்கியவள்? ... ... ... ... ... ... சீதை / சகுந்தலை
9. அழிக்கவேண்டியது? ... ... ... ... ... ... ... ஆசை / கோபம்
10. எல்லோரும் விரும்புவது? ... ... ... ... ... ... சமாதானம் / நிதானம்
11. படிக்க ஏற்ற நேரம்? ... ... ... ... ... ... ... ... காலை / மாலை
12. வாழ்க்கையில் தானே ஏற்படுவது? ... ... ... ... ... விபத்து / ஆபத்து

பெயர்:- ..........................................
விலாசம்:- ..........................................
..........................................

பொது அறிவுப்போட்டி இல: 24
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.................... இங்கே வெட்டுக ....................

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 10 – 05 – 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸகாதுல் பித்ர் கொடுத்து ஏழைகளை ஆதரிப்போம்

இஸ்லாம் கடமைகளுக்குப் பின் சில சுன்னத்தான நபிகள் (ஸல்) அவர்கள் பேணி வந்த சில விடயங்களை வலியுறுத்தியுள்ளது. அவைகளே நபிகளாரின் வழிமுறைகள் என இன்று எல்லா முஸ்லிம்களாலும் பேணப்பட்டு, பின்பற்றப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் ஐவேளைத் தொழுகை கடமையான ஒன்று. ஏனைய தொழுகைகள் சுன்னத்தானவைகள், தனது சொத்துக்களிலிருந்து ஏழைகளின் பங்குகளைக் கணக்கிட்டு வழங்குவது ஸகாத் எனும் ஏழைவரி கடமையாகும். ஆனால் கணக்கிடாமல் வாரி வழங்குவது ஸகாத் தர்மம் என்று சுன்னத்தாக ஆக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் கடமை என வலியுறுத்தப்பட்ட விடயங்களில் ஸகாதுல் பித்ர் பெருநாளில் ஏழைவரி முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஏனென்ல் பெருநாள் தினத்தை எல்லோரும் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும். அத்தினத்தில் புத்தாடைகள் அணிவதும், புதுமணம் பூசுவதும், ஏழைகளை ஆதரிப்பதும் போன்ற நல்லவிடயங்களில் எல்லோரும் சமமாகப் பங்குகொள்ள வேண்டுமென விரும்பினர்கள். அதனால் அதனை ஒரு கடமை என வலியுறுத்தினர்கள்.

இது பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். — 'உங்களில் முஸ்லிமான ஆண், பெண், அடிமை, சுதந்திரவான் அனைவர் மீதும் ஒரு (ஸா உ) ஏறத்தாழ இரண்டு கொத்துக்கள் கோதுமை அல்லது பேரீச்சம்பழம் ரமழான் மாதமுடிவில் (ஸகாதுல் பித்ர்) பெருநாள் வரியாகக் கொடுப்பது கடமையாகும்'— என வலியுறுத்தினர்கள்—

ஸகாதுல் பித்ர் எல்லோரின் மீதும் விதியான ஒன்று. இதனைக் கொடுக்க வசதியுள்ளோர்களைக் கணிப்பீடு செய்யும் முறையினை இமாம்கள் வகுத்துத் தருவதற்குத் தவறவில்லை. என்றாலும் (ஸகாத்) கட்டாயமான ஏழைவரிக்கு சில நிபந்தனைகள் இருப்பது போன்று இந்த ஸகாதுல் பித்ருக்கும் சில நிபந்தனைகள் உண்டு.

ஸகாதுல் பித்ரின் நிஸாப் ஆரம்ப அளவுக் கணிப்பீட்டைப் பார்ப்போம்.

ஒருவனிடம் தனக்கும் தன் செலவில் வாழும் அனைவருக்கும் பெருநாளைக்கும் அதையடுத்து வரும் நாளைக்கும் தேவையான செலவினங்கள் கழிக்கப்பட்ட எஞ்சிய தனது சொத்துக்களில் இக் கடமை நிறைவேற்றப்படல் வேண்டும்.

இவ்வாறு கழிக்கப்பட்ட பின்னர் அவனிடம் மிகக் குறைவான பொருட்களே எஞ்சியிருக்கின்றன. இப்படியான சூழ் நிலையில் இவனால் இயன்றளவு முதல் தனக்கும், இரண்டாவது மனைவிக்கும் மூன்றாவது தனது சிறிய குழந்தைக்கும் வரிசைப்படி கொடுப்பான்.

என்றாலும் இவன் கொடுக்கப்படவேண்டியது உணவுப் பொருட்களே. இதற்குப் பதிலாகப் பணத்தையோ, தங்கம் வெள்ளி போன்றவற்றையோ கொடுத்தல்கூடாது. அவ்வாறு கொடுப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எனவே 'அப்பணத்தைக் கொண்டு அதற்குரிய அரிசி அல்லது நெல் போன்றவற்றைக் கொள்வனவு செய்து ஏழைகளுக்குக் கொடுக்கலாம்.

கொடுக்கவேண்டிய காலம் நோன்பு கடைசி நாள் முதல் பெருநாள் தொழுகை முடிவடையுமுன் கொடுப்பது சுன்னத்தாகும். என்றாலும் நோன்பு ஆரம்பநாள் முதல் நோன்பு முடியும் வரையும் கொடுப்பதும் ஆகும். பெருநாள் முடியும் வரையும் எவ்விதக் காரணமுமின்றி பிற்படுத்துவது வெறுக்கத்தக்கதாகும். பெருநாள் முடிவுற்றும் கொடுக்காமலிருப்பது விலக்கப்பட்டதாகும். அவ்வாறு நிறைவேற்றப்படாத ஸகாதுல் பித்ரை தீவிரமாக நிறைவேற்றுவது அவசியமாகும்.

கொடுக்கவேண்டிய அளவு மதிப்பீடு செய்வதில் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படும் என்றாலும் எமது இலங்கை நாட்டைப் பொறுத்தவரை தோல் நீக்கப்படாத நெல் போன்ற தானியங்களாயின் ஒருவருக்கு நான்கு கொத்து எனும் வீதப்படியும். தோல் நீக்கப்பட்ட அரிசி போன்றவைகளாயின் இரண்டு கொத்து வீதமும் கொடுக்கப்படல் வேண்டும்.

இக்கடமையை நிறைவேற்றும்போது முதல் ஒரு குடும்பஸ்தன் தனக்காகவும், தனது மனைவிக்காகவும், தனது சிறுகுழந்தைக்காகவும், தனது பெரிய (பொருள் தேட வசதியற்ற) குழந்தைகளுக்காகவும், தனது தந்தைக்காகவும், தனது தாய்க்காகவும் (இவர்கள், இவனது உழைப்பில் வாழ்ந்தால்) பின் இவனது உழைப்பில் வாழும் அடிமைகள், அடிமைப் பெண்கள் போன்றோருக்கும் கொடுக்கவேண்டும்.

ஆனால் இவனது பிள்ளைகளான உழைப்புக்கு வசதி உள்ளோர்களுக்காக இவன் கொடுப்பது அவசியமில்லை.

இவ்வாறு ஆகுமாக்கப்பட்ட இக்கடமையை ஸகாத் நிதியைப் பெற அருகதையுடையவர்களான எட்டுக் கூட்டத்தினருக்கும் வழங்கப்படவேண்டும்.

விசேஷமாக இவர்களில் சொந்தக்காரர்கள், இனபந்துக்கள் போன்றோருக்கும் கொடுப்பது சிறப்பானது.

அந்த எட்டுக் கூட்டத்தினரையும் அல்குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது,

1. பரம ஏழை 2. மிஸ்கீன் எனும் செலவுக்கேற்ற போதிய வருவாயற்றவர்கள், 3. ஸகாத் நிதியை வசூலித்து விநியோகிப்போர், 4. புதிதாக இஸ்லாத்தை ஏற்றோர், 5. உரிமைச்சீட்டெழுதப்பட்ட அடிமைகள், 6. கடனை நிறைவேற்ற வசதியற்ற கடன்காரர்கள், 7. அல்லாஹ்வின் பாதையில் புனிதப் போரில் ஈடுபடுவோர். 8. பிரயாணத்தை முடிக்க வசதியற்றோர்.

இவர்களில் முதல் இரண்டு கூட்டத்தினரையும் நாம் இலேசாகக் கண்டுகொள்ள முடியும். ஏனையோர்களைக் கண்டு அவர்களுக்கு இவைகளைக் கொடுப்பது மிக மிக கடினமாகும்.

என்றாலும் இயன்றவரை இந்த எட்டுக் கூட்டத்தினரில் மூன்று கூட்டத்தினரையேனும் தேடி ஒப்படைக்கவேண்டும்.

இவ்வகையில் நாம் இக்கடமையை நிறைவேற்றுவதன் மூலம் எமது நோன்பிலுள்ள குறைகள், தவறுகள், நிறைவு செய்யப்படுகின்றன.

ஆக நாம் இப்படியான இலேசான நல்ல செயல்களில் கிடைக்கும் பிரதி பலன்களை தட்டிப்புறக்கணிக்காமல் இக்கடமையை நிறைவேற்றி நல்ல பயனை அடைவோம். ★

**- மௌலவி கே. பி. நஸார்தீன் (ரஷாதி) -**
(பேஷ்இமாம் - முஹிதீன் ஜும்ஆப் பள்ளி)


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

''தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது எனச் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றி விட்டது''

**செல்வி பாத்திமா சனிமா,**
எலுவில, பாணந்துறை.

''தங்களின் ஆங்கிலக் கல்வி விருத்தி யாழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நானும் உங்களின் பலாபலன்களைப் பெற்ற மாணவியரில் ஒருவர்''

**செல்வி பிரேமாவதி செல்லையா,**
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

''இப்போது எனக்கு ஆங்கிலம் பேச முடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது.

**செல்வி நிர்மலா தங்கவேலு,**
அப்புத்தளை.

''ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத்திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே''

**செல்வன் எஸ். எம். ராசா,**
ஏழாலை வடக்கு, ஏழாலை.

''பிறைட் றெயினிங் சென்டரின் ஆங்கிலப் பாடப்பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்''

**செல்வன் ரி. கேதீஸ்வரன்,**
457, கே. கே. எஸ். ரோட், கொண்டாவில்.

''குறுகிய காலத்திற்குள்ளே ஆங்கிலக் கல்வியை திறம்படக் கற்றுக் கொடுக்க உங்களின் பிறைட் றெயினிங் சென்டரால் தான் முடியும்''

**செல்வன் ச. செல்வகுணச்சந்திரன்,**
ஒடக்கரை, பருத்தித்துறை.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
**P. O. Box 162, COLOMBO.**
(C/2353)


# அறியாப்பாடம்

மோகன் அமைதியில்லாமல் தவித்தான். மனதை ஏதோ குடைந்து கொண்டிருந்தது. அவனின் மன அகோரத்தைக் காட்டுவது போல வெப்பம் இருந்தது. பொழுதைப் போக்குவதற்காகப் படுக்கையில் கிடந்து புரண்டான். நித்திரை வர மறுத்தது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவங்களை அசைபோட்டான். அதுதான் அவனுடைய தற்போதைய மனநிலைக்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

அந்த ஆலயத்தில் அவனும் ஒரு அகதியாக இருந்தான். இரண்டு மாதங்கள் நரக வேதனையை அவன் பூவுலகத்தில் அனுபவித்திருக்கின்றான்.

முன்பு அவனுக்குக் கோயிலுக்கு வருவதென்றால் பிடிக்காது. கோயிலில் தேர்த் திருவிழா என்றால் அவன் வீட்டில் இரண்டு மூன்று சினிமாப் படங்கள் ரி. வி. யில் ஓடும். நண்பர்களுடன் சேர்ந்து வம்பளந்து பார்ப்பதில்தான் எத்தனை மகிழ்ச்சி.

மாலையில் மடிப்புக் குலையாத வெளிநாட்டு உடுப்புக்களை அணிந்து கொண்டு நண்பர்களுடன் பட்டினத்தைச் சுற்றி வந்ததில் எத்தனை இன்பம்.?

மழை பொழிகின்றபோது மேல்நாட்டுச் சங்கீதத்தை மெத்தைக் கட்டிலில் படுத்திருந்து கேட்பதில் கண்ட மகிழ்ச்சி எத்தனை!

மழை கொட்டுகிறது. கோயிலுக்கு வெளியேயும் தங்கியிருந்த மக்கள் இடித்துத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைகிறார்கள். குழந்தைகள் வீரிட்டுக் கத்துகின்றன.

'அங்காலை போங்கோ. ஈரத்தை நனையாதைங்கோ. உங்கடை எண்ணத்துக்குத் தானே கடவுள் இந்தத் தண்டனையைத் தந்திருக்கிறார்.

நாலாபக்கங்களிலும் ஏச்சுக்கள், வசைவுகள். மோகன் கோபுரத்தை ஒட்டி நிற்கின்றான். மழை அவனையும் கழுவிக் கொண்டிருந்தது. ஒரு மாதமாகக் குளிப்பு, முழுக்கு இல்லாமல் ஒரு சாரத்துடனும், சேட்டுடனும் சனக் கூட்டத்துக்குள் கிடந்து அவஸ்தைப்பட்ட உடம்பில் மழைநீர் படுவது அவனுக்குச் சுகமாக இருந்தது.

மழை ஒருவாறு ஓய்ந்ததும் சேட்டைக் கழற்றிப் பிழிந்துவிட்டு உடலைத் துடைத்துக் கொண்டான். சாரத்தையும் பிழிந்து கொண்டான். சற்று நகர்ந்து உள்ளே பார்த்தான். கோயிலுக்குள் போக முடியாது. பலர் ஈரத்தில் இருக்க முடியாமல் குந்திக் கொண்டிருந்தனர். தானும் கோபுரத்தடியில் தான் தஞ்சம் புக வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

கோபுரத்தின் தெற்குப் பக்கமாகச் சற்று ஈரமிருந்த இடத்தில் இருந்தான். பசி வாட்டியது. சூடாக ஏதாவது வயிற்றுக்குள் ஊற்றிக் கொள்ளலாம் என்றால் மழை ஈரத்தில் எப்படி அடுப்பு மூட்ட முடியும்?

அவனுடைய குடும்பத்தவர்கள் பாதுகாப்புத் தேடி வேறு இடத்துக்குச் சென்றுவிட்டார்கள். எங்கும் பிரச்சனை தான் என்று கூறி அவன் அவர்களோடு போக மறுத்துவிட்டான். தன்னுடைய முடிவு பிழையானதோ என்று பசி வயிற்றைக் கிள்ளும் போது சிந்திப்பான்.

வீட்டாருடன் கோபித்துக் கொண்டு சாப்பாட்டுக் கோப்பையை வீசியெறிந்த சந்தர்ப்பங்களை நினைவு கூர்ந்தான். அன்னத்தைச் சாப்பிடும் போது ஆண்டவன் அதைக் கொடுத்ததற்காக நன்றி சொல்லவேண்டுமென்று பெரியவர்கள் கூறுவதைக் கேட்டு அவன் ஏளனம் செய்ததை நினைத்துப் பார்த்தான்.

'அனுபவத்தைப் போன்ற சிறந்த ஆசான் ஒருவருமில்லை' எங்கேயோ வாசித்த ஞாபகம் அவனுக்கு அடிக்கடி வரும். எதையுமே தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் முன்னோர்களை முட்டாளாக்கிய தன்னுடைய அறிவு தடைப்பட்டு நிற்கிறது என்பதை அவன் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

சுவரில் மாட்டியிருந்த மணிக்கூடு ஆறுமுறை அடித்த சத்தத்தில் அவனுடைய நினைவு அறுபட்டுப் போகிறது.

திடீரென அவனுடைய மனதைச் சூழ்ந்திருந்த இருள் விலகுவது போன்ற பிரமை.

எங்கேயோ இருந்து கொண்டு ஒருவர் ஞான உபதேசம் செய்வது போன்ற ஒரு உணர்வு. அவனுடைய உடம்பு இலேசாகிக் காற்றில் மிதப்பது போன்ற ஒரு சுகம்.

மற்றவர்கள் மதிக்கவேண்டும். மற்றவர்கள் என்னைப் பற்றிக் கதைக்கவேண்டும் என்று மற்றவர்களுக்காகவே எங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்வது எவ்வளவு முட்டாள் தனம். ஆபத்து நேரத்தில், அலைந்து திரிந்தபோது பகட்டும், புகழும் என்ன செய்தது?

நான் இனிமேல் எனக்காக வாழப் போகின்றேன். நிலா வானத்தில் தோன்றுகிறது. அந்த நிலவைக் கண்டு எத்தனை உயிர்களுக்கு மகிழ்ச்சி. அவன் புதிய உணர்வுடன் கட்டிலிலிருந்து இறங்கினான்.

(யாவும் கற்பனை)

**- கந். தர்மலிங்கம் -**

**குட்டிக்கதை**

# கெட்டிக்காரர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**காட்சி 2**

(இடம்: நடராசா வீடு)

மங்கை:- இஞ்சாருங்கோ...!

நடராசா:- என்னப்பா...!

மங்:- பின்னேரம் சின்னம்மாக்கா வந்தா, வந்து ராணியைப் பற்றிக் குறைசொல்லிட்டுப் போறா...!

நட:- என்னவாம்...?

மங்:- ராணிக்கு அங்கை ரியூட்டரியிலை ஒரு பொடியனோடை சினேகிதம் இருக்காம்...!

நட:- சினேகிதமெண்டா...?

மங்:- உங்களுக்கு ஒண்டும் விளங்காது. சிநேகிதமெண்டால் காதல் தான்...!

நட:- சீ...! இதென்ன விசர்க்கதை...! அவள் படிக்க வெண்டு போனவள், உதுகளிலை மினைக்கெடுறாளே...?

மங்:- (கவலையாக) வயது அது, உப்பிடி எத்தனை நடக்குது உலகத்திலை...?

நட:- சின்னம் மாவுக்கு ஆர் சொன்னதாம்...?

மங்:- ஆரோ சொன்னவையாம். அதோடை தானும் நேரை கண்டவவாம், இவள் ஆரோ பொடியனோடை கதைச்சுக் கொண்டு நிண்டதை...!

நட:- மங்கை...!... அங்கை படிக்கிற இடத்திலை பொடி பொட்டையள் கதைக்கிறதில்லையே...? இதுகள் பட்டிக்காட்டுச் சனங்கள் எக்சைரெட்டாகி இஞ்சை வந்து கதை விடுதுகள் காதல் எண்டு. (சிரிக்கிறார்)

மங்:- மனிசி மினக்கெட்டு வந்து எந்தப் பெரிய விஷயத்தைச் சொல்லுது...!... அதை விசாரிப்பம் எண்டில்லை. அவவுக்குப் பட்டிக்காட்டுப் பட்டமும் சூட்டுறியள்.

நட:- இந்தா மங்கை...! ஒருத்தர் வந்து ஒரு கதை சொன்னால் அதை அப்படியே நம்புறதே...? எந்தக் கதைக்கும் ஒரு அலவன்ஸ் குடுத்துக் கேக்க வேணும்...!

மங்:- (கவலையாக) பிள்ளையின்ரை இல்லையோ...? யோசிக்க வேண்டிய விஷயம் தானே? நீங்க நம்பாட்டா விடுங்கோ...! யோசிக்கவேண்டிய விஷயம் தான்...!

நட:- சரி நல்லா யோசி யோசிச்சு, இப்ப என்ன செய்யப் போறாய்...?

மங்:- ராணியை விசாரிக்க வேண்டாமே...?

நட:- (அதட்டலாக) சும்மா விசர்க்கதையை விட்டுட்டுப் பேசாமல் இரு...!

மங்:- (கவலையாக) எவ்வளவு பாரதூரமான விஷயம் விசர்க்கதை எண்ணுறியள்...?

நட:- (அமைதியாக) இஞ்சைபார் மங்கை...! சோதனைக்கு இன்னும் ஆறுமாதம் தான் இருக்கிறது. இந்த நேரத்திலை உதுகளை விசாரிக்கப்போக, பெட்டைக்கு மூளை குழம்பிப்போம்...! சோதினை எழுதிக் கொள்ளமாட்டாள். மூண்டுவரியம் படிச்ச படிப்பும் வீணாப்போம்.

மங்:- (யோசனையுடன்) இந்தக் கதேலை உண்மை இருந்து ஏதாவது நடந்திட்டா?

நட:- ஒண்டும் நடக்காது.! வீண நீயும் கலங்கிப் பெட்டையையும் குழப்பாதை...!

மங்:- (தழுதழுத்து) பிறகு குடும்பத்தின்ரை மானமே போயிடும்...!

நட:- இஞ்சா......! உன்ரை சின்னம்மாக்காவையும் நம்பேலாது கண்டியோ...!

மங்:- ஏன் அப்பிடிச் சொல்லுறியள்...?

நட:- உந்தமாதிரி துடிக்கப் பதைக்கக் கதைசொல்லி ஆட்களைக் கிண்டிவிடுகிறதுதானே அவவின்ரை தொழில்...?

மங்:- அவ அப்பிடிப்பட்டவளாய் இருக்கலாம். ஆனால் இந்தக் கதேலை உண்மை இருக்கோ இல்லையோ எண்டு நாங்கள் விசாரிக்கவேண்டாமே...?

நட:- மனிசி பொறுமேலும் கதைகட்டி விட்டிருக்கும்.

மங்:- அவவுக்கு எங்களிலை என்ன பொறாமை...?

நட:- தன்ரை மேள் படிக்கேல்லை. ராணி படிக்கிறாள் என்றுதான்.

மங்:- அப்படிப்பொறாமேலை கதை கட்டுகிறவ எண்டா, வெளியிலை கதையைப் பரப்பி விட்டுட்டுப் பேசாமல் இருந்திருக்கலாமே? எங்களிட்டைச் சொல்லத் தேவையில்லை.

நட:- எங்களிட்டை வந்து கதை சொன்னாத்தானே ராணியின் படிப்பைக் குழப்பலாம். (சிரிக்கிறார்)

மங்:- (கவலையாக) நீங்கள் அலட்சியமாப் பேசிறியள்! எனக்கெண்டா நெஞ்சு பதறுது கதையைக் கேட்ட நேரம் தொடக்கம்...!

நட:- நீங்கள் படிப்புப் படிப்பெண்ணுறியள்..! அவள் இப்ப படிக்கிறாளோ...? இந்தப் பிராக்கிலே திரியிறாளோ...?

நட:- இஞ்சா...! அவளை ஆகவும் ஒறக்கிப்பேசாதை...! போனமுறையும் மூண்டு எஸ் எடுத்தவள். இந்தமுறை ஏதும் பிழைச்சிழை எடுத்தாள் என்றால் யூனிவேசிற்றிக்கு போயிடுவாள். இந்தக் கதையில உண்மை இருந்தாலும் பரவாயில்லை. நாங்கள் ஒரு 'றிஸ்க்' எடுப்பம் சோதனை வரையும்,

மங்:- (கவலையாக) நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும் அவளை ஒருக்காக் கேளாமல் எனக்கு மனம் சமாதானம் அடையாது...!

நட:- [கண்டிப்பாக] திரும்பவும் செல்லுறன், மோட்டு வேலை பாராதை...!

மங்:- நான் அவளை வெருட்டேல்லை, சும்மா விசாரிக்கிறன். [ராணி கையில் சில கொப்பிகளுடன் வருகிறாள்] [காரமாக] என்ன ராணி இப்ப தானே வாறாய்...?

ராணி:- [வியப்புடன்] ஏனம்மா கேக்கிறாய்...? கேள்வி ஒருமாதிரியாய் இருக்கு...? [சிரிக்கிறாள்]

மங்:- ஏழரைமணி...!

ராணி:- வழக்கமா இந்த நேரம் தானே வாறனான், அதுவும் பஸ் கிடைச்சதிலை. இல்லாட்டா எட்டரைமணி சென்றிருக்கும், [சிரிக்கிறாள்]

மங்:- பஸ் கிடைக்கேல்லை என்டது ஒரு சாட்டு,

ராணி:- [கோபமாக] அப்பென்ன, நான் வேணுமெண்டு பஸ்ஸை விட்டுவிட்டு, ரவுணிலை நிண்டுவாறனோ...?

நட,- இஞ்ச மங்கை...! இந்த பஸ்கள் ஓடுற லச்சணம் உனக்குத் தெரியும்தானே...? பேந்தேன் அவளைக் குறை சொல்லுகிறாய்...? நீ போ பிள்ளை உள்ளுக்கு. களைச்சுப் போய் வந்தனி போய் முகத்தைக் கழுவித் தண்ணியைக் குடி!

மங்:- [எரிச்சலாக] இரவிரவாக வாறாளெண்டு அயலட்டையும் பலவிதமாகக் கதைக்குது...!

ராணி:- அம்மா...! என்ரை படிப்பைபற்றித் தெரியுமோ...! அது சரி, இப்ப ஆர் வந்து என்ன சொன்னது...?

மங்:- ஆரோ கதைச்சதிலை தானே நானும் சொல்லுறன்.

ராணி:- ஆர் சொன்னது?

மங்:- அதை ஏன் உனக்கு?

நட:- நீ போ பிள்ளை உள்ளுக்கு...

ராணி:- [பிடிவாதமாக] சொன்னால்தான் போவன்!

நட:- உவ சின்னம்மாக்கா வந்து ஏதோ சொன்னவாம்...!

ராணி:- [ஏளனமாக] ஓ அவவோ... என்ன சொன்னவ...?

மங்:- ராணி...; உனக்கு அங்கை ரவுணிலை ரியூட்டரியிலை ஏதும் சினேகிதங்கள் இருக்கே...?

ராணி:- அங்கே எல்லாப் பெட்டையளோடும் சினேகிதம்தானே.

மங்:- [காரமாக] நான் பெட்டையளைக்கேக்கேல்லை..! பெடியள்...!

ராணி:- ஓ சிலர் சினேகிதம்.

மங்:- குறிப்பாக ஒருத்தரும் சினேகிதம் இல்லையே...?

ராணி:- என்னம்மா உன்ரை கேள்வி...? எனக்கு விளங்கேல்லை...!

மங்:- காதல் கீதலெண்டு...?

ராணி:- நான் அதுக்கே அங்கை போறனான். [சிரிக்கிறாள்]

மங்:- [கண்டிப்பாக] சும்மா சிரிச்சு மழுப்பாதை...! அங்கை பஸ்ராண்டிலை ஆரோ ஒரு பெடியனோடை கதைச்சுக்கொண்டு நிண்டதைத் தானே தன்ரை கண்ணாலை கண்டவவாம்...!

ராணி:- ஓ...! கூடப்படிக்கிற பொடியன்கள் பஸ்கியூவிலை நிண்டா; கதைக்கிறேல்லையோ...? ஒரு பெடியனும் பெட்டையும் கதைச்சா அது காதல்! இதுகளுக்கு வேறு ஒண்டும் தெரியாது.

மங்:- அங்கை ரியூட்டரியிலை பெடியள் பெட்டையளின்ரை நடத்தை மிச்சம் மோசமாம்...! அதுதானும் கமலாவையும் நிப்பாட்டினவ...!

ராணி:- ஓ...! அப்பிடியா கதையைப் பிரட்டுறா...? உண்மேலை கமலாவுக்குப் படிப்பு வரேல்லை. ரண்டு வரியம் படித்தும் தலேக்கை ஏறேல்லை, அதாலை மறிச்சுப்போட்டு, இப்ப பெரிய ஒழுக்கத்தை விடுறா, சின்னம்மாக்கா...!

நட:- பாத்தியோ ராணி...; நான் உதை அப்பவே கொம்மாவுக்குச் சொன்னனான், அவவுக்கு நம்பிக்கை வரேல்லை. [சிரிக்கிறார்]

மங்:- என்னவோ கவனமாக நடந்துகொள்.

(அடுத்த வாரம் முடியும்)

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your Friends in Finance
**SHABRA**
61, New Bullers Road, Co. 6

சஞ்சீவி
# சஞ்சிகை
06 - 05 - 1989 சனிக்கிழமை

நிதித்துறையில்
நாணயமிக்க நண்பன்
"ஷப்ரு"
207, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

# கம்பூச்சியப்பிரச்சினை தொடர்பான ஜகார்த்தாப் பேச்சு வெற்றி தருமா?

## அதிகாரப் பகிர்வில் இளவரசர் சிஹானூக் பிரதமர் ஹூன்சென் இழுபறி

கம்பூச்சியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் இவ்வாரம் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன.

கம்பூச்சியப் பிரதமர் ஹூன் சென் (Hun Sen) முன்னாள் பிரதமர் நொரொடெம் சிஹானூக் (Norodem Sihanouk) மற்றும் ஒரு முன்னாள் பிரதமர் சொன்சான் (SonSann) ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

66 வயதான இளவரசர் சிஹானூக் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள எதிர்ப்பு இயக்கங்களின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கெமர் ரூச் (Khmer Rouge) தற்போதைய ஜகார்த்தா மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

இளவரசர் சிஹானூக் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள எதிர்ப்பு இயக்கங்களின் கூட்டணியில் சொன்சான் தலைமையிலான இயக்கமும் முன்னாள் பிரதமர் பொல்பொட் தலைமையிலான கெமர் ரூச் இயக்கமும் அங்கம் வகிக்கின்றன.

1979 ஆம் ஆண்டு வியட்நாமினால் கம்பூச்சியாவில் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திவரும் இயக்கங்களே இந்த மூன்றும் ஆகும்.

ஹூன்சென் அரசுப்படைகளுக்கும் வியட்நாம் படைகளுக்கும் எதிரான கடந்த 10 வருடகாலப் போராட்டத்தில் 28 ஆயிரம் வியட்நாமிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் முஜாஹிதீன் கிளர்ச்சியாளர்களினால் கொல்லப்பட்ட சோவியத் வீரர் எண்ணிக்கையை விட இது அதிகம். இது தவிர கம்பூச்சியாவில் படைகளை வைத்திருப்பதால் வியட்நாம் அரசு பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. அத்துடன் இராஜியத் துறையில் பல நாடுகளினால் ஒதுக்கப்படும் நிலைமையை இந்தப் படையெடுப்பு வியட்நாமுக்கு ஏற்படுத்தி இருந்தது.

### 2 லட்சம் வீரர்கள்

1979 ஆம் ஆண்டு கம்பூச்சியாவுக்குள் வியட்நாம் 1 லட்சத்து 30 ஆயிரம் முதல் 2 லட்சம் படை வீரர்களை வைத்திருந்தது. தற்போது 50 ஆயிரம் வீரர்கள் மட்டுமே இருந்து வருகிறார்கள்.

மிகுதிப்படைகளையும் இந்த வருடம் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வாபஸ் பெறப் போவதாக வியட்நாம் கடந்த 5 ஆம் திகதி அறிவித்திருக்கிறது.

படை வாபஸுக்கு முன் இளவரசர் சிஹானூக் தலைமையிலான எதிர்ப்பு இயக்கக் கூட்டணிக்கும் கம்பூச்சியாவில் ஆட்சியில் இருந்து வரும் ஹூன்சென் அரசுக்கும் இடையில் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டி உள்ளன.

இவற்றுக்காகவே தற்போது ஜகார்த்தாவில் மாநாடு ஆரம்பமாகி உள்ளது.

ஏற்கெனவே இளவரசர் சிஹானூக்கும் தற்போதைய பிரதமர் ஹூன் சென்னும் (38வயது) பிரான்ஸில் மூன்று தடவைகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். பின்பு கடந்த மார்ச் மாதம் கம்பூச்சியப் பிரச்சினை தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றும் ஜகார்த்தாவில் கூட்டப்பட்டது. ஆனால் இந்த நான்கும் உருப்படியான பலனை அளிக்காத நிலையில் இந்த வாரம் மீண்டும் சந்திப்பு நடைபெறுகிறது.

ஆப்கானிஸ்தான், நிக்கரகுவா, அங்கோலா, நமீபியா வரிசையில் கம்பூச்சியா தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 1990க்கு முதல் வியட்நாம் படைகள் கம்பூச்சியாவில் இருந்து வாபஸ் பெற்றுவிடவேண்டும்.

இடைக்கால அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டு சுமுக நிலைமை உருவான பின்பு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

### அதிகாரப் பகிர்வு

தற்போது ஜகார்த்தாவில் ஆரம்பமாகியுள்ள மாநாட்டில் அதிகாரப் பகிர்வே முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது.

## உலக உலா
ஏன்.பி.சீலன்

வியட்நாமியப் படை வாபஸுக்குப் பின்னர் அமைக்கப்படும் கூட்டரசாங்கத்தில் கெமர்ரூச் அங்கம்வகிப்பதை பிரதமர் ஹூன்சென் எதிர்த்து வருகிறார்.

1975 ஆம் ஆண்டு இந்தோசீனாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸானபோது தென் வியட்நாமில் நுயன் வான் தியூ அரசாங்கம் கவிழ்ந்தது போன்று கம்பூச்சியாவிலும் அமெரிக்க ஆதரவு லொன் நொல் அரசு கவிழ்ந்தது. அப்பொழுது ஆட்சியைப் பிடித்தவர்கள்தான் பொல் பொட் தலைமையிலான கெமர்ரூச் குழுவினர்.

1979 ஆம் ஆண்டு வியட்நாமியப் படைகளின் உதவியுடன் கம்பூச்சிய மக்கள் குடியரசு என்ற பெயரில் (People Republic of Kampuchea) கம்பூச்சியாவில் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை கெமர் ரூச் ஆட்சி நீடித்தது.

கெமர் ரூச் ஆட்சியாளர்கள் தமது நான்கு வருடகால ஆட்சியில் சுமார் 10 லட்சம் மக்களைக்கொன்று குவித்தது மூலம் வியட்நாமியப் படை எடுப்புக்கு வழிகோலி இருந்தனர்.

கம்பூச்சியாவில் கெமர் ரூச் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பொல் பொட் இன்னும் தலைமறைவாகி இருக்கிறார்.

### சாதகமான சூழ்நிலை

தற்போது நடைபெறும் ஜகார்த்தா மாநாடு வெற்றி பெறக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் முன் எப்போதும் இல்லாத விதத்தில் உருவாகி இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வியட்நாமிய படைவாபஸை கண்காணிக்க ஐ. நா. படைகள் அமர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தாம் கைவிட்டு விட்டதாக இளவரசர் சிஹானூக் இவ் வாரம் அறிவித்திருந்தார்.

ஐ. நா. கண்காணிப்புக்குழு வரவழைக்கப்படுவதற்கு வியட்நாம் தலைவர் நுயன் வான்லின் (Nguyen Van Linh) கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

வியட்நாமிய படை எடுப்புக்குப்பின்னர் வைக்கப்பட்ட கம்பூச்சிய மக்கள் குடியரசு என்ற பெயரை பழையபடி 'கம்போடியா' என்று மாற்றுவதற்குப் பிரதமர் ஹூன் சென் இணங்கி உள்ளார்.

இப்பிரச்சினைகளைத் தீர்த்தாலும் அதிகாரப் பகிர்வில் கெமர்ரூச்சே முக்கிய பிரச்சினையாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

பிரதமர் ஹூன் சென்னின் அரசுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கங்களில் கெமர் ரூச்சே பலம் வாய்ந்த இயக்கமாகக் கருதப்படுகிறது.

35 ஆயிரம் பேர் வரை இதன் ஆயுதப்படையில் இருந்து வருகின்றனர். கெமர் ரூச்சுக்கான முக்கிய ஆயுத சப்ளை நாடு சீனா.

வியட்: படைகள் கம்பூச்சியாவில் இருந்து வாபஸ் பெறும் இறுதிக் கட்டத்தில் எதிர்ப்பு இயக்கங்களுக்கான ஆயுத சப்ளையை நிறுத்துவதாக சம்பந்தப்பட்ட நாடுகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் ஹூன் சென் வலியுறுத்தி வருகிறார்.

### நூற்றாண்டு கால உறவு

கம்பூச்சியாவும் வியட்நாமும் பல நூற்றாண்டு காலமாக நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்து வந்தன.

1970 ஆம் ஆண்டு இளவரசர் சினூஹாக் பதவி நீக்கம் செய்யப்பட்டு அமெரிக்க ஆதரவு லொன்நொல் அரசு பதவி ஏற்கும் வரை இந்த நிலைமை இருந்து வந்தது.

வியட்நாமிய படைகளை வெளியேற்றிக் கம்பூச்சியப் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் கம்பூச்சியா வியட்நாமின் ஒரு காலனித்துவ நாடாக மாற்றப்பட்டு விடும் என்று இளவரசர் சிஹானூக் அஞ்சுகிறார்.

வியட்நாமிய படை எடுப்புக்குப் பின்னர் சுமார் ஏழு லட்சம் வியட்நாமியர்கள் வியட்நாமில் இருந்து கம்பூச்சியாவுக்குள் குடியேறி உள்ளனர். 70 லட்சம் பேரைக் கொண்ட கம்பூச்சிய சனத்தொகையில் இது ஒரு கணிசமான எண்ணிக்கையாகக் கருதப்படுகிறது. கம்பூச்சியாவின் பொருளாதாரத் துறையில் இவர்கள் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

வியட்நாமிய படைகள் வாபஸ் பெறும்போது தமது வெளியேற்றமும் தவிர்க்க முடியாததாகி விடும் என்று பெரும்பாலான வியட்நாமியர்கள் கருதுகிறார்கள்.

1970 ஆம் ஆண்டு இளவரசர் ஸ்ரீஹானூக் பதவி நீக்கம் செய்யப்படும்வரை கம்பூச்சியாவில் நான்கு லட்சம் வியட்நாமியர்வரை இருந்தனர்.

1970 இல் கம்பூச்சியாவில் இனக்கலவரம் ஏற்பட்ட போது இவர்களில் பலர் வியட்நாமுக்குத் திரும்பிவிட்டனர்,

எஞ்சி இருந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் கெமர்ரூச்சின் பொல்பொட் ஆட்சியின்போது படுகொலைசெய்யப்பட்டனர்.

வியட்நாமிய படை எடுப்புடன் மீண்டும்கம்பூச்சியாவில் குடியேறிய இவர்கள் கெமர்ரூச் ஆட்சி மீண்டும் ஏற்படும் பட்சத்தில் படுகொலை செய்யப்படலாம் என்று அஞ்சுகிறார்கள்.

இடைக்கால அரசில் கெமர்ரூச் பங்குபற்றுவதற்கு வியட்நாம் பிரதமர் நுயன்வான்லின்னும் கம்பூச்சியப் பிரதமர் ஹூன் சென்னும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு இதுவும் ஒருகாரணமாகும்.

தற்போதைய நிலையில் இளவரசர் சிஹானூக் தலைமையிலான எதிர்ப்புக் குழுக்களின் கூட்டணிக்கும் ஹூன்சென் தலைமையிலான கம்பூச்சிய அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்படுமானால் வியட்நாம் படை வாபஸில் தாமதம் ஏற்படலாம். அல்லது ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை வாபஸ் பெற்ற சமயம் சோவியத்யூனியன் செய்தது போன்று கிளர்ச்சியாளர்களுக்கு ஈடுகொடுக்கத்தக்க விதத்தில் ஹூன்சென் அரசின் ஆயுதப்பலத்தை வியட்நாம் அதிகரிக்கலாம்.

சோவியத் படைகள் வாபஸ்பெற்றவுடனேயே ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா அரசு கவிழ்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பாகிஸ்தான் எல்லையில் இருந்து 50 மைல் தூரத்தில் உள்ள ஜலலாபாத் நகரைக்கூட தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இயலாத நிலையில் முஜாஹிதீன் கிளர்ச்சியாளர்கள் இருந்து வருகின்றனர்.

கம்பூச்சிய பிரச்சினையில் அரசியல்தீர்வு காண்பதற்கு தற்போதைய ஜகார்த்தாப் பேச்சுக்கள் கடைசிச் சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தை சகலதரப்பினரும் பயன்படுத்திக்கொள்ளும் அறிகுறிகள் தற்போதைய ஜகார்த்தா பேச்சுவார்த்தைகளில் தென்படுகின்றன. ★

## ஜப்பானியப் பெண்கள்

இன்று உலகிலேயே அதிக நாள் வாழும் பெண்கள் யார் தெரியுமா?

ஜப்பானியப் பெண்கள் தான்.

ஜப்பானில் முதல் முறையாகப் பெண்களின் ஆயுள் காலம் இப்போது 81 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானியப் பெண்களுக்கு அடுத்தபடியாக ஐஸ்லாந்து, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்கள் அதிக நாள் வாழ்வதில் முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பிடிக்கின்றனர்.

# பெனின்சுலா கிண்ணத்தை சுவீகரித்த கொக்குவில் அணி

பெனின்சுலா குறூப் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட 30ஓவர்கள்கொண்ட நொக் அவுட் முறையிலான கிரிக்கெட்போட்டி அண்மையில் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ் நகரின் பல பாகங்களிலுமுள்ள 12 கழகங்கள் பங்குபற்றின.

'ஏ' பிரிவில் ஜொனியன் [ஏ] வி. க, சென்றலைட் (சொக்) வி. க, ஷப்ரு வி. க, ஜொலிஸ்டார் வி. க, ஸ்டான்லி வி. க, கிறுஸ்கொப்பர்ஸ் வி. க ஆகிய கழகங்களும்.

'பீ' பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க, சென்றலைட் (நீல) வி. க, மல்லாகம் றெட் ஸ்டார் வி. க, ஜொனியன் [பீ] வி.க, ஓல்ட் பற்றீசியன்ஸ் வி. க, நொதேர்ண் வி.க ஆகிய கழகங்களும் பங்குபற்றின.

சென்றலைட் (சொக்) வி. க, ஜொனியன் வி. க ஆகியவற்றுடன் வெற்றியீட்டியதன் மூலம் ஷப்ரு விளையாட்டுக் கழகமும் ஸ்டான்லி வி. க, கிறுஸ்கொப்பர்ஸ் வி. க ஆகியவற்றுடன் வெற்றிபெற்றதன் மூலம் ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகமும் 'ஏ' பிரிவில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

சென்றலைட் (நீல) விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் கொக்குவில் சனசமூகநிலைய விளையாட்டுக் கழகமும் ஓல்ட் பற்றீசியன்ஸ் வி. க, நொதேர்ண் வி. க ஆகியவற்றுடன் வெற்றி பெற்றதன்மூலம் ஜொனியன் [பீ] விளையாட்டுக் கழகமும் 'பீ' பிரிவில் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

ஜொலிஸ்டார் வி. க, ஜொனியன் [பீ] வி. க ஆகியவற்றுடனான போட்டிகளில் வெற்றிபெற்றதன் மூலம் ஷப்ரு வி. கழகமும் கொக்குவில் சனசமூக நிலைய வி. கழகமும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

விறுவிறுப்பான போட்டிகளை எதிர்பார்த்துக் காத்திருந்த ரசிகர்களுக்கு இறுதிப் போட்டி வரையிலான அனைத்துப் போட்டிகளுமே பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

40 ஓவர்கள் கொண்டதாக அமைந்த இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட ஷப்ரு, கொக்குவில் ஆகிய இரு கழகங்களும்மிகவும் பலம்பொருந்தியவையாகவும் இறுதிவரையும் அடித்து ஆடக்கூடிய வீரர்களைக் கொண்டனவாகவும் காணப்பட்டன.

சென்ற முதலாம் திகதி அன்று நடைபெற்ற இறுதிப் போட்டிக்கு பெருமளவிலான ரசிகர்கள் வருகை தந்திருந்தனர்.

விறுவிறுப்பாக ஆரம்பித்த இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஷப்ரு அணி, 38 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 207 ஓட்டங்களைப்பெற்றது. அபாரமாக ஆடிய ப. பிரபாநந்தன் இப் போட்டித் தொடரிற்கான

### விளையாட்டுத்துறை

ஒரேயொரு சதமாகிய 104 ஓட்டங்களைப் பெற்றார்,

பின்னர் ஆடிய கொக்குவில் அணி இறுதி ஓவரின் இரண்டாவது பந்துவீச்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து குறிப்பிட்ட இலக்கை எய்தியது.

4 ஆவது விக்கெட்டுக்காக ந.பாலகுமார், எஸ்.கோகுலன்

### - மணிவண்ணன் -

ஆகியோர் இணைந்து பெற்ற 80 ஓட்டங்கள் கொக்குவில் அணியின் வெற்றிக்கு வழிகோலியது.

அபாரமாக ஆடிய பாலகுமார் 79 ஓட்டங்களைப் பெற்றார். தமது 37 ஆவது ஓவரில் 2விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்த கொக்குவில் அணியினர் இறுதி ஓவரில் கைவசமிருந்த ஒரு விக்கெட்டுடன் 4 ஓட்டங்களைப் பெற வேண்டி நேரிட்டது.

எனினும் இறுதி ஓவரின் இரண்டாவது பந்தில் ஓர் நான்கைப் பெற்றதன்மூலம் பெனின்சுலாக் கிண்ணத்தைக் கொக்குவில் அணி கைப்பற்றியது.

இப்போட்டியின் சிறந்த வீரராக ஷப்ரு அணியைச் சேர்ந்த பீ. பிரபாநந்தனும்—

சிறந்த பந்து வீச்சாளராக ஜொனியன் [பீ] அணியைச் சேர்ந்த அகிலனும்—

சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த எஸ். திலீபனும்—

சிறந்த பந்து தடுப்பாளராக ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த க. இளங்கோவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(எ - 6)

## சின்னம்

அவளிடம்
அந்த அந்தரங்க
எண்ணத்தை நான்
தெரிவித்த போது,
அவள் கன்னம் சிவந்தது
மட்டுமன்றி,
தன் கண்களைத் தாழ்த்தி
மண் பார்த்தும்
கொண்டாள்
வெட்கப்படுகிறாள்
என நினைத்தேன்
அது
என் கன்னத்தில்
சின்னம் பதித்த
சில வினாடிகளுக்குள்
விளங்கியது
அவளது புதுச்செருப்பைப்
பார்த்தாளென்று!

'துதிகாந்தன்'

## முட்டாளின் வாய்

நான்
உனைத் தொட்டதே
ஒரு வேடிக்கையாய்!
ஏன் எனைத்
தொடர்கிறாய் தினமும்
வாடிக்கையாய்!
பலர் எனைத்
தூற்றுகிறார்
மிகக் கேளிக்கையாய்!
உனை நான்
எப்படி விலக்க?
நீ என்னுள்
பீடிக்கையாய்
ஏ சிகரட்டே!
நீ
ஒரு முனையில் தீ
மறு முனையில்
முட்டாளின் வாய்!

மானியூர் ரட்ணேஷ்

## யாழ் நகரில் இவ்வாரம்

### உதைபந்தாட்டம்

அப்போதிக்கரீஸ் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில்

**06 - 05 - 89**

பி. ப. 3. 15 சென் மேரிஸ் வி. க, எதிர் சென். அன்ரனீஸ் வி. க.

பி. ப. 4.30 சென். நீக்கிலஸ் வி. க. எதிர் கிறீன்பீல்ட் வி.க.

**07 - 05 - 89**

பி. ப. 3. 15 கிறீன்பீல்ட் வி. க. எதிர் யூத் காமல் வி.க,

பி. ப. 4.30 பாடும் மீன் வி. க. எதிர் அரியாலை வி.க.

**12 - 05 - 89**

பி. ப. 3.15 பாடும் மீன் [நீலம்] எதிர் சென். அன்ரனீஸ்.

பி. ப. 4.30 பாடும் மீன் எதிர் சென். அன்ரனீஸ்.

**போட்டிகள் நடைபெறும் இடம்:**

★ பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க. மைதானம்

## சொற்சிலம்பம் இல: 98

### பரிசு பெறுபவர்கள் விபரம்

**முதலாவது பரிசு பெறுபவர்:**
திருமதி. கி. செ. நவரத்தினம் ''இராணி மனை''
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

**இரண்டாவது பரிசு பெறுபவர்:**
செல்வன் மயூரன் திருநாவுக்கரசு
19, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**மூன்றாவது பரிசு பெறுபவர்:**
செல்வன் எம். எஸ். பிரகாஷ், கைதடி மேற்கு,
கைதடி.

**சொற்சிலம்பம் இல: 98 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்:**
1. சுக்கிலபட்சம் 6. ஓரி 7. காபந்து 9. பாகை 10. தலைவிதி 13. ஆம் 14. காது 15. திண் 16. அதிகரி 18. கடகம் 19. பகைமை 21. திகை 22. புடம்.

**மேலிருந்து கீழ்:**
1. சுக்கான் 2. கிரந்தம் 3. படை 4. சரிகை 5. ஓம் 8. துலை 9. பாதி 11. விகுதி 12. மது 13. ஆண்டகை 14. காரிகை 15. திகதி 16. அம்பு 17. கபம் 20. மைனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org